DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker
Homelife/Future Realty Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1301
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday March 12, 2021

# தமிழினம் மீதான போர்க்குற்றங்களுக்காக இலங்கை அரசை தண்டிக்க எடுக்கும் முயற்சிகளை தனது அரசு ஆதரிக்கும் என்கிறார் ஒன்றாரியோ முதல்வர்



"இலங்கையில் 2009ம் ஆண்டும் அதற்கு முன்னரும் பின்னரும், இலங்கை வாழ் தமிழினத்தின் மீது இலங்கை அரசு நிகழ்த்திய போர்க்குற்றங்களுக்கு உரிய குற்றவாளியான இலங்கை அரசை தண்டிப்பதற்கு கனடாவிலும் குறிப்பாக ஒன்றாரியோவிலும் எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் எனது அரசு ஆதரவு வழங்கும். எமது அரசாங்கத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக உள்ள விஜேய் தணிகாசலம் அவர்கள் இந்த விடயம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகளுக்கும் தமிழ் மக்கள் எடுக்கும் முயற்சிகளுக்கும் எமது அரசு தனது ஆதரவை வழங்கும்"




இவ்வாறு தெரிவித்தார் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள்.

(உள்ளே 13ம் பக்கத்தில் செய்தியின் தொடர்ச்சி)

# இலங்கையில் கொரோனாவால் இறந்தவர்களின் தொகை 500 ஐயும் தாண்டி அபாயகரமான மண்டலத்தை நோககி நகர்ந்து செல்கிறதா?

இலங்கையில் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை கடந்த சில வாரங்களாக அதிகரித்து வருகின்றது. அங்கு மரணித்தவர்களின் எண்ணிக்கை 500 ஐயும் தாண்டி அபாயகரமான மண்டலத்தை நோககி நகர்ந்து செல்லுகின்றது. சிலவேளைகளில் இந்த எண்ணிக்கை ஓரிரு வாரங்களில் ஆயிரமாக அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது என்றும் வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.
குறிப்பாக வட மாகாணத்தில் பணியாற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பலர் மாகாணத்தில் தொற்று எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், அதனால் நேற்றை சிவராத்திரி விழாவின் பொது எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறும் மக்களை வேண்டிக் கொண்டனர்.



(உள்ளே 9ம் பக்கத்தில் கட்டுரையின் தொடர்ச்சி)

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404


THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
Where life begins...
வீடு வாங்க
விற்க அல்லது
அது தொடர்பான
விடயங்களை அறியவும்,
இலவச ஆலோசனைகளை
பெற்றுக்கொள்ளவும்
முன்னணி நிறுவனமான
The Guardian
Home Realty
நிறுவனத்தை
நாடுங்கள்
REAL ESTATE முகவராக விரும்பும் அன்பர்களே
Join our team!
Discover how our results producing motivation, coaching, marketing, and technical support will maximize your income as a
sales professional.
Email us at info@theguardianhomes.com
for more details.
80 Nashdene Rd, unit# F119 Scarborough, ON M1V 5E4
416 090 6565 | www.theguardianhomes.com

உதயன் கதிரோட்டம்

# நம்பியிருந்தவர்கள் மோசம் செய்துவிட, நம்பிக்கைகளை இழக்காமல் போராட்டங்களை நடத்தும் 'நம்மவர்கள்' வாழ்க!

இலங்கை அரசு அரங்கேற்றிய மிகவும் மோசமான இனப்படுகொலை இடம்பெற்று 11 வருடங்களை கடந்தும் போர்க்குற்றம், சர்வதேச விசாரணை, உள்ளக விசாரணை, ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகள் போன்ற *சொற்கள்* இன்னமும் ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல ஈழத்தமிழ் அரசியல்வாதிகளாலும் தமிழ்நாட்டின் மக்களாலும், அங்குள்ள அரசியல்வாதிகளாலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

எத்தனையோ ஆண்டுகளாக இந்தச் சொற்களை உச்சரித்து, உச்சரித்து அரசியல் செய்த தமிழ் அரசியல்வாதிகள் ஓய்ந்து போய்விட்டார்களா என்று கேள்வி எழுப்புகின்ற அளவிற்கு அவர்களின் குரல்களைக் காணவில்லை. அதற்கு காரணங்கள் பல உண்டு.

எமது அரசியல்வாதிகளில் பலருக்கு ஐக்கிய நாடுகள் சபையை எவ்வாறு பயன்படுத்தலாம், அல்லது அவர்கள் அங்கு ஆற்றிய உரைகளை யார் கேட்கின்றார்கள் என்பதெல்லாம் தெரியாமல் ஒரு உல்லாசப் பயணம் போன்று அங்கு சென்று வந்தார்கள். இத்தனை வருடத்திற்குள் எத்தனையோ தடவைகள் "நான் ஜெனிவா போகின்றேன்" என்று தமிழ் மக்களிடம் சொல்லி நம்பிக்கைகளை ஏற்படுத்திவிட்டு, மறுபக்கத்தில் ஆட்சியாளர்களிடம் சென்று "நீங்கள் அஞ்சவேண்டாம், நாங்கள் அங்கே போய் பேசுவதால் உங்களுக்கு ஒன்றும் ஆபத்து வந்துவிடாது" என்று சமாதானம் கூறிய படி இத்தனை ஆண்டுகளும் கடந்திருக்க வேண்டும்.

அண்மையில் பிரான்ஸ் நாட்டில் எமது ஈழத்தமிழ் மக்கள் நலன்களுக்காக பல ஆண்டுகளாக குரல் கொடுத்துவரும் பொஸ்கோ என்னும் அன்பர் வெளிப்படையாகவே ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்களில் பல விடயங்களை குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றார். அன்பர் பொஸ்கோ அவர்கள் ஒரு தீவிரமான கருத்துப் போராளி என்பதை புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பலருக்குத் தெரியும், ஆனால் அரசியல் பேசி பொருள் சம்பாதிக்க விரும்புகின்றவர்களுக்கு இவர் 'வேண்டாதவர்' மனித் உரிமைகள் கவுன்சிலின் பல உயர் அதிகாரிகள் கூட இவர் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு 'ஆமாம்' என்று ஆதரிக்கின்ற தன்மைதான் அங்கு காணப்படுகின்றது.

இவ்வாறான பொஸ்கோ அவர்கள் எமது தமிழ் அரசியல்வாதிகள் பற்றி கீழ்க்கண்டவாறு தெரிவிக்கின்றார்

"இத்தனை நாட்களும் ஐக்கிய நாடுகள் சபைக்குச் செனறு வந்த தமிழ் அரசியல்வாதிகளுக்கு தாங்கள் என்ன பேசுகின்றோம். அதனால் என்ன பலன் கிடைக்கும் என்றெல்லாம் அறிந்திருக்கவில்லை" என்று தெரிவித்திருக்கின்றார். அத்துடன் சர்வதேச நீதி மன்றத்திற்கு இலங்கை அரசை கொண்டு செல்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை தேவையில்லை" என்று கூறியிருக்கின்றார்.

உயர்நீதி மன்றத்தின் நீதியரசராக இருந்த எமது முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்களுக்கு கூட இந்த விடயங்களில் தெளிவில்லை என்று கூறியிருக்கின்றார்.

இவ்வாறாக தமிழ் பேசும் அரசியல்வாதிகள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது. உலகின் பல நாடுகளிலும், மிகுந்த அச்சுறுத்தல் நிறைந்த இலங்கையில் மக்கள் முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர் அமர்ந்திருக்கும் பந்தல்களின் கீழே ஒரு அரசியல்வாதிகளையும் காண முடியவில்லை.

இன்னொரு பக்கத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பலர் எத்தனையோ ஆண்டுகளாக வீதியில் நின்று போராடுகின்றார்கள். அவர்களை உதாசீனம் செய்யும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு பல தடவைகள் செருப்பு அபிசேகம் செய்ய அந்த உறவுகள் காத்திருந்தார்கள். ஆனால் அவர்களிடத்தில் விசாரணைக்காக என்று கூறியபடி செல்லும் காவல்துறையினர் "உங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் வருகின்றதா? என்று மிரட்டுகின்ற நிலை அங்கு இருந்தாலும், அவர்கள் எவ்வித தளர்ச்சியுமின்றி போராட்டத்தை நடத்துகின்றார்கள். ஆனால் வாக்குக்காக காத்திருக்கும் அரசியல்வாதிகள் 'தலைமறைவு' வாழ்க்கை வாழ்கின்றார்கள். 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' என்ற பலமிக்க பேரணியை நடத்திய பல சாத்வீகப் போராளிகளே தொடச்சியாக இவ்வாறான உண்ணாவிரதப் போராட்டங்களுக்கும் வழி சமைத்துக் கொடுத்துள்ளார்கள் என்பது புலனாகின்றது.

ஆனால் பாராளுமன்ற அரசியலில் இறங்கி, தாங்கள் எதிர்பார்த்திராத சொத்துக்களுக்கும் சுகபோகங்களுக்கும் அதிபதிகள் ஆகிவிட்ட சில தமிழ் பேசும் அரசியல்வாதிகள் "வடக்கு எனக்கு, கிழக்கு உனக்கு" என்று தங்கள் எண்ணப்படி அரசியல் செய்துவருவதைக் காணமுடிகின்றது. அது ஒரு சக அரசியல்வாதியின் குரலாக தங்கள் விருப்பத்தை மக்களுக்கு தெரிவிப்பது போன்று அறிவிக்கும் தந்திரம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு விளங்காமல் இல்லை.

ஆமாம் எமது மக்கள் நம்பியிருந்த தமிழ் பேசும் அரசியல்வாதிகள் 'மோசம்' செய்து விட்டு மௌனமாக தங்கள் அடுத்த 'நகர்வு'களைக் கவனிக்க, பாதிக்கப்பட்ட மக்கள் போராடத் தொடங்கிவிட்டார்கள். அதுவும் உலகின் அனைத்து நாடுகளிலும்.. பொறுத்திருந்து பார்ப்போம். மோசம் செய்த அரசியல்வாதிகள் கோசம் போடுவதற்கு வருகின்றார்களா என்று?

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# இந்தியாவிற்கும் இலங்கைக்குமான நட்பில் அபிவிருத்தி முக்கிய இடமாக உள்ளது

## – இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



இந்தியாவிற்கும் இலங்கைக்குமான நட்பில் அபிவிருத்தி முக்கியமான இடமாக உள்ளது. எமது திட்டங்கள் நேரடியாக மக்களை சென்றடைந்துள்ளது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே தெரிவித்தார்.

மடு தேவாலய பகுதிகளில் யாத்திரைக்காக வருகை தரும் யாத்திரிகர்களுக்கான தங்குமிட விடுதி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (11) மாலை சுற்றுலா துறை அமைச்சின் ஏற்பாட்டில் மடு பிரதேசத்தில் இடம் பெற்றது. இந்திய அரசின் நன்கொடையின் கீழ் 300 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 144 வீடுகளை கொண்ட அடுக்கு மாடி குடியிருப்பு அமைக்க மேற்படி அடிக்கள் நாட்டி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்த பின் உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

உலகமே கோவிட்-19 தொற்றினால் முடங்கியுள்ள நிலையில் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் பாரிய முயற்சிகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றறோம். இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை மிக நெருக்கமாக பேணி வருகின்றோம்.வீட்டுத்திட்டங்களை வழங்கியதுடன்,சுகாதார துறைக்கும் பங்களிப்பை மேற்கொண்டுள்ளோம்.

உதாரணமாக சுவசெரிய அம்புலன்ஸ் வண்டிகளை இலங்கைக்கு வழங்கி உள்ளோம். இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளமை தொடர்பில் இந்திய அரசாங்கம் மகிழ்ச்சி அடைகின்றது என அவர் தெரிவித்தார்.

இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சின் ஒத்துழைப்புடன் செயல் படுத்தப்பட்ட நிலைமாற்று வீடமைப்புத்திட்டத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க , பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன்,காதர் மஸ்தான், கே.திலீபன்,இலங்கைக்கான இந்திய துணைதூதுவர் எஸ்.பாலசந்திரன் , உட்பட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

*(மன்னார் நிருபர்) (12-03-2021)*

அறை வாடகைக்கு உண்டு

**Room for Rent - Kennedy / 401**

கெனடி வீதியல் அமைந்திருக்கும் 9050ல் **2 bedroom apartment** வாடகைக்குண்டு.
**Close to Highland Farms, Hwy 401, school, and bus stop.** அனைத்து வசதிகளுடன் உண்டு.
தொடர்புகளுக்கு:
**647-299-4238**
**905-472-4322**

LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.
Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
**RANJAN: (416) 464-2415**

BASEMENT for RENT

2 bedroom basement with separate entrance மற்றும் எல்லா வித வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.
குடும்பம் விரும்பதக்கது.
**Call: (416) 821-2181**

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
**VARUNAN: (416) 894-6244**

இலங்கை செய்திகள்

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்த உணவு தவிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு பெருகிறது



யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட போராட்டத்திற்கு நாலா பக்கங்களிலிருந்தும் ஆதரவு பெருகி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த வாரம் ஆரம்பமான இந்த போராட்டத்தை பொதுமக்களும் சமூகத் தலைவர்களும் நேரடியாகச் சென்று தங்கள் ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர் இவ்வாறு ஆதரவு தெரிவித்தவர்களுள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்பியும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் "இந்த போராட்டம் வலுப்பெற வேண்டும்" என்று அழைப்பு விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான சி. வி. விக்னேஸ்வரன். அவரும் போராட்டம் நடைபெறும் இடத்திற்குச் சென்று உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர் பிரதிநிதிகளையும் சந்தித்தார்.

நல்லூரில் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்படும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் 8-வது நாளான இன்றைய தினம் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு அனைத்து தரப்புக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார் இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பதப்படுத்த வேண்டும் என்பதனை தான் வலியுறுத்துவதாகவும் அதற்கான அழுத்தத்தினை மக்கள் ஒழுங்கு செய்யும் சிறு சிறு போராட்டங்கள் ஊடாக அழுத்தத்தினை பிரயோகிக்க முடியும் என்று தான் நம்புவதாகவும் இந்தப் போராட்டம் மேலும் மேலும் வலுப்பெற்று சர்வதேச விசாரணையை சர்வதேச அரங்கில் வலியுறுத்த வேண்டும் என்றும் தெரிவித்து அங்கிருந்து விடைபெற்றுச் சென்றார்.

# கிழக்கு மாகாணத்திற்கு சாணக்கியனும் வடக்கு மாகாணத்திற்கு மாவை சேனாதிராஜாவும் முதல்வர்களாக வருவதற்கு "ஆசை"ப் படுகின்றார்களாம்



ஆசைப்படுவதற்கு யாருக்குமே சுந்திரம் உண்டு. ஆனால் இந்த மாவை சேனாதிராஜவிற்கு ஏன் இந்த ஆசை என்கிறார்கள் வடஇலங்கையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களித்த மக்களில் பலர்.

இது இவ்வாறிக்க, கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் களமிறக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் அண்மையில் (27) வவுனியாவில் இடம்பெற்றது. இதன்போதே பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

இதே போன்று, தமிழ் தேசிய கூட்டமைப்பின் வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜாவும், கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக இரா. சாணக்கியனும் களமிறக்கப்பட வேண்டுமெனபாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் இதன் போது குறிப்பிட்டுள்ளார். வடமாகாண சபை தேர்தலில் மாவை சேனாதிராசா களமிறக்கப்பட வேண்டும். கடந்த மாகாணசபை தேர்தலில் அவர் தனது இடத்தை விக்னேஸ்வரனுக்கு விட்டுக் கொடுத்தார். இம்முறை அப்படியான முடிவை எடுக்கக்கூடாது. அவரது தலைமையில் இளைஞர்களை களமிறக்க வேண்டும்.



கிழக்கு மாகாண சபை தேர்தலில் இரா. சாணக்கியனை முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்க வேண்டும். முஸ்லிம் மக்களும் இவரை ஆதரிப்பர். எனவே, இவரை களமிறக்கி இலகுவாக வெற்றியடையலாமெனவும் சிறிதரன் குறிப்பிட்டுள்ளார். எனினும், இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை எனவும் தெரியவருகின்றது.

# இலங்கையில் கொரோனா மரணங்கள் 500 ஆக உயர்ந்தன

இலங்கையில் கொவிட்-19 தொற்று தொடர்பான மேலும் 4 மரணங்கள் பதிவாகியுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தற்போது நேற்று அறிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்கனவே 499 கொரோனா மரணங்கள் பதிவானதாக அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 2 மரணங்களுடன், இலங்கையில் இதுவரை 501 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு அறிவிக்கப்பட்டவர்களில், ஒருவர் இன்றும் ஏனைய மூவரும் நேற்றும் மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

494ஆவது மரணம்: தொடங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த, 83 வயதான ஆண் ஒருவர், மத்துகமை மாவட்ட வைத்தியசாலையில், கொவிட் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டு, முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார். அவரது மரணம் நேற்று (05) நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், குருதி விஷமடைவு மற்றும் கொவிட் நியூமோனியா நிலை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

495ஆவது மரணம்: கொழும்பு 09 (தெமட்டகொடை) பிரதேசத்தைச் சேர்ந்த, ... வயதான பெண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொவிட்-19 தொற்றாளராக அடையாளம் காணப்பட்டு, முல்லேரியா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு மரணமடைந்துள்ளார். அவரது மரணம் நேற்று (05) நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 நியூமோனியா நிலை, புற்றுநோய் நிலை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

496ஆவது மரணம்: கொலன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த, 65 வயதான ஆண் ஒருவர், கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் இருந்து, ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு மரணமடைந்துள்ளார். அவரது மரணம் இன்று (05) நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 நியூமோனியா நிலை, உயர் இரத்த அழுத்தம், உக்கிர நீரிழிவு மற்றும் இருதய நோய் நிலை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

497ஆவது மரணம்: பத்தரமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த, 77 வயதான பெண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொவிட்-19 தொற்றாளராக அடையாளம் காணப்பட்டு, ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு, மரணமடைந்துள்ளார். அவரது மரணம் இன்று (05) நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், உக்கிர சிறுநீரக தொற்று, உயர் இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய் நிலை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

500வது மரணம் பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை.



# இலங்கைப் பொலிசாரை விரட்டி அனுப்பிய பொத்துவில் – பொலிகண்டி புகழ் வேலன் சுவாமிகள்

தன்னைச் சந்திக்கவென, எந்தவொரு முன்னறிவுப்புமின்றி வாக்குமூலம் பெற தனது இருப்பிடத்திற்கு சென்ற இலங்கை பொலசாரை திருப்பியனுப்பியுள்ளார் பொத்துவில் - பொலிகண்டி புகழ் வேலன் சுவாமிகள்.

அவர்கள் சில வாரங்களுக்கு முன்னர் நன்கு திட்டமிட்ட வண்ணம், வடக்கு கிழக்கு நீதிமன்றங்களின் தடையுத்தரவை மீறியபடி வேலன் சுவாமிகள் போன்றவர்களின் தலைமையில் மக்கள் பேரெழுச்சியுடன் பொத்துவில் தொடக்கம் வடக்கின் பொளிகண்டி வரையும் மேற்படி போராட்டம் இடம்பெற்றது தொடர்பில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் சமூகப் பிரதிநிதிகள் என பலரிடம் இலங்கைப் பொலிசார் வாக்கு மூலங்களை பதிவு செய்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள வேலன் சுவாமிகளிடம் வாக்கு மூலம் பெற இலங்கை பொலிசார் திடீரென சென்றனர்.

அவர்களை திடீரெனக் கண்ட வேலன் சுவாமிகள்ம் போதிய முன்னறிவிப்பின்மை மற்றும் தனது சட்டத்தரணிகளது ஆலோசனையினை பெறவேண்டிய தேவை ஆகிய காரணங்கள் நிமித்தம் வாக்குமூலமளிக்க முடியாது என தெரிவித்து அவர்களை திருப்பி அனுப்பியுள்ளார் இந்தச் சம்பவம் இலங்கை எங்கும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண பாராளுமன்ற உறுப்பினர் முயற்சி

யாழ். மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றால் அபகரிக்கப்படும் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் அரச காணிகள் ஆகியவை தொடர்பாக காணிப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்ப்பாணத்திலிருந்து கிடைத்த செய்தியொன்று தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக, மாவட்டத்தின் நெடுந்தீவு, சுண்டிக்குளம், நாவற்காடு மற்றும் சரசாலை பகுதிகளில் இத் திணைக்களங்களால் தனியார் மற்றும் அரச காணிகள் எல்லைப்படுத்தப்பட்டிருப்பதால் மக்களின் இயல்பு வாழ்விற்கு பாதிப்பு ஏற்படுவதாக அண்மையில் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களின் போது சுட்டிக்காட்டப்பட்டது. அதனடிப்படையில் இவ் விடயம் தொடர்பாக துறைசார் அமைச்சர் சி.பி.ரத்னாயக்கவின் கவனத்திற்கு மாவட்ட அபிவிருத்தி ஒழுங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் கொண்டு சென்றதுடன், கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் காணி பிரச்சினை உள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பிரதேச செயலர்களுடன் கொழும்பில் அமைச்சரின் தலைமையில் கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



அந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை ஆராயும் முகமாக, கொழும்பில் உள்ள அமைச்சில் இருந்து உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள பிரதேச செயலர்களுடன் இணைந்து கண்காணிப்பு விஜயங்களை மேற்கொண்ட பின்னர் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்களை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

# இலங்கை விடயத்தில் ஐ.நா தனது கடந்தகால தவறை சரிசெய்ய வாய்ப்பு!

### - நாடுகடந்த தமிழீழ அரசாங்க பிரதிநிதி




உலகெங்கும் போரினாலும், இனப்படுகொலைகளினாலும் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதியினை பெற்றுக் கொள்வதில், ஐ.நாவின் தேவை தற்போது கேள்விக்குறியாகியுள்ள நிலையில், சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்துவதன் மூலம், தனது கடந்த கால தவறுகளை சரிசெய்வதற்கு ஐ.நாவுக்கு தற்போது ஓர் வாய்ப்பு கிட்டியுள்ளது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் ஐ.நா மனித உரிமைச்சபை தனது தலைமைத்துவத்துக்கும், முன்னேற்றத்துக்கும் வாய்ப்பாக இது அமையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபையில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு தொடர்பில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை ஐ.நா அங்கத்துவ நாடுகளுக்கு அனைத்துலக தொடர்பாடலுக்கான அமைச்சர் மாணிக்கவாசகர் காணொளி வாயிலாக முன்வைத்திருந்தார்.

அவர் தனதுரையில், கடந்த 12 ஆண்டுகளாக நாங்கள் இன்னமும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காகக் காத்திருக்கிறோம்.

ஐ.நா. தீர்மானங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் தொடர்ந்து இணங்காதது, மற்றும் போர்க்குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் உட்பட இடைக்கால நீதி வழிமுறைகளை நிறுவுவதில் தாமதம் என்பன போரில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு உண்மை மற்றும் நீதியை வழங்குவதைத் தவிர்ப்பதற்கான ஒரு முயற்சியாகும்.

எந்தவொரு தீர்மானத்தையும் நடைமுறைப்படுத்தி நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான சூழலை உருவாக்கும் நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தை உள்நாட்டு பொறிமுறை மூலம் செய்யமுடியாது என்பதை சிறீலங்கா மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்ததன் மூலம் தெளிவாகிவிட்டது.

உங்களது தற்போதைய தீர்மான வரைவு, பாதிக்கப்பட்டவர்களை மேலும் துன்பத்திற்கும் அடக்குமுறைக்கும் உள்ளாக்குவதோடு, சிறிலங்கா இனவாத அரசுக்கும் அதன் குற்றவாளிகளுக்கும் மேலதிக நேரமும் வெகுமதியும் அளிப்பதாக அமைகிறது.

உலகெங்கும் போரினால் பாதிக்கப்பட்டவர்கள், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு உட்படுத்தப்படுவதால் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் ஐ.நா மனித உரிமைப்பேரவையின் தேவை இப்போது கேள்விக்குறியாகியுள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்துவதின் மூலம், தனது தலைமைத்துவத்தைக் காண்பிப்பதற்கும், கடந்த கால தவறுகளை சரிசெய்வதற்கும், முன்னேறுவதற்கும் ஐ.நா மனித உரிமைப்பேரவைக்கு இது ஒரு வாய்ப்பாக அமையும் என உறுதிபடத் தெரிவிக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

----------

*On behalf of The Transnational Government of Tamil Eelam (TGTE), and the victims of the Mulliavaikkal War, appeal to the Council, that after 12 years, we are still waiting for justice and accountability.*

*As you all are aware, the war has resulted in more than 70 000 dead including women, and children, 89 000 widows, about 40 000 disabled, 60 000 IDPs, and 146 000 are still unaccounted for, either dead or missing.*

*The continued non-compliance, by the Government of Sri Lanka on the UN HRC resolutions, and delaying the establishment of transitional justice mechanisms, including a special court to prosecute alleged war crimes, is an attempt to avoid delivering on the truth and justice, for the thousands of victims of the country's civil war.*

*It has become very clear, and repeated and reiterated by the GoSL, that a home-grown mechanism to implement any resolution will never ever be possible, to build any trust for an environment for reconciliation, justice, or accountability.*

*Your current draft is only to continue to victimise and suppress the victims with more pain and sufferings, and to reward a rogue state and the perpetrators to buy more time.*

*The relevancy of the Council for the victims of war, around the world, has now come into question, who are continued to be subjected to structural Genocide, War Crimes and Crimes Against Humanity.*

*Here, it's an opportunity for the Council to show leadership, to correct past mistakes and to move forward, by referring Sri Lanka to the ICC.*

*Thank You.*

# கனடாவில் தமிழ்ப் பெண்களின் வளர்ச்சி அபாரமானது என்கிறார் கனடிய மத்திய அமைச்சர் Hon. Mary Ng



"கனடாவில் தமிழ்ப் பெண்களின் வளர்ச்சி அபாரமானது. பொதுவாகவே கனடாவிற்கு குடியேறிய தென்னாசிய மக்கள் தங்கள் வாழ்க்கையில் உறுதியான தளத்தை பதித்துள்ளார்கள். அவர்களின் இங்கு நான் சந்திக்கின்ற பல தமிழ்ப் பெண்கள், தலைமைத்துவத்திலும், வர்த்தகத் துறையிலும் தலை சிறந்து விளங்குகின்றார்கள். பலர் கனடிய மத்திய அரசாங்கம் வழங்குகின்ற வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி தங்கள் வாழ்க்கையில் உயர்ந்துள்ளார்கள். எனவே இன்றைய உலகப் பெண்கள் தினவிழாவை கொண்டாடுகின்ற கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்திற்கும், அதில் அங்கம் வகித்து பெண்களின் சிறந்த தலைமைத்துவத்தை நிரூபிக்கும் பெண் இயக்குனர்களையும் நான் பாராட்டுகின்றேன். அத்துடன் இன்றைய விழாவில் கலை நிகழ்ச்சிகளையும் பெண்களுக்கு ஊக்கமளிக்கும் உரையாற்றிய அனைவரையும் பாராட்டி கனடிய அரசு சார்பான வாழ்த்தையும் கூறுகின்றேன்" இவ்வாறு தெரிவித்தார் கனடிய மத்திய அரசில் சிறு தொழில் அமைச்சராகவும் சர்வதேச ஒத்துழைப்பு விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சருமான Hon Mary Ng அவர்கள்.

நேற்று மாலை கனடாவில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற "உலகப் பெண்கள் தின" விழாவில் சிறப்புரையாற்றிய அவர் தொடர்ந்து பேசுகையில் "தற்போதைய கோவிட்-19 பாதிப்புக் காரணமாக ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் மிகவும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள். பெண்களின் தொழில் மற்றும் வர்த்தகம் தொடர்பான தீர்வினை வழங்கும் வகையிலும் எமது அரசாங்கம் பல திட்டங்களை வகுத்துள்ளது" என்றார்.

மேற்படி விழாவை லைடா உலகநாதன் தொகுத்து வழங்கினார். கனடாவின் மற்றுமொரு லிபரல் பாராளுன்ற உறுப்பினர் Marci Ien அவர்களும் தமிழர் ச மூகத்தின் அரசியல் பிரமுகருமான நீதன் சாண் உட்பட பலர் உரையாற்றினர்கள்.


இளையவயதுப் பாடகி செல்வி றெசெல் ரெமிசியர் தமிழ்த் தாய் வாழ்த்து மற்றும் கனடிய தேசிய கீதம் ஆகியவற்றை இசைத்து பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றார்.

ரமணா ராஜசேகரன், நட்சா நரேஸ் ஆகியோர் முறையே நடனத்தையும் ஆங்கிலப் பாடலையும் அற்புதமாக வழங்கிச் சென்றார்கள். செல்வி பிரணவி அருளானந்தம் இனிய புல்லாங்குழல் இசையை வழங்கினார். செல்வி கிரிசாலினி பரதன் சமூக ஊடங்கள் மூலமாக பெண்கள் தங்கள் வர்த்தகத்தை பரவலாக்கலாம் என்னும் தலைப்பில் உரையாற்றினார்.


இறுதியில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்த பல பார்வையாளர்களுக்கு அதிஸ்டக் குலுக்கலின் மூலம், பரிசுப் பொருட்கள் வழங்கப்பெற்றன. இந்த அதிஸ்டக் குலுக்களை வர்த்தக சம்மேளனத்தின் உப-தலைவர்களில் ஒருவரான திருமதி கிறிஸ்டின் சீவரட்ணம் நடத்தினார்.

இந்த விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சம்மேளத்தின் தற்போதைய தலைவர் திரு சாந்தா பஞ்சலிங்கம் தலைமையிலான குழுவினர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

















# ஜெனிவாக் காலத்தில் ஒரு உண்ணாவிரதம்



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

“ஐநா எனப்படுவது எங்கள் எல்லோரையும் இணைக்கும் ஒரு அற்புதமான கருத்து. அது மேலும் பலம் அடைவதைமேலும் சிறப்பானதாக் உறுதியான நிலைப்பாடுடைய ஒன்றாக வருவதை விரும்புகிறேன். ஆனால் இப்பொழுதும் ஐ.நா. மனித உரிமைகளோடு தொடர்பே இல்லாத அரசியல் நலன்களின் செல்வாக்குக்கு உள்ளாகிறது. அது ஐநாவை அமைப்பு ரீதியாக ஊழல் மிகுந்தது ஆக்கிவிட்டது. நான் நம்புகிறேன் நாங்கள் ஐநாவை மக்களுக்கு சேவை செய்யும் ஒன்றாக மாற்றவேண்டும். அரசியல்வாதிகளுக்கு சேவை செய்யும் ஒன்றாக அல்ல. எனது படம் ஆகிய Quo Vadis Aida ஐநாவின் முடிவுகளின் சுயாதீனம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான உறுதியான நிலைப்பாடு குறித்த கேள்விகளை எழுப்ப உதவும் என்று நான் உண்மையாகவே நம்புகிறேன்.....”

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் Quo Vadis Aida என்ற திரைப்படத்தின் நெறியாளர் ஆகிய ஜஸ்மிலா ஸ்பானிக். அவர் ஸ்ரெபெர்னிகா இனப்படுகொலையில் தனது 17வது வயதில் தப்பிப்பிழைத்த ஒரு பெண். ஐநாவில் பல ஆண்டுகள் வேலை செய்தவர். அண்மையில் அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி டைம்ஸ் சஞ்சிகை அவரை நேர்கண்ட பொழுது அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். அவருடைய சர்ச்சைக்குரிய பாராட்டப்பட்ட திரைப்படம் ஆகிய Quo Vadis Aida இப்பொழுது ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

1995இல் ஸ்ரெபெர்னிகா இனப்படுகொலையில் எண்ணாயிரத்துக்கும் குறையாதவர்கள் கொல்லப்பட்டார்கள் பெண்கள் சிதைக்கப்பட்டார்கள். அதில் தப்பிப் பிழைத்த ஜஸ்மிலா கூறுகிறார் ஸ்ரெபெர்னிகாவில் இப்பொழுதும் அன்னையர் தங்கள் பிள்ளைகளின் அல்லது கணவன்மார்களின் அல்லது உறவினர்களின் எலும்புத் துண்டுகளை தேடிக்கொண்டிருப்பதாக. ஏதாவது ஒரு எலும்பு மிச்சம் கிடைத்தால் அதைப் புதைத்து ஒரு கல்லறையை கட்டிவிடலாம் என்று காத்திருப்பதாக. அந்தப் பெண்களின் உறுதியை கௌரவித்து அவர்களுக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு கொடுக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

அன்னையரின் துக்கம் அல்லது அன்னையரின் ஆவேசம் அல்லது அன்னையரின் காத்திருப்பு உலகம் முழுவதிலும் போராட்டங்களை பின்னிருந்து இயக்கியிருகிறது. தேற்றப்படவியலாத தாய்மாரின் துக்கம் ரஷ்யாவின் ஸ்தெப்பி வெளியில் தொடங்கி வல்லை வெளி வாகரை வெளி கைதடி வெளி வரையிலும் நிரம்பியிருக்கிறது. தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டத்தில் அடைக்கலம் தந்த வீடுகள் என்று அழைக்கப்படும் அனேகமான வீடுகளில் தாய்மாரின் தியாகத்தை அர்ப்பணிப்பை துணிச்சலை காணலாம். போருக்குப் போன தமது பிள்ளைகளுக்காகவும் அல்லது காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்காகவும் உபவாசம் இருக்கும் ஆயிரக்கணக்கான அன்னியர்களின் கதை வெளியே தெரிய வருவதில்லை.

எனக்குத் தெரிந்து பல அன்னையர்கள் இரு வேளை உணவைத் துறந்து அல்லது ஒருவேளை உணவைத் துறந்து அல்லது சோற்றைத் துறந்து பாண் மட்டும் சாப்பிட்டு கொண்டு பிள்ளைகளுக்காக காத்திருப்பதை கண்டிருக்கிறேன். ஏற்கனவே பிள்ளை வரம் கேட்டு மண்சோறு சாப்பிடும் ஒரு பாரம்பரியத்தை கொண்ட மக்கள் நாங்கள். எனவே தவமிருந்து பெற்ற பிள்ளைகளை காப்பாற்றுவதற்காக தவமிருக்கும் அன்னையரின் தியாகத்தை கழித்துவிட்டு ஒரு விடுதலைப் போராட்டத்தின் ஒட்டுமொத்த தியாகத்தை குறித்து கதைக்க முடியாது. அண்மையில் கூட புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த ஓர் அன்னை காலமானார். அவருடைய வீடு ஆயுதப் போராட்டத்தின் தொடக்க காலங்களில் பலருக்கு புகலிடமாக இருந்த ஒரு வீடு என்பதை முகநூல் பதிவுகளை பார்த்தால் தெரியும். இப்பொழுதும் அவ்வாறு அடைக்கலம் கொடுத்த பல வீடுகள் அமைதியாக நிகழ்கால அரசியல் போக்கில் தலைடாது அமைதியாக சாட்சிகளாக பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அதேசமயம் காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி மற்றொரு தொகுதி அன்னையர்கள் வீதியோர குடில்களில் அல்லது தீச்சட்டி தலையில் சுமந்தபடி போராடிக் கொண்டிருக்கிறார்கள். அன்னையரின் தியாகம் பசி;தூக்கம்;காயம்’கண்ணீர் என்பவற்றால் வனையப்பட்டதே எந்த ஒரு போராட்டமும்.

அப்படி ஓர் அன்னைதான் இப்பொழுது பிரித்தானியாவில் உண்ணாவிரதம் இருக்கிறார். இக்கட்டுரை முதலாவதாக அவருடைய பசியை மதிக்கிறது;அவருடைய ஓர்மத்தைக் கௌரவிக்கிறது.

அதேசமயம் கடந்த பத்தாண்டுகளில் ஈழத்தமிழர்கள் மத்தியில் நிகழ்ந்த சாகும்வரையிலான உண்ணாவிரதங்களை தொகுத்து பார்க்கவேண்டும் அரசியல் கைதிகளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோரும் சாகும் வரையிலும் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆனால் வெற்றி பெறவில்லை. கடந்த பத்தாண்டுகளில் யாரும் இறுதிவரை போராடவில்லை. அதற்காக இக்கட்டுரை உண்ணாவிரதிகள் சாகவேண்டும் என்று கேட்கவில்லை. சாகும் வரை உண்ணாவிரதம் என்பது ஒரு கடைசிப் போராடம்.

அதை ஏற்கனவே பிரபல்யமாக இருக்கும் அரசியல்வாதிகள் முன்னெடுப்பதே சிறப்பு என்று மு. திருநாவுகரசு அண்மையில் கூறியிருக்கிறார். மக்கள் பிரதிநிகளுக்கு ஊடகக்கவர்ச்சி உண்டு. அனைத்துலக் அளவில் அங்கீகாரம் உண்டு. அவர்களை மக்கள் தமக்காகப் போராடத்தானே தெரிந்தெடுத்தார்கள். எனவே அவர்கள் தியாகம் செய்யட்டும். அதன்மூலம் முன்னுததாரணமாகட்டும். அவர்களுக்குள்ள ஊடகக்கவர்ச்சி மற்றும் அங்கீகாரம் என்பவற்றை முதலீடாக்கி அவர்கள் சாகும் வரையிலும் உண்ணாவிரதம் இருக்கும் பொழுது அது உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கும். அவர்களுக்கு வாக்களித்த மக்களையும் ஏதோ ஒரு உணர்ச்சி புள்ளியில் இணைக்கும். எனவே மக்கள் பிரதிநிதிகள்தான் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஆனால் கடந்த பத்தாண்டுகளில் தமிழ் மக்கள் மத்தியில் எந்த ஒரு கட்சித் தலைவரும் அவ்வாறு சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கவில்லை. அது மட்டுமல்ல சட்ட மறுப்பாக போராடிய காரணத்தால் யாருமே இதுவரை சிறைக்கும் போகவில்லை. தலைவர்களும் சிறைகளை நிரப்பவில்லை. தொண்டர்களும் சிறைகளை நிரப்பவில்லை. இப்படிப்பட்ட மிக வறுமையான ஒரு போராட்டச் சூழலில்தான் யார்யாரோ தன்னார்வமாக சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள். யார் யாரோ போராட்டத்தை முன்னெடுக் கிறார்கள். தலைவர்கள் அவர்களின் பின் இழுபடுகிறார்கள்.

சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்ட தீபத்தை விடுவிப்பதற்கான மக்கள் இயக்கம் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டவர்களை தீக்குளிக்க கொடுத்திருக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தீக்குளித்த போதும் இந்த உலகம் பேசாமல் பார்த்துக் கொண்டே இருந்தது. எனவே எவ்வளவு தியாகம் செய்யப்படுகிறது என்பதோ எவ்வளவு வீரம் காட்டப்படுகிறது என்பதோ மட்டும் ஒரு மக்கள் கூட்டத்தின் இறுதி வெற்றியை தீர்மானிப்பது இல்லை. தமிழ் மக்கள் புத்திசாலித்தனமாக போராட வேண்டும். பொருத்தமான போராட்டங்களை பொருத்தமான நேரங்களில் முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் மக்கள் ஏற்கனவே நிறைய இழக்க கொடுத்துவிட்டார்கள். கிட்டத்தட்ட நால்வருக்கு ஒருவர் புலம்பெயர்ந்து விட்டார். எனவே தமிழ் சக்தி தொடர்ந்தும் சிதறக்கூடாது. அது சேமிக்கப்பட வேண்டும். திரட்டப்பட வேண்டும். இந்த அடிப்படையில் சிந்தித்து நீதிக்கான தமது போராட்டத்துக்கென்று தமிழ் மக்கள் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அவ்வாறான ஒரு பொதுக்கட்டமைப்பு இல்லாத வெற்றிடத்திலேயே அப்பெண்மணிக்கு ஆதரவாக தாயகத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் சுழற்சி முறையில் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். கிழக்கில் சிவில் சமூக அமைப்புக்கள் உண்ணாவிரதம் இருக்கின்றன.

பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தில் பெரும்பாலான நேரத்தில் மிகச் சிலரையே போராட்ட மேடையில் காணமுடிகிறது. சில சமயங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அங்கே வந்து இருப்பார்கள். கட்சிகளின் உறுப்பினர்கள் அங்கே வந்து இருப்பார்கள். அண்மையில் தென்னிலங்கையிலிருந்து மதகுருக்கள் வந்து இருந்தார்கள். ஆனாலும் பெரும்பாலான நேரங்களில் அந்த மேடை மிகச்சிலரோடு வெறிச்சோடிக் காணப்படும். இரவுகளில் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த சிலர் வந்து தங்குகிறார்கள். மற்றும்படி கட்சிகள் இது விடயத்தில் தங்கள் பங்களிப்பை போதிய அளவு செய்யவில்லை என்று உணரப்படுகிறது. சில கட்சித் தலைவர்களிடம் கேட்டேன். அவர்கள் கூறுகிறார்கள் இந்த போராட்டத்தை தொடங்கும்போது மாணவர்கள் தம்மோடு கலந்துபேசவில்லை என்றும் அதற்குரிய கட்டமைப்பு எதையும் உருவாக்கவில்லை என்றும். மாணவர் அமைப்புக்குள்ளும் ஒன்றிணைந்த செயற்பாடு இல்லை. மாணவர்கள் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் கட்சிகள் பங்களிப்புச் செய்யலாம் தானே?

இப்போராட்டத்தில் முன்நின்று செயல்படும் ஒரு மாணவர் தன்னுடைய இரண்டு நாள் பரீட்சைகளை எழுதவில்லை என்று தெரிகிறது. அந்த நாட்களில் அவருக்கு பதிலாக போராட்டத்தை பொறுப்பேற்க வேறு மாணவர்கள் இல்லை? இதுதான் நிலைமை. மிகச் சிலரின் தியாகத்தை பெருந்திரள் மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்களா? அல்லது மக்களைப் பங்காளிகளாக மாற்றத் தேவையான அரசியல் தரிசனம் சம்பந்தப்பட்ட மாணவர்களிடம் இல்லையா? தமிழர் தாயகத்தில் போராட்டங்கள் எந்த அளவுக்கு மக்கள் மயப்பட்டிருக்கின்றன என்பதற்கு மாணவர்களின் போராட்டம் ஆகப் பிந்திய எடுத்துக்காட்டு. அதிலும் குறிப்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டத்தின் பின்னரான எடுத்துக்காட்டு.

தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவல்ல ஒரு மக்கள் இயக்கம் இல்லாத வெற்றிடத்தை இது காடுகிறது. அப்படியொரு மக்கள் அமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டும். அது தாயகம்தமிழ் புலம்பெயர்ந்த சமூகம் மற்றும் தமிழகத்தில் இருக்கும் தரப்புக்களையும் இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கும் பொழுது ஒரு முக்கியமான முன் நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும்.

அது என்னவெனில். புலம்பெயர்ந்த தமிழ் பரப்பில் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் அங்கே முன்வைக்கும் கோஷங்கள் முன்நிறுத்தும் சின்னங்கள் கொடிகள் போன்றன தாயகத்தில் தடை செய்யப்பட்டுள்ளன. எனவே அவர்களோடு இணைவது தாயகத்தில் இருப்பவர்களுக்கு ஆபத்தானது. தமிழகத்திலும் அப்படித்தான். இதனால் தாயகம் - தமிழகம் - புலம் பெயர்ந்த தமிழ்ச்சமூகம் ஆகிய மூன்று பரப்புகளும் ஒன்றிணையத்தக்க ஒரு பொதுக்கட்டமைப்பை அனைத்துலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சிவில் வெளியை திறக்க வேண்டும். அதன் மூலமாகவே புலம்பெயர்ந்த தமிழ் பரப்பிலிருந்து அறிவும் பணமும் ஏனைய உதவிகளும் பரிமாறப்பட வேண்டும். இல்லையென்றால் தாயகத்தில் மிக அரிதாக தோன்றும் அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தோடு கொண்டிருக்கும் உறவுகள் காரணமாக ஆபத்துக்குள்ளாகும் நிலைமைகள் ஏற்படலாம். எனவே இங்கு முக்கியமாக எடுக்கப்பட வேண்டிய முடிவு அதுதான்.

தாயகம் - தமிழகம் - புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பு ஆகிய மூன்று பரப்புகளையும் ஒன்றிணைக்கும் ஒரு இடையூடாட்டத் தளமாக கருதத்தக்க ஒரு கட்டமைப்பை முதலில் உருவாக்க வேண்டும். அந்த கட்டமைப்புக்கூடாவே நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டங்கள் பொருத்தமான வடிவத்தில் பொருத்தமான நேரத்தில் தீர்மானிக்கப்பட வேண்டும். சில தனிநபர்களின் தன்னார்வமான போராட்டங்கள் அல்லது தியாகங்கள் மக்களை ஒரு உணர்ச்சி புள்ளியில் இணைக்க உதவும். ஆனால் சில சமயம் ஒருங்கிணைக்கப்படாத போராட்டங்கள் தொடர்ச்சியற்ற போராட்டங்கள் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த போராட்ட உணர்வை நீர்த்துப் போகச் செய்துவிடும். எனவே இது விடயத்தில் உடனடியாக ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கவேண்டும். உண்ணாவிரதம் இருக்கும் அந்த பெண்மணியின் பசியை முன்னிறுத்தியாவது தமிழ்ச்சமூகம் இது குறித்து சிந்திக்குமா?

# ஐ.நாவில் சமர்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு நீதிக்காக போராடும் தமிழர் தேசத்துக்கு பெருத்த ஏமாற்றத்தை தருகின்றது

இலங்கைக்கு மேலும் ஒரு காலநீடிப்பினை வழங்கி, பொறுப்புக்கூறலை நீர்த்துப் போகச் செய்கின்ற வகையில், ஐ.நா மனித உரிமைச்சபையில் சமர்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவினை முற்றாக நிராகரிப்பதாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக அதன் பிரதிநிதிகள் மேலும் தெரிவிக்கையில், "நீதிக்காக போராடும் தமிழர் தேசத்துக்கு இது பெருத்த ஏமாற்றத்தை தருவதாக அமைகின்றது" எனவு தெரிவித்துள்ளது.


இது தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மேலும் தெரிவிக்கையில், "தீர்மானம் என அமைந்த முதல் வரைவு தமிழர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை தருவாக அமைந்திருந்த நிலையில், இலங்கை அரசாங்கத்தை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்த வேண்டும் என கோரியிருந்தனர்.

ஆனால் நேற்று வியாழக்கிழமை (11-03-2021), வாக்கெடுப்பு நோக்கிய தமது தீர்மான வரைவினை பிரித்தானியா தலைமையிலான கூட்டு நாடுகள் சமர்ப்பித்திருந்தன. எதிர்வரும் 22,23ம் தேதிகளில் வாக்கெடுப்புக்கு வரலாம் என கூறப்படுகின்றது.

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைக்கு மேலும் ஓர் காலநீடிப்பினை வழங்குவதாகவே தீர்மான வரைவு அமைந்துள்ளதோடு, பொறுப்புக்கூறலை நீர்த்துப்போகச் செய்வதாகவும் அமைகின்றது. இதனை முற்றாக நிராகரிக்கின்றோம். நீதிக்காக ஏங்கும் தமிழர் தேசத்துக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பெருத்த ஏமாற்றத்தையும் இது தருகின்றது.

அரசுகள் தாம் ஓர் தரப்பாக எடுகின்ற முடிவுகள் தொடர்பில், அரசற்ற இனங்கள் சந்திக்கக்கூடிய, எதிர்கொள்ளக்கூடிய சவால்களை இது வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது. புவிசார் அரசியல் வெளியில் நம்மை ஒரு தரப்பாக மாற்ற வேண்டிய மூலோபாயங்களை வகுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தினையும் இது உணர்த்துகின்றது.

எமக்கான நீதியினை வென்றெடுப்பதற்கு ஜெனீவாவுக்கு அப்பாலும், புதிய புதிய களங்களை நோக்கி நாம் செயற்பட வேண்டியவர்களாக இருப்பதோடு, ஐ.நாவில் வாக்கெடுப்புக்கு முன்னராக தீர்மான வரைவில் திருத்தங்களை கொண்டுவரக்கூடிய தீவிரமான செயல்முனைப்பிலும் ஈடுபடவுள்ளோம் எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.


Political Affairs Ministry
Transnational Government of Tamil Eelam
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு

875 Avenue of the Americas, Suite 906
New York, NY 10001, USA

www.tgte.org
pmo@tgte.org

11/03/2021

செய்திக்குறிப்பு :
இன்று வியாழக்கிழமை, வாக்கெடுப்பு நோக்கிய தமது தீர்மான வரைவினை பிரித்தானியா தலைமையிலான கூட்டு நாடுகள் சமர்ப்பித்திருந்தன. எதிர்வரும் 22,23ம் தேதிகளில் வாக்கெடுப்புக்கு வரலாம் என கூறப்படுகின்றது. இது தொடர்பிலான நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிலைப்பாடு

**தமிழர் தேசத்துக்கு பெருத்த ஏமாற்றம் - தீர்மான வரைவினை நிராகரிக்கின்றோம்**

சிறிலங்காவுக்கு மேலும் ஓர் காலநீடிப்பினை வழங்குவதாகவே தீர்மான வரைவு அமைந்துள்ளதோடு, பொறுப்புக்கூறலை நீர்த்துப்போகச் செய்வதாகவும் அமைகின்றது. இதனை முற்றாக நிராகரிக்கின்றோம். நீதிக்காக ஏங்கும் தமிழர் தேசத்துக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பெருத்த ஏமாற்றத்தையும் இது தருகின்றது.

அரசுகள் தாம் ஓர் தரப்பாக எடுகின்ற முடிவுகள் தொடர்பில், அரசற்ற இனங்கள் சந்திக்கக்கூடிய, எதிர்கொள்ளக்கூடிய சவால்களை இது வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது. புவிசார் அரசியல் வெளியில் நம்மை ஒரு தரப்பாக மாற்ற வேண்டிய மூலோபாயங்களை வகுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தினையும் இது உணர்த்துகின்றது.

எமக்கான நீதியினை வென்றெடுப்பதற்கு ஜெனீவாவுக்கு அப்பாலும், புதிய புதிய களங்களை நோக்கி நாம் செயற்பட வேண்டியவர்களாக இருப்பதோடு, ஐ.நாவில் வாக்கெடுப்புக்கு முன்னராக தீர்மான வரைவில் திருத்தங்களை கொண்டுவரக்கூடிய தீவிரமான செயல்முனைப்பிலும் ஈடுபடவுள்ளோம் எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்து 15வது நாளாக சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொள்ளும் அன்னை அம்பிகைக்கு ஆதரவாக சென்னையில் ஆர்ப்பாட்டம்




இங்கிலாந்து தேசத்தில் இலண்டன் மாநகரில், இரண்டாவது வாரத்தை எட்டிப் பிடித்து தன்னை வருத்திக் கொண்டவண்ணம், இலங்கைத்தமிழர்களுக்கு நீதி கோரி நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்து சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டு வரும் அம்பிகை செல்வகுமாருக்கு ஆதரவு தெரிவித்து நாளை சனிக்கிழமையன்று சென்னையிலுள்ள இங்கிலாந்து தூதரகம் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நாளை வெள்ளி பகல் 12 மணிக்கு சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள இங்கிலாந்து தூதரகம் முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

கடந்த 27.2.2021 முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப்போராட்டத்தை நடத்திவரும் அம்பிகை செல்வகுமாருக்கு ஆதரவு தெரிவித்து இங்கிலாந்து அரசே, ஈழத்தமிழர் அம்பிகையை சாகவிடாதே, இலங்கை அரசை அனைத்துலக நீதிமன்றில் நிறுத்த ஐ.நா வில் தீர்மானம் கொண்டுவா என கோரிக்கை விடுத்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சென்னையில் உள்ள அனைத்து தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் கோவிட் – 19 தடுப்பூசித் திட்டம் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது என்கிறார் முதல்வர் டக் போர்ட்





ஒன்றாறியோவின் தடுப்பூசி வழங்கலின் முதற் கட்டம் சிறப்பாக நடைபெற்று வருவதுடன், 820,000 தடுப்பூசி மருந்துகள் பல பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் தொடர்பாக பல்வேறு இடங்களில் எடுக்கப்பட்டு வரும் துரிய நடவடிக்கைகளை நேரடியாகச் சென்று கவனித்து வருகின்றார் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக்போர்ட் அவர்கள். அவரோடு சம்பந்தப்பட்ட தொகுதிகளின் மாகாண சபை உறுப்பினர்களும் சென்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதுவரை 269,000 இற்கும் மேற்பட்ட ஒன்றாறியோ வாழ் மக்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. பெரும்பாலும் நீண்டகால பராமரிப்பு இல்லங்களுக்கான தடுப்பூசி வழங்கல் நடவடிக்கைகள் கணிசமான அளவு பூர்த்தியடைந்துள்ளது. நீண்டகால பராமரிப்பு இல்லங்களில் வசிப்பவர்களில் ஏறத்தாழ 80 சதவிகிதமான மக்கள் மேற்படி தடுப்பூசியின் மூலம் நோயெதிர்ப்பு சக்தியைப் பெற்றுள்ளனர். மொத்தமாக விநியோகிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளின் எண்ணிக்கையில் ஒன்றாரியோ முன்னணியில் உள்ளதுடன், அனைத்து மாநிலங்களுடனும் ஒப்பிடும்போது அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு தடுப்பூசி வழங்கிய மாநிலமாகவும் ஒன்றாரியோ விளங்குகிறது. இவ்வாறு தெரிவித்துள்ளது முதல்வரின் அலுவலகம்.

பொதுமக்களுக்கான நோய்த் தடுப்பூசி வழங்கலை இலகுபடுத்தும் விதத்தில் மார்ச் 15 முதல், ஒன்றாறியோ மாநிலம் இணையவழி மூலமான முன்பதிவு, வாடிக்கையாளர் சேவை மற்றும் வாடிக்கையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தல் போன்ற சேவைகளை வழங்கவுள்ளது. ஏற்கனவே சில பொது சுகாதார அலகுகள் தற்போது 80 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசிகளை வழங்குவதற்கு தமது சொந்த முன்பதிவு முறையினைப் பயன்படுத்தி வருகின்றன. மாநில அளவிலான மேற்படி முன்பதிவு முறை நடைமுறைக்கு வந்ததும் பெரும்பாலான பொது சுகாதார கட்டமைப்புகள் இந்நடைமுறைக்கு மாறும். மார்ச் மாத இறுதிக்குள் தடுப்பூசி மருந்து வழங்கல் சீரான நிலையினை அடைவதோடு மத்திய அரசிடமிருந்து கோவிட்-19 தடுப்பூசி மருந்துகள் இரண்டு மில்லியனுக்கும் அதிகமாக வந்தடைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இச்செயற்பாடு நிறைவடையும்போது ஒன்றாறியோ மாநிலம் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தினை அடையும். ஏப்ரல் 2021 முதல் ஜூலை 2021 வரையான காலத்தில் ஒன்பது மில்லியன் ஒன்றாறியோ வாழ் மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டிருக்கும்.

இரண்டாம் கட்டத்தின்போது, தடுப்பூசி பெற முன்னுரிமையுள்ளவர்கள் பின்வருமாறு:
- 60-79 வயதுக்குட்பட்ட முதியவர்கள்,
- குறிப்பிட்ட சில உடல்நல பாதிப்புகளையுடையவர்கள் அல்லது வேறொருவரை பராமரித்துவரக்கூடியவர்
- சமூக அமைப்புகளில் பணிபுரிபவர் அல்லது அது தொடர்பான கட்டமைப்புகளில் வாழும் நபர் அல்லது வேறொருவரைப் பராமரித்து வரக்கூடிய நபர்,
- அதிக நோய்த்தொற்றுக்குள்ளான பகுதிகளில் வாழும் மக்கள்,
- வீட்டிலிருந்து வேலை செய்ய முடியாது பணியிடங்களுக்கு கட்டாயம் செல்லவேண்டிய நிலையிலுள்ள பணியாளர்கள்.

*விஜய் தணிகாசலம், ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர்*
*ஸ்காபரோ - றூஜ் பார்க் தொகுதி*

# கனடிய அரசு எம்மைக் கைவிடுமா?

## கனடா வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு விண்ணப்பம்

ஐ நா மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் 22ஆம் திகதி முதல் இந்த மாதம் 23ஆம் திகதி வரை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் இலங்கை தொடர்பாக கடுமையான தீர்மானம் ஒன்று வரையப்படுவதற்கு முத்தாய்ப்பு வைக்கும் தொனியில் கடந்த ஜனவரி 27ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் 17 பக்கங்கள் அடங்கிய நீண்ட அறிக்கையொன்றில் தனது பரிந்துரைகளை வெளியிட்டிருந்தார்.

அப் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழர் தரப்பு சார்பாக கனடா எவ்வாறு முடிவுகளை எடுக்க வேண்டும் கனடாவின் கடமைப்பாடு என்ன என்பதனையும் தமிழர் தரப்பின் கோரிக்கைகளையும் உள்ளடக்கி கனடிய வெளிவிவகார அமைச்சருக்கு மனு ஒன்று அனுப்பப்பட்டு அம் மனுவானது கனடிய அரசாங்க இணையத்தளத்தில் பொதுமக்கள் கையொப்பத்திற்காகத் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இம் மனுவானது எதிர்வரும் ஏப்ரல் மாதம் அ11ஆம் திகதி பாராளுமன்ற லிகிதரால் கோப்பினுள் பதியப்பட்டபின் அந்த மனுவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஒப்புக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினரான என்.டீ.பி கட்சியைச் சாந்த ஹெதர் மக்பெர்சன் (Heather McPherson) இடம் கையளிக்கப்படும்.



அதன்பின் பாராளுமன்ற உறுப்பினர் அந்த மனுவினை சபையில் வாசித்து இது தமிழ் தரப்பின் கோரிக்கை என்பதை தெரிவித்ததன் பிற்பாடு மனு வாசிக்கப்பட்ட 45 நாட்களுக்குள் அந்த மனுவில் கேட்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளுக்கான பதிலை மனுதாரருக்கு வழங்குவதற்கு அரசாங்கம் சட்டப்படி கடமைப்பட்டுள்ளது.

மனுவில் முக்கியமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஸ்ரீலங்காவின் நிலைமைகளைப் பாரப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்கின்ற விடயம் உள்ளடக்கப்பட்டு இருப்பதுடன் அதே குற்றவியல் நீதிமன்றத்தில் ஸ்ரீலங்காவின் நிலைமைகளைப் பாரப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மனித உரிமைகள் ஆணையாளர் தன்னுடைய அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றப் பொறிமுறையில் கனடாவின் முக்கியத்துவம்

1. இந்த நீதிமன்றம் உருவாக்கப்படும் போது அதன் உருவாக்கத்தில் கனடா முக்கிய பங்கினை வகித்திருக்கிறது.
2. கனடாவில் தான் புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள்.
3. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஸ்ரீலங்காவிற்கான இணைத் தலைமை நாடுகளில் ஒன்றாகக் கனடா இருக்கின்றது.

பதப்பிரயோகங்களும் வரைவிலக்கணமும்

தற்கால மனித உரிமைகளுக்கான சர்வதேச சட்டத்தில் மனித உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் இழைக்கப்படும் குற்றங்கள், இனவழிப்பு, மனுக்குலத்திற்கெதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் என வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், சர்வதேசக்குற்றங்கள், சர்வதேச அட்டூழியக் குற்றங்கள், பாரிய அட்டூழியக் குற்றங்கள் என்ற பதங்களும் அவ்வப்போது பயன்படுத்தப்படுகின்றன.

இனவழிப்பு, மனுக்குலத்திற்கெதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் ஆகிய மூன்று குற்றங்களும் ஒருங்கே இடம்பெறும் போது - அவை மூன்றையும் உள்ளடக்கிய குற்றத்தினை சர்வதேசக்குற்றங்கள், சர்வதேச அட்டூழியக் குற்றங்கள், பாரிய அட்டூழியக் குற்றங்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் வரைவிலக்கணம் தெரிவிக்கின்றது.

இந்த வரைவிலக்கணத்தின் அடிப்படையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் சர்வதேசக் குற்றங்கள் என்ற பதத்தினைப் பயன்படுத்தியுள்ளார். எமது வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பட்ட மனுவும் மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரைகளை மேற்கோள் காட்டியும் அவர் பயன்படுத்தியுள்ள பதங்களையும் பயன்படுத்தியே தயாரிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், கடந்த மாதம் குற்றவியல் நீதிமன்ற விவகாரத்தை முன்னிலைப்படுத்தி தரவேற்றம் செய்யப்பட்டுள்ள இந்த மனுவிற்கு உரிய பதிலை தருவது மட்டுமல்லாமல் அந்த மனு சார்ந்து உரிய நடவடிக்கை எடுக்கும் கடமைப்பாடும் கனடாவுக்கு இருக்கின்றது ஆகவே இந்த மனு இப்பொழுது இணையவெளியில் மக்களின் கையொப்பதிற்காகத் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது.

இதுவரை 664 கையொப்பங்கள் இடப்பட்டிருந்தாலும் 5 லட்சம் தமிழர்கள் வாழ்கின்றோம் என்று மார்தட்டி சொல்லப்படுகின்ற ஒரு நாட்டில்,குறைந்தபட்சம் மூன்று லட்சம் மக்களாவது கையொப்பமிட்டுள்ளார்கள் என்று பதிவாகும் போது தான் எமது தேசத்தின் விடுதலைக்கு ஆதரவாகவும் நமது இனத்தின் மீட்புக்கு ஆதரவாகவும் மூன்று லட்சம் மக்கள் கையொப்பமிட்டு இருக்கிறார்கள் என்பதை கனடிய அரசு புரிந்து கொள்ளும்.


எதிர்வரும் 11ஆம் தேதி வரை பொதுமக்கள் கையொப்பம் இடுவதற்காக மனுக்களக்கான அரசாங்க இணையத்தளத்தில் இந்த மனு தரவேற்றம் செய்யபட்டுள்ளது.

ஆகவே இந்த செய்தியை படிக்கும் நீங்கள் இந்தக் கணத்திலிருந்து நீங்களும் கையொப்பமிட்டு அதை மற்றவர்களுக்கும் தெரிவித்து அவர்களும் கையொப்பம் இடுவதற்கு அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

கையொப்பம் இடுவதற்கான இணையத்தள முகவரியுடன், அனுப்பப்பட்டிருக்கும் மனுவின் தமிழாக்கமும் மனுவில் எவ்வாறு கையொப்பமிடுவது என்ற விபரமும் கீழே தரப்பட்டுள்ளது.

கனடிய வெளி விவகார அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ள மனுவின் தமிழாக்கம்

- கனடா ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கான இணைக் குழுவில் உறுப்பினராக உள்ளது.
- இலங்கைக்கான அறிக்கையை ஜனவரி 27, 2021 அன்று சபையின் ஆணையாளர் வெளியிட்டார்.



- அறிக்கையின் 59 வது பந்தியில், இலங்கையின் நிலைமையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆணையாளர் உறுப்பு நாடுகளை கேட்டுக்கொள்கிறார்.
- இதற்கு முன்னர் இரண்டு முறை, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையம் (UNHRC) உள்நாட்டு பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கு தனது ஆதரவைக் கொடுத்துள்ளது, இதன் உச்ச பலனாக 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தும், அதிலிருந்து மார்ச் 2020 இல் இலங்கை ஒருதலைப்பட்சமாக விலகியது.
- சர்வதேச குற்றங்கள் மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலுக்கு ஒரு அர்த்தமுள்ள வழிமுறையைப் பின்பற்ற இலங்கை இப்போது அதன் இயலாமை மற்றும் விருப்பமின்மையை நிரூபித்துள்ளது என்பதை ஆணையாளர் சுட்டிக்காட்டுகிறார்.
- மார்ச் 2011 இல், ஐ.நா. பொதுச்செயலாளரின் நிபுணர் குழு மற்றும் இலங்கையில் பொறுப்புக்கூறல் தொடர்பான உள்ளக மீளாய்வுக் குழு ஆகியன, 2009 ல் முடிவடைந்த போரின் இறுதி ஆறு மாதங்களில் 40,000 தமிழர்கள் கொல்லப்பட்டதாகவும் 70,000 பேர் வரை கணக்கிடப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளன மற்றும்
- இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தத் தவறுதல், தமிழர்களுக்கு எதிரான சர்வதேச அட்டூழியக் குற்றங்களைத் தடையின்றி தொடர்வதற்கான துணிவை மேலும் வலுவூட்டம்.

கீழே , கையொப்பமிட்டுள்ள, கனடிய குடிமக்கள் மற்றும் கனடாவில் வசிப்பவர்கள், ஆகிய நாம் வெளியுறவு அமைச்சரைக் கேட்டுக் கொள்வதாவது:

1. எதிர்வரும் பிப்ரவரி மற்றும் மார்ச் 2021 அமர்வுகளில் சர்வதேச அட்டூழியக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க உத்தரவாதம் அளிக்கக்கூடிய, ஒரு புதிய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில், ஏனைய உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெறும் வகையில் இணைக் குழுவின் உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றுங்கள்.
2. புதிய தீர்மானம் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியிருப்பதை உறுதிசெய்க மற்றும்
3. புதிய தீர்மானம் பாரிய அட்டூழியங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்வதுடன் பரிகார நீதியாகத் தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்குச் சர்வதேச கண்காணிப்பாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பங்களிப்புடன் ஒரு பொதுசன வாக்கெடுப்பை முன்மொழிய வேண்டும்.

மனுவில் கையொப்பமிடும் முறை:
முக்கிய குறிப்பு
மனுவில் ஒப்பமிடும்போது நீங்கள் வழங்கும் விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படமாட்டா என்று கனடிய அரசு உறுதி செய்துள்ளது.
மனுவிற்கான இணையத்தள முகவரி
https://petitions.ourcommons.ca/en/Petition/Details?Petition=e-3168

மேலே தரப்பட்டுள்ள முகவரயில் வெ.வி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனுவும் அதன் முடிவில் Sign the petition எனும் அழுத்தியும் காணப்படும். அவ் அழுத்தியை அழுத்திய பின் வரும் பக்கத்தில் உங்கள் முதற்பெயர, கடைப் பெயர், மின்னஞ்சல், தொலைபேசி இலக்கம் மற்றும் நீங்கள் வாழ்கின்ற நாடு, மாநிலம், உங்கள் தபால் குறியீடு (Postal Code) ஆகியவற்றை பொருத்தமான பெட்டிகளுக்குள் நிரப்புங்கள்.

அடுத்து அதன் கீழே இருக்கும் மூன்று கேள்விகளில் முதல் இரண்டு கேள்விகளுக்கும் சரி அடையாளத்தை இடுங்கள். அதன் பின் கீழ் உள்ள (Captcha) எழுத்துக்களை அவை எப்படி இருக்கின்றனவோ அவற்றைப் போலவே அவற்றுக்கான பெட்டிக்குள் நிரப்புங்கள்.


அதன் பின்பு (Sign) என்கின்ற பெட்டியை அழுத்தினால் நீங்கள் தான் கையொப்பம் இட்டீர்கள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் நோரிப்ளை (No reply) எனும் முகவரியிலிருந்து உங்கள் மின்னஞ்சலுக்கு ஒரு மின்னஞ்சல் வரும். அதி கூடிய பட்சம் ஐந்து நிமிடங்களுக்குள் இந்த மின்னஞ்சல் உங்களுக்கு கிடைக்கும்.

அந்த மின்னஞ்சலில் “Please confirm your support to complete the process” என்ற இணைப்பினை நீங்கள் அழுத்தினால் உங்களுக்கான வாழ்த்துச் செய்தியுடன் நீங்கள் இட்ட கையொப்பம் கணக்கில் சேர்க்கப்படும்.

ஆகவே, இதனை கருத்தில் கொண்டு நீங்கள் மனுவில் கையெழுத்திட்ட பின் நின்றுவிடாமல் உங்கள் மின்னஞ்சலையும் திறந்து அந்த இணைப்பினை அழுத்தி உங்கள் கையொப்பத்தை உறுதிப்படுத்துங்கள்.

இங்ஙனம்,
ஏற்பாட்டாளர்கள்

# இலங்கையில் கொரோனாவால் இறந்தவர்களின் தொகை 500 ஐயும் தாண்டி அபாயகரமான மண்டலத்தை நோக்கி நகர்ந்து செல்கிறதா?



இலங்கையில் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை கடந்த சில வாரங்களாக அதிகரித்து வருகின்றது. அங்கு மரணித்தவர்களின் எண்ணிக்கை 500 ஐயும் தாண்டி அபாயகரமான மண்டலத்தை நோக்கி நகர்ந்து செல்லுகின்றது. சிலவேளைகளில் இந்த எண்ணிக்கை ஓரிரு வாரங்களில் ஆயிரமாக அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது என்றும் வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

குறிப்பாக வட மாகாணத்தில் பணியாற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பலர் மாகாணத்தில் தொற்று எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், அதனால் நேற்றை சிவராத்திரி விழாவின் பொது எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறும் மக்களை வேண்டிக் கொண்டனர்.

இதேவேளை இத்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த ஜனவரி 29 ஆம் திகதி முதல் இற்றை வரையும் 7 இலட்சத்து 37 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு இத்தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதோடு, தொடர்ந்தும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் அசிரத்தை மற்றும் கவனயீனமாக நடந்து கொள்ளும் போக்கு மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக ரயில் மற்றும் பஸ் பொதுப்போக்குவரத்து வாகனங்களிலும், பொருட்களைக் கொள்வனவு செய்யக் கூடிய சந்தைகள், அங்காடி நிலையங்கள் உள்ளிட்ட மக்கள் கூடும் இடங்களிலும் இந்நிலைமையைப் பெரிதும் அவதானிக்க முடிகிறது. அதாவது கொவிட் 19 தொற்று பரவுதல் தவிர்ப்புக்கான முக்கிய சுகாதார வழிகாட்டல்களாக விளங்கும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதில் அக்கறையில்லாத சுபாவத்தைக் காண முடிகின்றது.

இது ஆரோக்கியமானக நிலைமை அல்ல. இதனை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் கொவிட் 19 என்பது வேகமாகப் பரவக் கூடிய ஒரு வைரஸ் தொற்று நோய். தற்போது இந்நாட்டில் இத்தொற்றின் பரவுதல் குறைவடைந்து வர அரசாங்கம் முன்னெடுத்து வரும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளே பிரதான காரணங்களாகும். அத்தோடு இத்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கியுள்ளது. என்றாலும் இலங்கையிலோ உலகின் எந்தவொரு நாட்டிலுமோ இத்தொற்று முற்றாகக் கட்டுப்படுத்தப்படவில்லை. ஒழிக்கப்படவுமில்லை. அதனால் சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுமாயின் இத்தொற்று மீண்டும் தலைதூக்குவதற்கான வாய்ப்புகள் காணப்படவே செய்கின்றன.

இது தொடர்பான அனுபவத்தை உலகின் பல நாடுகள் பெற்றுள்ளன. இத்தொற்றின் முதலாம் அலையைக் கட்டுப்படுத்திய சில நாடுகள் சுகாதார வழிகாட்டல்களில் தளர்வுப் போக்கைக் கடைப்பிடித்தன. அதனால் இவ்வைரஸ் தொற்று மீண்டும் தலைதூக்கியதோடு அந்நாடுகளின் இயல்பு வாழ்வொழுங்கையைப் பெரிதும் பாதித்து முடக்க நிலைக்கும் இட்டுச் சென்றது.

இவ்வாறான அனுபவம் இலங்கைக்கும் உள்ளது. இந்நாட்டில் கடந்த வருடம் மார்ச் மாத நடுப் பகுதி முதல் இத்தொற்றின் முதலாம் அலை பதிவாகத் தொடங்கியதும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டன. அதன் பயனாக ஏப்ரலின் பின்னர் இத்தொற்றின் பரவுதல் பெருவீழ்ச்சி நிலையை அடைந்தது. அதனைத் தொடர்ந்து கட்டம் கட்டமாக நாட்டில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் ஜுலை, ஓகஸ்ட், செப்டெம்பர் மாதமாகும் போது கொவிட்19 தொற்றைத் தவிர்ப்பதற்கான சுகாதார வழிகாட்டல்களைப் பொருட்படுத்தாத நிலைமை மக்கள் மத்தியில் பெரிதும் அதிகரித்தது.

இதன் விளைவாக ஒக்டோபர் முதல் வாரத்தில் கொவிட்19 தொற்றின் இரண்டாம் அலை தலைதூக்கியது. அது முழு நாட்டிலும் வேகமாகப் பரவியது. அதாவது முதலாம் அலையில் பரவாத பிரதேசங்களைக் கூட சென்றடைந்தது. அத்தோடு முதலாம் அலை சுமார் ஆறு மாதங்கள் நீடித்த போதிலும் சுமார் நாலாயிரம் பேர் தான் இத்தொற்றுக்கு உள்ளாகினர். 13 பேர் உயிரிழந்தனர்.

ஆனால் இரண்டாம் அலையில் இற்றை வரையும் 82 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். சுமார் 500 பேர் உயிரிழந்துமுள்ளனர். அப்படியிருந்தும் இத்தொற்றுக்கு உள்ளாவதும், இத்தொற்றினால் உயிரிழப்பதும் இன்னும் முற்றாகக் கட்டுப்பாட்டு நிலையை அடையவில்லை.

அதன் காரணத்தில் தற்போதைய சூழலில் இத்தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை குறைவடைந்தாலும் அது எந்த வேளையிலும் மீண்டும் தலைதூக்கி தீவிரமாகப் பரவக் கூடிய அச்சுறுத்தல் நிலவவே செய்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

மேலும் தற்போது வழங்கப்படும் கொவிட்19 தடுப்பூசியானது அதனைப் பெற்றுக் கொள்பவரின் உடலில் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். இவ்வைரஸின் தொற்று ஏற்படுமாயின் உடலில் அதன் தாக்கத்தை குறைக்கும். ஆனால் இவ்வைரஸ் தொற்றுக்குள்ளாவதையோ, அதன் பரவுதலையோ இத்தடுப்பூசி கட்டுப்படுத்தாது.

அதனால்தான் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்பவர்களும் கூட இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களை தொடர்ந்தும் பேணிக் கொள்ள வேண்டும் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.

எனவே இலங்கையில் கொரோனர்த் தொற்று சிறிது சிறிதாக அதிகரித்து அதிக இறப்புக்களை எமது மக்கள் சந்திக்க இடம் கொடுக்காமல் பொதுமக்கள் தொடக்கம் அரசியல்வாதிகள் மற்றும் வைத்திய அதிகாரிகள், வைத்தியப் பணியாளர்கள்,தாதியர்கள் ஆகியோர் பார்த்துக் கொள்வது அவசியமாகின்றது அது தொடர்பில் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் ஒவ்வொருவரும் செயற்படுவது இன்றியமையாததாகும். அப்போதுதான் இத்தொற்று மீண்டும் இலங்கையில் தலைதூக்க முடியாத நிலைமை ஏற்படும்.

**- கொழும்பிலிருந்து நவாஸ்**



# பெண்களால் சிருஷ்டிக்கப்பட்ட ஈழம்

**- கிளிநொச்சியிலிருந்து தீபச்செல்வன்**

**பூ**மியை பெண் என்கிறோம். நிலத்தை பெண் என்கிறோம். கடலைப் பெண் என்கிறோம். இந்த உலகின் அற்புதங்கள் எல்லாமே பெண்ணாகத்தான் இருக்கின்றது. உலகின் எல்லா சமூகங்களிலும் பெண்தான் முக்கிய அடையாளம். மொழி தாய் வழியாகத்தான் கடத்தப்படுகிறது. அதனால்தான் எல்லோரும் தமது மொழியை தாய் மொழி என்கிறார்கள். எல்லாவற்றின் ஊற்றாகவும் சிருஷ்டிப்பு கர்த்தாகவும் பெண் இருப்பதனால்தான் இன அழிப்பாளர்கள் பெண்களை இலக்கு வைக்கிறார்கள். ஈழத்தில் பெண்கள் மனதால் மாத்திரமின்றி உடல் வலிமை-யாலும் சாதித்தவர்கள். இலக்கியங்களால் மாத்திரமின்றி இலட்சியங்களாலும் ஈழ விடுதலைப் போராட்டத்தை நிமரச் செய்தவர்கள் ஈழப் பெண் போராளிகள். அப்படி சிருஷ்டிக்கப்பட்ட ஈழ நிலத்தில் உலக பெண்கள் நாள் மிகவும் சிறப்பானதாகவும் அர்த்தமுடையதாகவும் கொண்டாடுவது வழக்கம்.

உலகில் பெண்களை படையில் கொண்ட ஒரு இயக்கத்தை கட்டி எழுப்பியவர்கள் ஈழத்தவர்கள். இலங்கை அரசின் இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த தலைவர் பிரபாகரன், ஆண்களை காட்டிலும் பெண்களுக்கு முக்கியத்துவத்தை கொடுத்தார். பெண் வலிமையானவள், அவளே ஒரு சமூகத்தை உருவாக்குகிறாள் என்பதை நன்கு புரிந்து கொண்ட தலைவர் பிரபாகரன், உலகே திரும்பிபார்க்கும் அளவிற்கு ஈழப் பெண்களின் வல்லமைகளை எடுத்துக் காட்டினார். முதல் பெண் மாவீரர் இரண்டாம் லெப்டினன் மாலதி, முதல் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கஜற்கன்னி, மேஜர் சோதியா, கப்டன் வானதி, அன்னை பூபதி என்று தம் உயிராற்றலால் தேசத்தை வரைந்நதவர்கள் ஈழப் பெண்கள்.

வீடுகளுக்குள் அடுப்படிக்குள் முடங்கிக் கிடந்த பெண்கள், பெரும் சரித்திர நாயகர்களாகியது ஈழத்தில்தான். ஆண் தளபதிகளுக்கு நிகரான பெண் தளபதிகளும், அரசில் போராளி ஆளுமைகளாக பெண் போராளிகளும் பொறுப்பாளர்களும் ஈழச் சமூகத்தையே வழிநடத்திய காலம் மௌனிக்கப்பட்டு பத்தாண்டுகள் ஆகின்றன. இன்று சிங்கள இராணுவத்தின் கொடும் ஆக்கிரமிப்பு சூழலில் பல வகையிலும் பெண்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர். இராணுவத்தினர் ஈழப் பெண்களை மணந்து அவர்களையும் அவர்களின் குழந்தைகளையும் சிங்களவர்களாக்க பல்வேறு எத்தனங்களை மேற்கொள்ளுகின்றனர். சோதனைச்சாவடிகளில் நின்ற இராணுவத்தினர் சிலர் குடும்ப உறுப்பினர்களாகியுமுள்ளனர்.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் வேலை வாய்ப்பு மூலம் பல ஆயிரம் ஈழப் பெண்கள் இராணுவப் பொறிக்குள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளனர். தோட்டங்களில் வேலை, முன்பள்ளிகளில் வேலை என்று உள்ளீர்க்கப்பட்டவர்களுக்கு தற்போது இராணுவ பயிற்சியும் இராணுவச் சீருடையும் வழங்கப்படுகின்றது. வங்கிக் கடன்களையும் நுண் கடன்களையும் அவர்களைப் பெற வைத்துவிட்டு, இன்று அவர்கள் வேலையை துறக்க முடியாதவர்களாய் தெற்கு இராணுவ முகாங்களில் ஆயுதப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகளை வீடுகளில் தவிக்க விட்டுவிட்டு இராணுவச் சீருடைகளுடன் காடு மலைகளில் ஆயுதப் பயிச்சி எடுக்கிறார்கள்.

ஈழத்தில் இன்றுள்ள பல வைத்தியசாலைகளில் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு பெண்கள் இறப்பது அதிகரித்துவிட்டது. குழந்தைப் பேறின் போது அவர்களின் திடீர் மரணங்களை எதிர்த்து போராட்டங்களும் நடந்திருக்கின்றன. அத்துடன் பல்வேறு பெண்கள் கருப்பை பாதிப்பு நோய்களுக்கு ஆளாகி கருப்பை நீக்கப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. மகிந்த ராஜபக்சவின் காலத்தில் கிளிநொச்சியில் பெண்களுக்கு கட்டாயகருத்தடை செய்யப்பட்ட நிகழ்வுகள் உலகமே அறிந்தது. அப்படியிருக்கையில், பெண்களின் மரணங்களும், கருப்பை நோய்களும் எதேர்ச்சையானவை என்று எப்படி எடுப்பது?

இன்று ஈழத்தில் மற்றொரு சிக்கலாக நீள்வது பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கைப் போராட்டம் ஆகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் குடும்ப சிதைவுகள் முறிவுகளுக்கு எதிராக பல்வேறு உளவியல் நடவடிக்கைககள் முன்னெடுக்கப்பட்டன. வீட்டுக்கு வீடு பல்வேறு தொண்டர்கள் பயணங்களை செய்து உரையாடல்களை நடாத்தி, சின்னச் சின்னப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டன. போருக்குப் பிந்தைய சூழல், சிக்கலான அரசியல் நில-வரம், இராணுவ ஆக்கிரமிப்பு என்று இன்னோரன்ன காரணங்களால் ஈழத்தில் குடும்பங்கள் சிதைகின்ற நிலமை அதிகரித்துச் செல்கின்றது.

ஏற்கனவே போரினால் லட்சம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். ஒரு சிறுபான்மை இனத்தின் பெண்கள், பெரும்பான்மையாக விதவைகளாக்கப்பட்டுள்ளார்கள் என்றால், அந்த இனம் எப்படி இலக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதை புரிந்துகொள்ளலாம். குறிப்பாக அந்த இனத்தின் பெண்கள் எவ்வாறு இன அழிப்பில் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ளலாம். போரினாலும் குடும்ப முறிவுகளாலும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பெருகி விட்டன. விடுதலைப் புலிகள் காலத்தைப் போல மறுமணங்களோ, அது தொடர்பான விழிப்புணர்களோ இன்று இல்லை.

இத்தனை படிகளையும் தாண்டி வாழ்கின்ற ஈழப் பெண்கள் இன்னொரு பாரிய குழியில் சிக்கி வீழ்கின்றனர். நுண்கடன் என்ற பெரும் பூதம் ஈழப் பெண்கள் பலரது வாழ்க்கையை சிதைத்து வருகிறது. கிளிநொச்சியில் ஒரு ஆசிரியரின் மனைவி, நுண்கடன்களைப் பெற்றார். அதனை செலுத்த முடியாமல் தனது மூன்று பிள்ளைகளை விட்டுவிட்டு, களவாக முஸ்லீம் நாடோன்றிற்கு தப்பிச் சென்றார். அந்த ஆசிரியர் இன்னொரு திருமணம் செய்து, மீண்டும் அந்தக் குடும்பத்தையும் பிரிந்து தனது வேலையையும் இழந்தார். அந்த மூன்று குழந்தைகளையும் கண்கொண்டு பார்க்க முடியாது.

வடக்கு கிழக்கில் நுண்கடன் தொல்லைகளால் கிட்டத்தட்ட, நூற்றைம்பதிற்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். அவர்களில் பெண்கள்தான் கூடுதலானவர்கள். நுண்கடன்களை இரத்து செய்வதாக இலங்கை அரசு அறிவித்தபோதும், நுண்கடன் நிறுவனங்கள் மூடப்படவில்லை. தொடர்ந்தும் அவை இயங்குகின்றன. தொடர்ந்தும் பல வீட்டுப் பெண்களின் வாசல்களில், மாலை வேளைகளில் நுண்கடன் கொடுப்பவர்கள் நிற்கிறார்கள். பாலியல் இலஞ்சம் கேட்டு, பெண் தலைமைத்துவ குடும்பங்களை துன்புறுத்தி அழிக்கின்ற செயற்பாடும் இன்னமும் நடந்து கொண்டுதானிருக்கிறது.

இத்தனை அவலங்களையும் ஈழநாடு அனுபவிக்கின்றபோதும், ஈழத்தில் இரண்டு நம்பிக்கை பெண் முகங்கள் உள்ளன. ஒன்று கல்வியில் முன்னேறுகின்ற வீறு நடைபோடுகின்ற மாணவிகள். மற்றையவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காய் போராடும் ஈழத் தாய்மார்கள். தன்னுடைய பிள்ளைக்காகவும் தன்னுடைய கணவருக்காகவும் ஈழத்து நகரங்களில் போராடும் பெண்கள்தான், இன்றைய ஈழப் பெண்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலைக்காகவும் நீதிக்காகவும் மாத்திரமின்றி ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் நீதிக்காகவும் விடுதலைக்காகவும் அவர்கள் போராடுகின்றனர். தமிழர் தலைமைகள் சிதைந்து, வழிமாறியுள்ள காலத்தில் இத் தாய்மாரே நீதியை நோக்கி ஈழத்தை இழுத்துச் செல்லுகின்றனர். இனப்படுகொலைப் போரின் நீதியை வேண்டும் இந்த ஈழ முகங்களும் கல்வியில் வீறுநடை போடும் பெண்களும் போரினால் காயப்படுத்தப்பட்ட எம் தேசத்திற்கு தம் சிந்தனையாலும் முகங்களாலும் உயிருட்டுகின்றனர்.

# சஹ்ரானுடன் தொடர்பு எனக் கூறிய விமலுக்கு எதிராக ரிஷாட் பதியுதீன் சி.ஐ.டி யில் முறைப்பாடு




PARLIAMENT

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிசஹ்ரானையும் தன்னையும் தொடர்புபடுத்தி, அமைச்சர் விமல் வீரவன்ச வேண்டுமென்றே தெரிவித்தபொய்யான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், இன்று (10) குற்றப்புலனாய்வுதிணைக்களத்திடம் முறைப்பாடொன்றை செய்துள்ளதாகவும், இது தொடர்பில் அவரை விசாரணை செய்து, உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு சி.ஐ.டி யினரிடம் வேண்டுகோள்விடுத்துள்ளதாகவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட்பதியுதீன் தெரிவித்தார்.

"ரிஷாட்பதியுதீனின் சகோதரர், ஈஸ்டர் தற்கொலை குண்டுதாரி சஹ்ரானுக்குதொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார். அந்த அழைப்பின் பின்னர், அவர் தனது சகோதரரானரிஷாட் பதியுதீனுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். அதன் பின்னர் மீண்டும் அவர் சஹ்ரானுக்கு அழைப்பை மேற்கொண்டுள்ளார்.

இந்த விடயத்தை பொலிசார் எம்மிடம்தெரிவிக்கவில்லை. மதிப்பிற்குரிய கர்தினால் அவர்களிடமே தெரியப்படுத்தியுள்ளனர்.

அவரது சகோதரர் கைதான போது, அவர் இதனை வியாபார ரீதியிலான தொலைபேசி அழைப்பு" என்று கூறியுள்ளார். அமைச்சர் விமல்வீரவன்ச நேற்று (09) இடம்பெற்ற "இஸ்லாமிய அடிப்படைவாதம்: உயிர்த்த ஞாயிறு ஆணைக்குழுக்கு அப்பால்" - பொதுபிரச்சாரம்" என்ற நிகழ்விலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



**விமலுக்கு எதிராக சி.ஐ.டி யி-னரிடம் முறைப்பாடொன்றை கையளித்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்ரிஷாட் பதியுதீன் கூறியதாவது,** உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றதிலிருந்து, விமல் வீரவன்ச என்னைப் பற்றி மிகவும் மோசமான, பொய்யான குற்றச்சாட்டுக்களைகட்டவிழ்த்து வருகின்றார். பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும், சி.ஐ.டி யினரின்விசாரணைகளிலும் என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே பொய்யெனநிரூபிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அண்மையில் வெளிவந்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும், எனக்கும் இந்த தாக்குதல் சம்பவத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் என்னைப் பற்றி விமல் வீரவன்சபல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வந்தார்.

அத்துடன், என்மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத பட்சத்தில், தான் அரசி-யலில் இருந்து வெளியேறுவதாகவும் சூளுரைத்தார். எனவே, அவர் இந்தச் சந்தர்ப்பத்தில், அரசியலில்இருந்து வெளியேறி, தான் கூறியதை செய-லில் காட்ட வேண்டும். தவிர நேற்று மாலை மீண்டும்ஒரு பெரிய பொய்யை கூறியுள்ளார்.

எனவேதான் இன்று அதற்கெதிராக முறைப்பாடு செய்துள்ளேன்.அதுமாத்திரமின்றி, எனது சட்டத்தரணி ஊடாக விமலுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தயாராகிவருகின்றேன்.

விமலின் பேச்சுக்கள் அப்பட்டமான பொய்யாகும். இதுவரை காலமும் கூறியது போன்றே இப்போதும் கூறியுள்ளார். சஹ்ரானைஎந்தக் காலத்திலும் நான் சந்திக்கவில்லை. அதேபோன்று, எனது சகோதரரும்சந்திக்கவுமில்லை, பேசவுமில்லை. அவருக்கும் எங்களுக்கும் இடையிலே எந்தத் தொடர்பும்கிடையாது. இதைத்தான் நான் அன்றும் சொன்னேன், இன்றும் சொல்கின்றேன். இவ்வாறான அபாண்டங்களைகூறி வரும் விமல் பற்றி எல்லோருக்கும் தெரியும். அவரது தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றி விமர்சிப்பதற்கு எனக்கு விருப்பமில்லை. ஆனால், அவருக்கு இரண்டு பிறந்ததினம், இரண்டு அடையாள அட்டைகள், இரண்டு கடவுச்சீட்டுக்கள்.

"இலங்கையில் இவ்வாறு எவருக்குமே இல்லை. அவ்வாறானவர்தான் இந்தவிமல். நாட்டு மக்களிடம் ஒன்றைக் கூறவிரும்புகின்றேன். விமல் வீரவன்ச, தனது அரசியல் இருப்புக்காகவே இவ்வாறுசெய்கின்றார். என் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்குமாறு விமலிடம்சவால் விடுகின்றேன். அத்துடன், எனது முறைப்பாட்டை சி.ஐ.டி விசாரணை செய்யவேண்டுமெனவும் நான் எதிர்பார்க்கின்றேன்" என்றார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், சந்தேக நபர் ஒருவரை விடுவிக்குமாறு இராணுவத்தளபதிக்கு அழுத்தம் கொடுத்ததாக, உங்கள்மீது குற்றச்சாட்டொன்று இருக்கின்றதே" என்ற ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ரிஷாட் பதியுதீன் எம்.பி, "நான் அவருக்கு எந்த அழுத்தமும் கொடுக்கவில்லை".

எனது மாவட்டத்தைச் சேர்ந்த மொய்னுதீன் என்பவரின் மகன் ஒருவரை முகமூடி அணிந்தவர்கள், அவரது வீட்டுக்கு வந்து கொண்டு சென்றதாகவும், அவர் எங்கு இருக்கின்றார் என்பதுதொடர்பில் அறிந்து கூறுமாறு அவரது குடும்பத்தார் என்னிடம் வேண்டினர்.

நான் இதுதொடர்பாக பொலிஸ் உயரதிகாரிகள் பலருடன் தொடர்புகொண்டு தகவல்களை பெறமுடியாது போகவே, முன்னாள் இராணுவத் தளபதியிடம் தொலை-பேசியில் விசாரித்தேன். அதுவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசிங்க, தங்களிடம் அவ்வாறான ஒரு நபர் இல்லையெனவும், இராணுவத்திடம் கேட்டுப் பாருங்கள் என்றார்.

அதன் பின்னர் தான், இராணுவத் தளபதிக்கு தொலைபேசி அழைப்பைஏற்படுத்தி, இவ்வாறானவர் இருக்கின்றாரா? எனக் கேட்ட போது, இராணுவத் தளபதி, "இப்போதுகூறமுடியாது. மீண்டும் அழையுங்கள்" என்றார்.

இராண்டாவது முறை நான் அவரிடம் கேட்டபோது, "அவ்வாறான ஒருவர் இருக்கின்றார்" எனக் கூறினார். அதை விடுத்து, நான் எந்தசந்தர்ப்பத்திலும், எவரி-டமும் அந்த நபர் தொடர்பில் எந்தவொரு அழுத்தமும் வழங்கவில்லை" என்றார்.

**- மன்னார் நிருபர் (10-03-2021)**

# மீண்டும் நீதி கோரி நெடுந்தூரம் நடக்கும் ஒரு போராட்டப் பயணம்



அன்னை அம்பிகை அவர்களின் உணவுத்தவிர்பு போராட்டத்திற்கு ஆதரவான நீதிகோரி நடைப்பயணம்.

சிங்கள இனவெறி அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துவது உள்ளடங்கிய 4 அம்சக் கோரிக்கையை முன் வைத்து பிரித்தானியாவில் சாகும் வரை உணவுத்தவிர்ப்பு போராட்டத்தை தொடரும் அம்மா அம்பிகை செல்வகுமார் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் பொருட்டு கனடாத் தமிழ் மக்கள் சார்பாக வரும் ஞாயிற்றுக்கிழமை (14-03-2021) காலை 9.00 மணிக்கு ஆரம்பம். ஒன்றாரியோவில் உள்ள நகரமான Barrie.

நகரசபை மண்டபவாயிலில், 70 கோலியர் வீதியில் இருந்து ஆரம்பித்து லழபெ ளவசநநவ தெற்கு நோக்கு நடந்து இவ் வழியாக Toronto நகரில் அமைந்துள்ள ஐ.நா சபை காரியாலயம், 200 Bay Street இந்திய துணைத் தூதரகம், 365 Bloor St, Toronto பிரித்தானிய தூதுவராலயம், 777 Bay St Toronto, Ontario பாராளுமன்ற முன்றலில் வியாழக்கிழமை 18-03-2021 அன்று நிறைவு பெறும். இறுதியில் நான்கு இடங்களிலும் மகஜர் கையளிக்கப்படும்.




இவ் நடைபயணத்தில் இரண்டாவது தடவையாகவும் பங்கு கொள்வதற்கு திரு. அருட் சகோதரன், டேவிட்தோமஸ், திரு. வைசீகமணி யோகேந்திரன், மகாஜெயம் மகாலிங்கம், விஜதரன் வரதராஜா ஆகியோர் தலைமைதாங்கும் முக்கியஸ்தர்களாக செயலாற்ற தம்மை அர்ப்பணித்துள்ளனர். இம் நால்வரும் Brampton to Ottawa நடைபயணத்தின் செயல் உணர்வாளர்கள்.

எம் இனிய கனடா வாழ் தமிழினமே! அன்னை அம்பிகை செல்வகுமாரின் கோரிக்கைக்கு ஆதரவு கொடுக்க வேண்டியது எமது தார்மீகக் கடமையாகும். அனைவரும் அணி திரண்டு நடை பயணத்தை வெற்றியாக்கி எமது உரிமைகளை வென்றெடுக்க வாருங்கள் வரும் ஞாயிற்றுக்கிழமை Barrie இல் அணி திரள்வோம். நடைப்பயணத்தில் பங்கு கொள்வோம் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் ஒருங்கினைப்பாளர்கள்.

கண்ணன் (647) 808-7766, டேவிட்தோமஸ் (647) 852-3141
யோகன் (613) 854-3336, மகாஜெயம் (642) 262-5587, விஜி (647) 783-3466

# Canada Thanks Indian Prime Minister Modi for Sending Covid-19 Vaccines: Digital Video Signs Display on Main Highways

# கோவிட் – 19 தடுப்பு மருந்துகள் அனுப்பியதற்காக இந்தியப் பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவிக்கும் கனடா:

## கனடிய பெருந்தெருக்களில் நன்றி தெரிவித்து ஒளியூட்டும் டிஜிட்டல் பதாகைகள்

கனடியப் பிரதமரும் கனடிய அரசாங்கமும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கனடாவிற்கு அரை மில்லியன் கோவிட்-19 தடுப்பு மருந்துக் குப்பிகளை அனுப்பியதற்காக இந்தியப் பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவிக்கும் செய்திகளை கனடியப் பிரதமர் மற்றும் கனடிய அமைச்சர்கள் ஆகியோர் அனுப்பியுள்ளதாக எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளையில் சில கனடிய பெருந்தெருக்களில் பிரதமர் மோடி அவர்களுக்கு நன்றி தெரிவித்து ஒளியூட்டும் டிஜிட்டல் பதாகைகள் அழகிய முறையில் மக்கள் பார்ப்பதற்காக நிறுத்திவைக்கப்பட்டுதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.




கனடிய அரசு கேட்டுக்கொண்டதற்கு அமைய இந்திய அரசு 2 மில்லியன் கோவிட்-19 மருந்துக் குப்பிகளை வழங்க சம்மதம் தெரிவித்திருந்ததாகவும், இந்தியப் பிரதமர் இது தொடர்பாக கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்களுக்கும் தொலைபேசி மூலமான உரையாடலின் போது மகிழ்ச்சியுடன் தெரிவித்ததாகவும் அறியப்படுகின்றது.

இந்தியாவின் AstraZeneca நிறுவனத்தின் தயாரிப்பான இந்த கோவிட்-19 தடுப்பு மருந்தை கனடிய சுகாதாரப் பணியகத்தின் மருத்துவ விஞ்ஞானிகள் அங்கீகரித்த பின்னரே முதற்கட்ட தடுப்பு மருந்துகள் கடந்த 4ம் திகதி கனடாவிற்கு விமானம் மூலமாக அனுப்பப்பட்டன. அவற்றை ஓக்வில் தொகுதி பாராளுமன்ற உறுப்பிரும் கனடாவின், பொதுச் சேவைகள் மற்றும் அரச கொள்வனவு அமைச்சரான அனிற்றா ஆனந்த் அவர்கள் நேரடியாக பொறுப்பேற்றார். இவர் இந்தியாவின் தமிழ்நாட்டை பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஒன்றாரியோ அரசு தேவாலயங்களிலும் பார்க்க மதுக்கடைகளில் அதிகமானவர்களை அனுமதிப்பது எப்படி?

## மதபோதகர்கள் சிலர் கேள்வி எழுப்புகின்றனர்

ஒன்றாரியோ அரசு தற்போது அறிவித்துள்ள புதிய சாம்பல் நிற பிரதேசங்களில் மக்களை வேறுபட்ட இடங்களுக்கு அனுமதிக்கும் விடயத்தில், தேவாலயங்களிலும் பார்க்க மதுக்கடைகளில் அதிகமானவர்களை அனுமதிப்பது எப்படி?

ஏன ரொரன்ரோவில் உள்ள மதபோதகர்கள் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். ஒன்றாரியோ அரசானது திங்கட்கிழமை தொடக்கம் ரொண்டோ மற்றும் பீல் பிராந்தியம் “சாம்பல் நிற பிரதேசத்திற்குள்” நுழைய உள்ள நிலையில், டொராண்டோ பேராயர் உட்பட சில மதபோதகர்கள் மதக் வழிபாடுகள் மீதான தொடர்ச்சியான கட்டுப்பாடுகளுக்கு எதிராக குரல் எழுப்பியுள்ள இதே வேளையில் “எங்கள் நம்பிக்கைகளுக்கு எதிராகவும் சமூகங்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படும் ஏற்றத்தாழ்வுகள் இவை” என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

திங்கட்கிழமை அதிகாலை 12:01 மணி நிலவரப்படி, டொராண்டோ மற்றும் பீல் பிராந்தியத்தில் கடுமையான மக்கள் அனுமதிக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன, இது பெரிய வர்த்தக வளாகங்கள் உட்பட அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களில் 25 சதவீத மக்கள் தொகை கட்டுப்பாட்டுடன் மீண்டும் திறக்க அனுமதிக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் ஆனது திருமணங்கள் மற்றும் அரண இறுதிச் சடங்குகள் போன்றவையும் சற்றே பெரிய மத வழிபாட்டு கூட்டங்களையும் அனுமதிக்கிறது, இது உட்புற விழாக்களுக்கு ஐந்து முதல் 10 பேர் வரை அதிகரிக்கும், இருப்பினும் வழக்கமான உட்புற சேவைகள் இன்னும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் கிறிஸ்த்தவ தேவாலயங்களுக்கு வெள்ளிக்கிழமை அனுப்பிய கடிதத்தில், கார்டினல் தாமஸ் காலின்ஸ், புதிய திறக்கும் திட்டமானது, தேவாலயத்தின் இடவசதியைப் பொருட்படுத்தாமல் மதக் கூட்டங்களை நியாயமற்ற முறையில் நடத்த முடியாமல் தடுக்கின்றது.

“எங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் உணர்வுபூர்வமாக மத சுதந்திரத்தை நசுக்க விரும்புகிறார்கள் என்று நாம் நம்பவேண்டிய நிலையில் உள்ளோம். அவர்கள் மிகவும் கடினமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர்கின்றோம் எவ்வாறாயினும், நாங்கள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்”, என்று மதபோதகர்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

“இவற்றில் எது மிகவும் அவசியமானது என்று நாங்கள் கருதுகிறோம்?” என்று காலின்ஸ் கேட்டார். தொற்றுநோய் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும், “நாங்கள் எங்கள் செயல்களில் விவேகமுள்ளவர்களாக இருக்க வேண்டும்” என்றும் வலியுறுத்தியுள்ள மதபோகர்கள் ஆயினும், வழிபாட்டுத் தலங்கள் மீதான கட்டுப்பாடுகள் “தன்னிச்சையாக எடுக்கப்படுகின்ற முடிவுகளால் வழிபாடு செய்ய விரும்புவர்களை பாதிக்கின்றது எனவே இதனை எதிர்த்து நாம் குரல் எழுப்ப வேண்டும்” என்று கோருவதற்கு திருச்சபை உறுப்பினர்கள் தங்கள் உள்ளூர் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

டொராண்டோ மற்றும் பீல் பிராந்தியத்தில் திங்கட் கிழமை முதல் நடைமுறைக்கு வரும் ஒரு மாற்றமே சில்லறை விற்பனையாளர்களுக்கு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட மறு திறப்பு என்றே கூறப்படுகின்றது.

# கொரோனா பெருந்தொற்றால் அமெரிக்காவில் இறப்பு அதிகரித்துள்ள போதிலும் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக அமெரிக்காவில் மக்கள் இறப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதும் பிறப்பு வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. என அறியப்பட்டுள்ளது. இது பற்றி ஒரு அரச அதிகாரி கருத்துத் தெரிவிதக்கையில் மக்கள் அதிக நேரம் வீட்டில் செலவிட்டபோதும் அமெரிக்காவில் பிறப்புக்கள் வீதம் குறைந்திருப்பது ஆச்சரியத்தைத் தருகின்றது என்றார்.

அமெரிக்காவில் கடந்த 10 ஆண்டுகளாகவே பிறப்பு வீதம் குறைந்து வருகிறது. 2019ஆம் ஆண்டின் பிறப்பு வீதம் கடந்த 35 ஆண்டுகளில் இல்லாத அளவு குறைவாக இருந்தது. ஆனால், 2020இல் இது மேலும் சரிந்தது.

2021ஆம் ஆண்டு மேலும் 3 இலட்சம் குழந்தைகள் குறைவாகப் பிறக்கும் என்று புரூகிங்ஸ் இன்ஸ்டிடியூ‘ன் என்ற சிந்தனைக் குழாம் நடத்திய ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

வேலைச் சந்தையில், கொரோனா பெருந்தொற்று கொந்தளிப்பான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இதனால், பெண்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், பல ஜோடிகள் கருத்தரிப்பதை தள்ளிப் போடுவதாகவும், பாலுறவு கொள்வது குறைந்துவிட்டதாகவும், பெருந்தொற்று, அதனால் ஏற்படும் செலவுகளைக் கணக்கிட்டு குறைவாகவே குழந்தை பெற விரும்புவதாகவும் கணக்கெடுப்புகள் காட்டுகின்றன என்று குட்மாச்சர் இன்ஸ்டிடியூட் குறிப்பிட்டுள்ளது. பல ஆண்டுகளாக அமெரிக்காவில் பிறப்பு வீதம் குறைந்துவருவதால், குழந்தை நலத்திட்டங்கள், வரிச் சலுகைகள் தருவது பற்றி அரசியல் தலைவர்கள் யோசித்து வருகிறார்கள்.

# திமுகவுக்குத் தமிழக வரலாற்றிலேயே இல்லாத வெற்றி கிடைக்கும்: வேல்முருகன் உறுதி



அதிமுக கூட்டணி நாளுக்கு நாள் பலவீனமாகிக் கொண்டிருக்கிறது எனவும் திமுக கூட்டணிக்குத் தமிழக வரலாற்றிலேயே இல்லாத வெற்றி கிடைக்கும் என்றும் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். திமுக கூட்டணியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் பண்ருட்டியில் போட்டியிடுகிறார். உதயசூரியன் சின்னத்தில் களம் காண உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் திமுக தலைவர் ஸ்டாலின் ஆகிய இருவரும் இன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கையெழுத்திட்டனர்.

இதைத் தொடர்ந்து வேல்முருகன் இன்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், ''ஏற்கெனவே கட்சியின் செயற்குழு, பொதுக்குழு ஒன்றுகூடி பண்ருட்டி தொகுதி அல்லது கூட்டணிக் கட்சியில் எந்தத் தொகுதியில் இடம் கிடைத்தாலும் நான் போட்டியிட ஏகமனதாக ஒப்புதல் வழங்கி உள்ளது. பண்ருட்டி தொகுதியில் பொது மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்று, என்னாலான பணிகளைத் தமிழ்ச் சமூகத்துக்குச் செய்வேன். ஏற்கெனவே பண்ருட்டி தொகுதியில் 2 முறை எம்எல்ஏவாக இருந்து மக்களுக்காகப் போராடி உள்ளேன். அதிமுக கூட்டணி நாளுக்கு நாள் பலவீனமாகிக் கொண்டிருக்கிறது. திமுக தலைமையிலான கூட்டணி பலம் பெற்றுக் கொண்டிருக்கிறது. தேமுதிக மாநிலம் முழுவதும் தொகுதிகள்தோறும் 5 அல்லது 6 ஆயிரம் வாக்குகளைப் பெறும். அந்த ஓட்டுகள் அனைத்தும் உடைகின்றபோது அல்லது டிடிவி தினகரனுடன் அணி சேரும்போது, தமிழகம் முழுவதும் திமுக தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெறும். இதுவரை தமிழக வரலாற்றிலேயே இல்லாத வெற்றியாக இது அமையும்'' என்று தெரிவித்தார்.

# ‘அமமுக 2வது வேட்பாளர் பட்டியல் : கடம்பூர் ராஜூவை எதிர்த்து டிடிவி.தினகரன் போட்டி: காலையில் சேர்ந்த ராஜவர்மனுக்கு சாத்தூர் தொகுதி



2வது வேட்பாளர் பட்டியல் வெளியானது. கோவில்பட்டி தொகுதியில் அமைச்சர் கடம்பூர் ராஜூவை எதிர்த்து டி.டி.வி. தினகரன் நிற்கிறார். இதனால் அங்கு போட்டி கடுமையாகிறது. அதிமுகவில் சீட் கிடைக்காததால் விலகி அமமுகவில் இணைந்த ராஜவர்மனுக்கு சாத்தூர் தொகுதி அளிக்கப்பட்டுள்ளது.

அமமுக முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்ட நிலையில் இரண்டாம் கட்ட வேட்பாளர் பட்டியலை இன்று வெளியிட்டது. இதில் கட்சியின் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் ஆர்.கே.நகரில் சட்டப்பேரவை உறுப்பினராக உள்ள நிலையில் அங்கு போட்டியிடுவார் என எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில் அவர் கோவில்பட்டி தொகுதியில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவில்பட்டியில் அமைச்சர் கடம்பூர் ராஜூ வேட்பாளராக மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து டிடிவி தினகரன் போட்டியிடுவதன் மூலம் போட்டி கடுமையாகியுள்ளது.கோவில்பட்டி தொகுதி பாரம்பரியமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ச்சியாக வெல்லும் தொகுதி. 2006 ம் ஆண்டு முதல் அதிமுக இங்கு தொடர்ச்சியாக வெற்றிப்பெற்று வருகிறது.இம்முறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திமுக கூட்டணியில் வலுவாக களம் இறங்குவதால் போட்டி கடுமையாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில் கடம்பூர் ராஜூக்கு மேலும் சிக்கலை அளிக்கும் விதமாக டிடிவி களம் இறங்கியுள்ளார்.அதேபோல் அதிமுகவில் சீட் கிடைக்காத சாத்தூர் எம்.எல்.ஏ ராஜவர்மன் இன்று காலை அமமுகவில் இணைந்தார்.

அதிமுகவில் சீட் கேட்ட அவருக்கு சாத்தூர் தொகுதியை கட்சித்தலைமை ஒதுக்காமல் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி பேச்சைக்கேட்டு வேறு நபருக்கு சாத்தூர் தொகுதியை ஒதுக்கியதால் தான் விலகி அமமுகவில் இணைவதாக அவர் தெரிவித்தார்.இந்நிலையில் காலையில் கட்சியில் இணைந்து விருப்பமனு அளித்த அவருக்கு இரண்டாவது வேட்பாளர் பட்டியலில் சாத்தூர் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அமமுக வேட்பாளர் பட்டியல் வருமாறு: 1.கோவில்பட்டி டிடிவி தினகரன், 2.குடியாத்தம் ஜெயந்தி பத்மநாபன், 3. ராமநாதபுரம் முனுசாமி, 4.திருநெல்வேலி பாலகிருஷ்ணன் என்கிற பால்கண்ணன், 5. திருப்போரூர் கோதண்டபாணி, 6.கிணத்துக்கடவு ரோகிணி கிருஷ்ணகுமார், 7.மன்னச்சநல்லூர் தொட்டியம் ராஜசேகரன், 8.முதுகுளத்தூர் முருகன், 9.மதுரவாயல் லக்கி முருகன், 10. மாதவரம் தட்சிணாமூர்த்தி, 11.பெரம்பூர் லட்சுமி நாராயணன், 12.சேப்பாக்கம் எல்.ராஜேந்திரன், 13.அணைக்கட்டு சத்யா என்கிற சதீஷ்குமார், 14. திருப்பத்தூர் ஞானசேகர், 15. ஓசூர் மாரே கவுடு, 16. செய்யாறு வரதராஜன், 17. செஞ்சி கௌதம் சாகர், 18. ஓமலூர் கேகே மாதேஸ்வரன், 19. எடப்பாடி பூக்கடை சேகர், 20.பரமத்திவேலூர் பிபி சாமிநாதன், 21. திருச்செங்கோடு ஹேமலதா, 22.அந்தியூர் செல்வம், 23. குன்னூர் கலைச்செல்வன், 24. பல்லடம் ஜோதிமணி, 25.கோவை வடக்கு அப்பாதுரை, 26.திண்டுக்கல் ராமதேவர், 27.மன்னார்குடி காமராஜ், 28. ஒரத்தநாடு மா சேகர், 29. காரைக்குடி தேர்போகி பாண்டி, 30. ஆண்டிபட்டி ஜெயக்குமார்,31. போடிநாயக்கனூர் முத்துசாமி, 32. ஸ்ரீவில்லிபுத்தூர் சங்கீதப்பிரியா சந்தோஷ்குமார், 33. சிவகாசி சாமிகாளை, 34.திருப்பரங்குன்றம் மதுரை, 35.மானாமதுரை மாரியப்பன் கென்னடி, 36. தாம்பரம் கரிகாலன், 37.திருவையாறு கார்த்திகேயன், 38.தியாகராயநகர் பரமேஸ்வரன், 39. திருப்பூர் தெற்கு விசாலாட்சி, 40. விழுப்புரம் பாலசுந்தரம், 41.சாத்தூர் ராஜவர்மன், 42.பொன்னேரி பொன் ராஜா, 43. பூந்தமல்லி, ஏழுமலை, 44. அம்பத்தூர், வேதாச்சலம், 45. சேலம் தெற்கு வெங்கடாசலம்.

# தேர்தலுக்கு பின்னர் உண்மையான அதிமுக தொண்டர்கள் ஒன்றாக இணைவோம்: டி.டி.வி. தினகரன்

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பின்னர் உண்மையான அதிமுக தொண்டர்கள் ஒன்றாக இணைவார்கள் என்று டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து டி. டி. வி. தினகரன் செய்தியாளர்களிடம் கூறும்போது, “ அதிமுக ஜெயலலிதா, எம்,ஜி.ஆர் கட்சி. அதிமுகவை மீட்டெடுப்பதற்கு தான் அமமுக உருவாக்கப்பட்டது. ஜனநாயக முறையில் நாங்கள் இதில் வெற்றி பெறுவோம். தேர்தலுக்கு பின்னர் உண்மையான அதிமுக தொண்டர்கள் ஒன்றாக இணைவோம்.'' எனக் கூறினார்.


இந்த நிலையில் அதிமுகவின் சாத்தூர் தொகுதி எம்எல்ஏ ராஜவர்மன் மீண்டும் வாய்ப்பு வழங்கபடாததால் தினகரனுடன் இன்று சந்திப்பில் ஈடுபட்டிருக்கிறார். முன்னதாக, சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் தேமுதிக சார்பில் கேட்கப்பட்ட தொகுதி எண்ணிக்கையும், தொகுதிகளையும் ஒதுக்குவதில் முரண் ஏற்பட்டது. தொகுதி உடன்பாடு ஏற்படாத காரணத்தினால், கூட்டணியில் இருந்து விலகுவதாக, தேமுதிக தலைவர் விஜயகாந்த் அண்மையில் அறிவித்தார். இதைத் தொடர்ந்து 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடத் திட்டமிட்டு வருவதாக விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் தெரிவித்திருந்தார். இந்நிலையில், கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் கட்சி, தங்கள் கூட்டணியில் இணையுமாறு தேமுதிகவுக்கு அழைப்பு விடுத்திருந்தது. எனினும் தேமுதிக இதுகுறித்து எதுவும் கருத்துத் தெரிவிக்கவில்லை. இதற்கிடையே அமமுக, தேமுதிகவுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பான பேச்சுவார்த்தை நடந்து வருவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார். மார்ச் 12ம் தேதி அமமுக சார்பில் தேர்தல் அறிக்கை வெளியாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# சொன்ன வார்த்தையைக் காப்பாற்றி குமரி மாணவனுக்கு ஷூ வாங்கி அனுப்பிய ராகுல் காந்தி

தேர்தல் பிரச்சாரத்தின்போது, மாணவன் கேட்ட தடகளப் போட்டிக்கான ஷூவை, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி வாங்கி அனுப்பி வைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 1ம் தேதி காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்திதேர்தல் பிரச்சாரம் செய்தார். முளகுமூடு பள்ளிக்கு சென்றபோது, பரைக்கோடு என்னும் இடத்தில் வாகனத்தை நிறுத்தி நடந்து சென்றார். அங்கு காமராஜர் படத்துடன் நின்றிருந்த மாணவனுடன் அமர்ந்து தேநீர் அருந்தியவாறு பேசிக் கொண்டிருந்தார். அந்த மாணவன் அதே பகுதியைச் சேர்ந்த ஆண்டனி சேவியர் என்பவரது மகன் ஆண்டனி பெலிக்ஸ் (11) என்பது தெரியவந்தது.

தடகளப் போட்டியில் சாதனை புரிவதே லட்சியம் என்றும், தடகளப் பயிற்சிக்கான ஷூ தன்னிடம் இல்லை என்றும், மாணவன் கூறியுள்ளான்.



ஸ்போர்ட்ஸ் ஷூவை வாங்கி அனுப்புவதாக, ராகுல் காந்தி உறுதி கூறியுள்ளார். அதன்படி, மாணவன் ஆண்டனி பெலிக்ஸின் வீட்டுக்கு ரூ.5,900 விலையுள்ள ஷூ தபாலில் நேற்று வந்தது. இதுகுறித்து, சிறுவன் ஆண்டனி பெலிக்ஸ் கூறும்போது, ``அழகிய மண்டபத்தில் உள்ள பள்ளியில் 5ம் வகுப்பு படிக்கிறேன். எனது தந்தை தையல் கடைவைத்துள்ளார். 2017ம் ஆண்டில் திருச்சியில் நடைபெற்ற சிறுவர்களுக்கான மாரத்தான் போட்டியில் 51வது இடத்தை பெற்றேன்.

நாகர்கோவிலில் கடந்த ஆண்டு நடந்த மாரத்தானில்11வது இடத்தை பெற்றுள்ளேன். ராகுல் காந்தியிடம் இதனை கூறினேன். அவர் என்னிடம் பேசி ஊக்கப்படுத்தினார். அவர் கூறியவாறு கூரியரில் ஷூ கிடைத்தபோது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இதையடுத்து எனக்கு போன் செய்து பேசிய ராகுல் காந்தி ஷூ அளவு சரியாக இருக்கிறதா? பிடித்திருக்கிறதா? என கேட்டார். மேலும், தடகளப் பயிற்சி பெறுவதற்கு பயிற்சியாளரை விரைவில் ஏற்பாடு செய்து தருவதாக என்னிடம் உறுதியளித்தார். என் வாழ்நாளில் இதை மறக்க மாட்டேன்.

தடகளப் போட்டியில் சாதிப்பேன் என நெகிழ்ச்சியுடன் கூறினார் மாணவன் ஆண்டனி பெலிக்ஸ்.

# தமிழினம் மீதான போர்க்குற்றங்களுக்காக இலங்கை அரசை தண்டிக்க எடுக்கும் முயற்சிகளை தனது அரசு ஆதரிக்கும் என்கிறார் ஒன்றாரியோ முதல்வர்




நேற்று வியாழக்கிழமை மாலை இணையவழி மூலமாக நடத்தப்பெற்ற 'ஒன்றாரியோ முதல்வருடன் நெருக்கமான உரையாடல்' என்ற தலைப்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட முதல்வர் அவர்கள் அங்கு கலந்து கொண்ட பல தமிழர் சமூகத்தின் பிரதிநிதிகளோடு மனந்திறந்து உரையாடினார். அதேவேளை அவர்கள் முன்வைத்த கேள்விகளுக்கும் தகுந்த பதில்களை நேர்மையுடன் வழங்கினார்.

'ஒன்றாரியோ முதல்வருடன் நெருக்கமான உரையாடல்' என்ற தலைப்பில் இடம்பெற்ற மேற்படிக் கலந்துரையாடலை ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதியின் மாகாண அரசின் உறுப்பினர் விஜேய் தணிகாசலம் ஏற்பாடு செய்து வழி










நடத்தினார்.
முதலில் அவர் உரையாற்றும் போது "எமது ஒன்றாரியோ அரசானது இந்த நெருக்கடியான கோவிட்-19 தொற்று காலத்திலும் மக்களுக்கு நல்ல பணியை ஆற்றுகின்றது. குறிப்பாக ஸ்காபுறோவில் உள்ள பல தொகுதி வாழ் மக்கள் வாழ்த்தும் வண்ணம் பல அரிய பணிகளைச் செய்துள்ளது. நிலக்கீழ் புகையிரத சேவைகளை ஸ்காபுறோ நகரின் எல்லை வரை நீடித்து அதனை இன்னும் இரண்டு வருடங்களில் பூர்த்தி செய்வது போன்ற பல திட்டங்களை எமது அரசாங்கம் நிறைவேற்றி வைப்பதில் மிகவும் நேர்மையுடன் செயற்பட்டு வருகின்றது. இதற்கெல்லாம் காரணகர்த்தாவாக விளங்குகின்றன எமது முதல்வரை எமது தமிழர் சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு அறிமுகம் செய்து வைத்து அவர்களோடு நேரடியாக உரையாடுவதற்கு சம்மதம் தெரிவித்த அவருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்" என்றார்

தொடர்ந்து அங்கு கலந்து கொண்ட அனைவருக்கும் தனது நன்றியைக் கூறி தனது உரையை ஆரம்பித்த ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் பின்வருமாறு கருத்துக்களை வழங்கினார்.

"அன்பான தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகளே, நண்பர்களே, உங்களைச் சந்திக்கும் வகையில் இந்த இணையவழி கலந்துரையாடலை ஏற்பாடு செய்த எமது மாகாண அரசின் உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

அவர் எங்கள் குழுவின் முக்கியமான ஒரு பங்காளியாக மாறிவிட்டார். பல பணிகளை விருப்பத்துடன் பொறுப்பேற்று திறம்பட தனது பணிகளைச் செய்து வருகின்றார்.ஓய்வின்றி இந்த மாகாணத்திற்காகவும் வாக்காளர்களாகிய உங்களுக்கும சேவையாற்றுவதில் மகிழ்ச்சியடைகின்றார்.

ஸ்காபுறோ நகரத்தை பல ஆண்டுகளாக மத்திய, மாகாண மற்றும் உள்ளாட்சி அரசாங்கங்கள் புறக்கணித்து வந்தன. ஆனால் தற்போது எமது அரசாங்கம் ஸ்காபுறோவின் அனைத்துப் பகுதிகளுக்கும் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

முக்கியமாக நிலக் கீழ் புகையிரப் பாதைகள் ஸ்காபுறோவின் பல பகுதிகளை இணைக்கின்றது. அத்துடன் இங்குள்ள வைத்தியசாலைகள் சில இயங்க முடியாத சூழ்நிலையில் இருந்தபோது எமது அரசு நிதியை வழங்கி, அந்த வைத்தியசாலைகளை தொடர்ந்து இயங்கவைத்தது.

இதே போன்று பாடசாலைகளில் பயிலும் மாணவ மாணவிகள் தங்கள் கற்கும் நேரத்தில் சுத்தமான காற்றை சுவாசிக்கவும் தகுந்து பாதுகாப்புக் கருவிகளை அணிந்து தற்போதைய கோவிட்-19 நோயின் தாக்கத்திற்கு உள்ளாகாமல் பாதுகாக்கின்றது. எமது தற்போதைய கல்வி அமைச்சர் இந்த பணியைச் சிறப்பாகச் செய்கின்றார். அவருக்கும் எமது அரசாங்கத்தின் அனைத்து அமைச்சர்களுக்கும் துணையாக உங்கள் உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அவர்கள் மிகுந்த சிரத்தையுடன் பணியாற்றி வருகின்றார்" என்று குறிப்பிட்டார்.



அவர் தொடர்ந்து பேசுகையில் ஒன்றாரியோவில் உள்ள தமிழர் அமைப்புக்களின் தேவைக்காக நிதியை வழங்குவதிலும் எமது அரசு எப்போதும் தயங்காது என்ற வாக்குறுதியை வழங்கினார். தமிழ்ச் சமூகத்தில் வர்த்தகம், பொதுப்பணி போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்ட பல வெற்றியாளர்கள் அங்கு கலந்து கொண்டு முதல்வர் அவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் பல கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்
Tel: (416) 754-4024
Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

## அறிவித்தல்

**Scarborough இல் 3333 Finch Avenue East என்ற முகவரியில் அமைந்துள்ள Senior Persons Living Connected (SPLC) நிறுவனம் தமிழ் பேசும் வயது முதிர்ந்த மற்றும் மூத்தோர்களுக்கான பலதரப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றது. நீங்கள் சமூக இடைவெளியைக் கருத்திற்கொண்டு தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்ற இக்காலகட்டங்களில் உங்களுடைய மனநலம் மற்றும் உடல் நலம் சார்ந்த தேவைகளைக் பூர்த்தி செய்யும் வகையில் பொருத்தமான சேவைகளை வழங்கிவருகின்றனர். இணையவழி மூலம் வாரார்ந்த மற்றும் மாதாந்த மெய்நிகர் நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. மேலதிக தகவல்களை இணையத்தளத்திலோ (splc.ca) தொலைபேசி மூலமோ (416 493 3333) பெற்றுக்கொள்ளலாம்.**

# "இலங்கை ஒரு இனநாயக நாடு - சிறுபான்மை மக்கள் நசுக்கப்படுகின்றனர்"




- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இலங்கை ஜனநாயக நாடு அல்ல, அது ஒரு இனநாயக நாடு என்று புதிய அறிக்கை ஒன்று கடுமையாக விமர்சித்துள்ளது.

அங்கு தமிழர்களின் நிலங்கள் திட்டமிட்ட வகையில் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு பெரும்பான்மையின மக்கள் வலிந்து குடியேற்றப்படுகின்றனர் என்று அமெரிக்காவின் கலி:.போர்னியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஒக்லாந்து நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

நாட்டிலுள்ள மக்கள் தொகையின் விகிதாசாரத்தை மாற்றும் வகையில், தமிழ் மக்களின் நிலங்களில் வலிந்த சிங்கள குடியேற்றம் முன்னெடுக்கப்படுகிறது என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இலங்கை முழுவதும் சிங்கள மற்றும் பௌத்த மதத்தின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் வகையில், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நிலங்களை அபகரிக்க இராணுவம் மற்றும் அரசின் இதர அமைப்புகள் மூலம் திட்டமிட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

ஐ நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான இந்த அறிக்கை வெளியாகியுள்ளது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. இந்த அறிக்கையை முழுமையாக வெளியிடும் முதல் ஊடகம் என்பதில் "கனடா உதயன்" பெருமை கொள்கிறது.

---------------

இலங்கை முழுவதும் சிங்கள மற்றும் புத்த மதத்தின் மேலாதிக்கத்தை ஏற்படுத்தும்வகையில், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நிலங்களை அபகரிப்பதற்கு ராஜபக்ஸ அரசாங்கமானது இராணுவம் மற்றும் பல்வேறு அரச நிர்வாககளங்களை பயன்படுத்தும் செயல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உடனடி கவனத்தை ஈர்க்கவேண்டும்.

- ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46வது கூட்டத்தொடர் இலங்கை நிலைமை குறித்து ஆராய்ந்துவரும் நிலையில் கொடூரமான உள்நாட்டுப்போர் முடிந்து 12 ஆண்டுகளுக்குப்பின்னும் இலங்கை எவ்வாறு மேன்மேலும் ஒரு இனநாயக நாடாக சென்றுகொண்டிருக்கின்றது என்பதையும், தமிழ் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதையும் சிங்களமயமாக்கப்படுவதையும் ஒரு புதிய அறிக்கை விபரிக்கின்றது.
- தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களில் இராணுவ ஆக்கிரமிப்பு தீவிரமாக உள்ளது - வடக்கு மாகாணத்தில் ஆறு குடிமக்களுக்கு ஒரு இராணுவ சிப்பாய் எனும் விகிதமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு குடிமக்களுக்கு ஒரு இராணுவ சிப்பாய் எனும் விகிதமும் இருக்கிறது.
- வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாக பிரிக்கும் அரசாங்கத்தின் முக்கிய நோக்கத்துடன் சிங்கள குடியேற்றம், பௌத்த விகாரைகள், யுத்த வெற்றி நினைவுச்சின்னங்கள், தொல்பொருள் நில ஒதுக்கீடுகள், வனவிலங்குகள் சரணாலயங்கள், வனப்பகுதி ஒதுக்கங்கள் மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் என்ற போர்வையில் தமிழ் கலாச்சாரத்தையும் வரலாற்றையும் திட்டமிட்டு அழிக்கும் உத்திகள் இடம்பெறுகின்றன.
- நீதியை நிலை நாட்டும் வாக்குறுதிகளில் இருந்து இலங்கை அரசு பின்வாங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டு, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய முரண்பாடுகளை நிறுத்தவும் தடுக்கவும் சர்வதேச சமூகத்தின் செயல் ரீதியான வகிபாகத்தின் அவசியத்தையும் வலியுறுத்தி ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை ஆறு நாடுகள் கூட்டாக சேர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு முன்வைத்துள்ள இலங்கை தொடர்பிலான முதல் வரைவு அலட்சியப்படுத்தியுள்ளது.
- இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என்ற மனித உரிமை ஆணையாளர் பச்சிலட் மற்றும் நான்கு முன்னாள் ஆணையாளர்கள், ஐ. நாவின் ஒன்பது முன்னாள் சிறப்பு பிரதிநிதிகள், இலங்கை தொடர்பிலான ஐ. நா செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கையை தயாரித்த அனைத்து உறுப்பினர்கள் ஆகியோரது பரிந்துரைகளை ஐ.நா மனித உரிமை பேரவை தீர்மானத்தில் உள்ளடக்கவேண்டும்.

Oakland, CA: ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46வது கூட்டத்தொடர் இலங்கையைப் பற்றிய புதிய தீர்மானத்தை ஆராய்கின்ற வேளையில், ஒக்லாண்ட் நிறுவனத்தின் புதிய அறிக்கையான – 'முடிவற்ற போர்: இலங்கையில் தமிழ் மக்களின் அழிக்கப்பட்ட நிலம், வாழ்வு மற்றும் அடையாளம்', என்ற புதிய ஆய்வு அறிக்கை, நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் எந்தளவுக்கு துன்பப்படுத்தப்படுகின்றார்கள் என்பதற்கான அதிர்ச்சியளிக்கும் ஆதாரங்களை முன்வைக்கின்றது.

சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றவும், தமிழ் மக்கள் தமது நிலங்களுக்கு செல்வதை தடுக்கவும் அபிவிருத்தி திட்டங்கள் என்ற போர்வையில்தமிழர் பிரதேசங்களில் அரசாங்கங்களினால் முன்னெடுக்கப்படும் சிங்கள குடியேற்றம் வளர்ந்து வருகிறது.

"நீர்ப்பாசன திட்டங்கள், இராணுவ குடியேற்றங்கள், தொல்பொருள் இட ஒதுக்கீடுகள், வனவிலங்கு சரணாலயங்கள், வனப்பகுதி மற்றும் சிறப்பு பொருளாதார வலயங்கள் மூலம் வடக்கு மற்றும் கிழக்கில் நில அபகரிப்பானது 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்து மேலும் மோசமடைந்துள்ளதாக" அறிக்கைக்கான ஆராய்ச்சியை ஒருங்கிணைத்து செயற்பட்ட அனுராதா மிட்டால் தெரிவித்தார். "தமிழர்கள் அவர்களது பாரம்பரை நிலங்களை பயன்படுத்த அனுமதி மறுப்பது, கிராமங்களின் பெயரை மாற்றுவது, தேவாலயங்கள் மற்றும் இந்து கோவில்களை பௌத்த விகாரைகளாக மாற்றுவது, சிங்கள மேலாண்மையை நிலைநாட்டும் நினைவுச்சின்னங்களை நிறுவுவது போன்றவை, தமிழர் வரலாறு மற்றும் கலாச்சாரத்தை அழிக்கும் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியாகும். பாரம்பரிய தமிழ் தாயகத்தை புவியியல் ரீதியாக துண்டாட வேண்டும் என்பதும் அரசாங்கத்தின் உத்தி" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த உத்திக்காக, மகாவலி அதிகாரசபை, தொல்பொருள் திணைக்களம், வன திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவை பயன்படுத்தப்படுவதை இந்த அறிக்கை அம்பலப்படுத்துகின்றது.

போருக்குப் பிந்தைய இலங்கை பற்றிய நான்காவது ஒக்லாண்ட் நிறுவனத்தின் அறிக்கையான "முடிவற்ற போர்: இலங்கையில் தமிழ் மக்களின் அழிக்கப்பட்ட நிலம், வாழ்வு மற்றும் அடையாளம்", என்ற புதிய ஆய்வு அறிக்கை, நில அபகரிப்பு மற்றும் தமிழ் மக்கள் மீது பரந்தளவில் காணப்படும் இராணுவ மயமாக்கலின் பாதிப்பு ஆகியவற்றை தக்க தருணத்தில் வெளிக்கொண்டு வருகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பு தீவிரமாக உள்ளது – கிட்டத்தட்ட ஒவ்வொரு ஆறு குடிமக்களுக்கும் ஒரு இராணுவ உறுப்பினர் என்ற விகிதாசாரம் காணப்டுகின்றது.

"இராணுவம் தொடர்ந்து ஏராளமான நிலங்களை ஆக்கிரமித்து வருகிறது. 5 நட்சத்திர உல்லாச விடுதிகள், சிற்றுண்டிசாலைகளை இராணுவத்தினர் நடத்துகின்றனர். ஆக்கிரமித்துள்ள நிலங்களில் இராணுவத்தினர் பயிர்ச்செய்கை செய்கின்றனர். இராணுவத்தின் தீவிர பிரசன்னம் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளது" என்று மிட்டால் மேலும் தெரிவித்தார். இதேவேளை, யுத்தம் முடிவடைந்து 12 ஆண்டுகள் கடந்துள்ளபோதிலும், யாழ் மாவட்டத்தில் மட்டும் 23,000 க்கும் மேற்பட்ட மக்கள் இன்னமும் இடம்பெயர்ந்து தமது மீள்குடியேற்றத்துக்காக காத்திருக்கின்றனர்.

இலங்கை முழுவதும் சிங்கள மற்றும் புத்த மதத்தின் மேலாதிக்கத்தை ஏற்படுத்தும்வகையில், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நிலங்களை அபகரிப்பதற்கு ராஜபக்ஸ அரசாங்கமானது இராணுவம் மற்றும் பல்வேறு அரச திணைக்களங்களை பயன்படுத்தும் செயல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உடனடி கவனத்தை ஈர்க்கவேண்டும்.

"ஐ.நா மனித உரிமைகளுக்கான ஆணையாளர் மிச்சேல் பச்சிலட் ஜனவரி 2021 இல் இலங்கை தொடர்பில வெளியிட்ட அறிக்கை கடந்த கால மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்வதின் அவசியத்தை வலியுறுத்துவது மட்டுமல்லாமல் எதிர்கால வன்முறை மற்றும் முரண்பாடுகளை தடுக்கவும் தவிர்க்கவும் சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. யுத்தத்தின்போது போர்க்குற்ற சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் இராணுவ உயர் தளபதிகள் மற்றும் ஏனையவர்களுக்கு எதிரான தடைகள், மற்றும் இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துதல் போன்ற ஆணையாளரின் அழைப்பானது, நீதி மற்றும் மனித உரிமைகளை நிலை நிறுத்துவதற்கு இன்றியமையாதது " என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆறு நாடுகள் கூட்டாக சேர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு முன்வைத்த இலங்கை தொடர்பிலான முதல வரைவு தீர்மானமானது நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நிலையான அமைதியை உறுதி செய்வதற்கான தெளிவான அணுகு முறையை கோடிட்டு காட்ட தவறிவிட்டது.

ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் பச்சிலட், முன்னாள் ஆணையாளர்கள், ஐ. நாவின் ஒன்பது முன்னாள் சிறப்பு பிரதிநிதிகள் மற்றும் ஐ. நா செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கையை தயாரித்த அனைத்து உறுப்பினர்கள் ஆகியோரது பரிந்துரைகளில் இருந்து இந்த வரைவு முற்றிலும் விலகி நிற்கிறது. இலங்கையில் தமிழ் மக்களின் அழிக்கப்பட்ட நிலம், வாழ்வு மற்றும் அடையாளம் ஆகியவற்றின் துன்பகரமான யதார்த்தத்தை 'முடிவற்ற போர் வெளிப்படுத்துவதுடன் மோசமடைந்துசெல்லும் மனித உரிமைகள் நிலைமையை சீரடுத்துவதற்கு சர்வதேச சமூகத்தின் கூட்டு நடவடிக்கைக்கான ஆதாரங்களை முன்வைக்கிறது " என்று மிட்டால் மேலும் கூறினார்.

இந்த பரிந்துரைகளை ஐ. நா மனித உரிமைகள் சபை தீர்மானம் உள்ளடக்க வேண்டும் என்பதுடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு மற்றும் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் அதேவேளை, வடக்கு -கிழக்கில் இராணுவமயமாக்கல் இல்லாமல் செய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்த வேண்டும். இவ்வாறு செய்ய தவறுவது, சர்வதேச மனித உரிமைகள் பரிபாலனத்தை மீண்டும் கேலிக்கூத்தாக்குவதாக அமையும்.

முடிவற்ற போர் அறிக்கையானது போருக்குப் பிந்தைய இலங்கையில் நிலப் பிரச்சனை மற்றும் மனித உரிமை மீறல்களையும் ஆராயும் நான்காவது அறிக்கையாகும். நிறுவனத்தின் முந்தைய அறிக்கைகளைப் படிக்க பின்வரும் இணைப்பை அழுத்தவும்:

https://www.oaklandinstitute.org/country/sri-lanka




# யாழ்ப்பாணத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண பாராளுமன்ற உறுப்பினர் முயற்சி




யாழ். மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றால்அபகரிக்கப்படும் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் அரச காணிகள் ஆகியவை தொடர்பாக காணிப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்ப்பாணத்திலிருந்து கிடைத்த செய்தியொன்று தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக, மாவட்டத்தின் நெடுந்தீவு, சுண்டிக்குளம், நாவற்காடு மற்றும் சரசாலை பகுதிகளில் இத் திணைக்களங்களால் தனியார் மற்றும் அரச காணிகள் எல்லைப்படுத்தப்பட்டிருப்பதால் மக்களின் இயல்பு வாழ்விற்கு பாதிப்பு ஏற்படுவதாக அண்மையில் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களின் போது சுட்டிக்காட்டப்பட்டது. அதனடிப்படையில் இவ் விடயம் தொடர்பாக துறைசார் அமைச்சர் சி.பி.ரத்னாயக்கவின் கவனத்திற்கு மாவட்ட அபிவிருத்தி ஒழுங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் கொண்டு சென்றதுடன், கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் காணி பிரச்சினை உள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பிரதேச செயலர்களுடன் கொழும்பில் அமைச்சரின் தலைமையில் கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை ஆராயும் முகமாக, கொழும்பில் உள்ள அமைச்சில் இருந்து உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள பிரதேச செயலர்களுடன் இணைந்து கண்காணிப்பு விஜயங்களை மேற்கொண்ட பின்னர் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்களை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.


பாதிப்பற்றது என நீங்கள்
கருதும் தேநீர் இடைவேளை
நீங்கள் நினைப்பதை விட
அதிக பாதிப்பை ஏற்படுத்தக்
கூடும்.
COVID-19 பரவுவதைத் தடுக்க முகக் கவசம்
அணியுங்கள், உங்கள் கைகளைக்
கழுவுங்கள், தனிநபர் இடைவெளியைப்
பேணுங்கள்.
ontario.ca/covid-19 மூலம் மேலும் அறியுங்கள்
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது
Ontario

# தென்கிழக்கு மார்க்கம் பகுதிக்கு கோவிட் - 19 சம்பந்தமான அதிமுக்கியத்துவமான சமூகச் செயற்பாடுகள்

நீங்கள் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்து, உங்களுக்குச் சமூக ஆதரவு தேவைப்பட்டால் எங்களை அழையுங்கள்.

**Carefirst** இனது சமூக ஆதரவு சேவைகள் உள்வாங்கல் தொடர்பு எண்:

**416 646 5108** (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, முற்பகல் **9. 00** மணியிலிருந்து பிற்பகல் **5. 00** மணிவரை)

எமது பணியாளர்களால் கீழ்வரும் மொழிகளில் உங்களுக்கு உதவ முடியும்:
ஆங்கிலம், கன்ரனீஸ், மன்டறின், ஹிந்தி, பஞ்சாபி, தமிழ், உருது

## கிடைக்கக்கூடிய சேவைகள்:

- உணவுப் பாதுகாப்பு
- போக்குவரத்து
- மளிகைப் பொருள் கொள்வனவு
- குழந்தைப் பராமரிப்பு, தன்னார்வத் தனிமைப்படுத்தல் மையம், தங்குமிடம், வருமான உதவி ஆகியவற்றிற்கான சமூக வளங்கள்
- உளரீதியான ஆதரவு, ஆதரவுக்கான ஆலோசனை (மெய்நிகர் வழியாக)
- மருந்து / அத்தியாவசியப் பொருள் விநியோகம்
- பராமரிப்பு ஒருங்கிணைப்பு

***தகுதியானவர்களுக்கு மானியங்கள் கிடைக்கின்றன**.

## ஏனைய வளங்கள்:

**ஒன்ராரியோ தொலைபேசிச் சுகாதார சேவை உங்களுக்கு நோய்க்குரிய அறிகுறிகள்** காணப்பட்டால் அழைக்க வேண்டியது:
Tel: 1-866-797-0000

**ஒன்ராரியோ 211 / சமூகம் மற்றும் சமூக சேவைகள் உதவித் தொடர்பு:**
211ontario.ca

யோர்க் பிராந்திய கோவிட் - 19 தன்னார்வத் தனிமைப்படுத்தல் நிலையம்
**York Region COVID-19 Voluntary Isolation Centre**
1-877-464-9675
york.ca/isolationcentre

**யோர்க் பிராந்தியப் பொதுச் சுகாதாரப் பிரிவு**
1-800-361-5653

Carefirst **முதியோர், சமூக சேவை இணையம் மற்றும் கீழ்வரும் சேவைப் பங்காளர்களினால் இது எடுத்துவரப்படுகிறது**:

Carefirst Family Health Team
Centre for Immigrant and Community Services
Community & Home Assistance to Seniors (CHATS)
City of Markham
EYRND Ontario Health Team
Health Common Solutions
Health for All Family Health Team
Hong Fook Mental Health Association
Islamic Society of Markham - Jam'e Masjid Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
Markham Wesley Centre
Social Services Network
Tamil Civic Action
The Cross-cultural Community Services Association
YMCA of Greater Toronto (Markham)
York Region Community and Health Services
York Region Public Health
105 Gibson Centre
360° Kids Support Services

**Funded by: Ontario Health and Central LHIN**

Updated on February 5, 2021

# சிவராத்திரியை முன்னிட்டு இலங்கையில் கொடிதினம்



முழுமுதற் கடவுளான சிவபெருமானை முதல்வனாகக் கொண்டிருப்பது சைவசமயமாகும். சைவசமயத்தவர்கள் அனுஷ்டித்துவரும் விரதங்களுள் முக்கியத்துவம் பெறுவது மகாசிவராத்திரி விரதமாகும். சிவபெருமானை பூஜித்து நல்லருள் பெறும் வகையில் ஒதுக்கப்பட்டிருக்கும் ஓர் இரவுதான் மகாசிவராத்திரியாக சிறப்புப் பெறுகிறது.

சைவமக்கள் அன்றைய தினம் பகல் விரதமிருந்து ஆலயங்களில் இரவு நடைபெறும் நான்கு ஜாமப் பூசை வழிபாடுகளிலும், அபிஷேகங்களிலும் கலந்து கொள்வதுடன் தேவாரப் பதிகங்களுடன் பஞ்சாட்சர மந்திரமான சிவாயநம, நமசிவாய என்பவைகளை இடையிடையே ஓதி, தியானத்துடனும் சிவசிந்தனையுடனும் சிவராத்திரி தினத்தை செலவிட வேண்டும். இதனால் கிடைக்கும் பேரின்ப நிலையானது மிகப்பெறுமதி வாய்ந்தது என்பதை சமய நூல்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றன.

சைவமக்கள் மத்தியில் சிவனருளையும் சிவசிந்தனையும் ஏற்படுத்தும் வகையில் ஒரு நல்ல கைங்கரியத்தை உலக சைவப் பேரவை கடந்த ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக செய்து வருவதை பலரும் அறிவார்கள். மகாசிவராத்திரி நாளன்று சைவக் கொடிதினமாக அறிவித்திருப்பதுடன், உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை ஊடாக அதன் முழுமையான செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதும் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. சைவசமயக்கொடி இடபத்தை தாங்கி நிற்கிறது. இடபம் எனப்படும் மாடு சிவபெருமானின் வாகனமா-கும். நந்தி என்றும் சொல்வதுண்டு. இடபக்கொடி, நந்திக்கொடி என்ற பெயர்களிலும் சைவசமயக்கொடி அழைக்கப்படுகிறது. இடபத்தை சிறு சிறு காகிதத் துண்டுகளில் அச்சுப்பதித்து சைவ மக்களுக்கு வழங்கும் செயற்பாடுதான் கொடிதின-மாக மேற்கொள்ளப்படுகிறது.

சிவராத்திரி தினத்தன்று கொடிதின திறப்பு நிகழ்ச்சிகள் தலைநகரிலும், வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதி உட்பட சைவ மக்கள் அதி-கமாக வாழும் பிரதேசங்களிலும் நடத்தப்பட்டு வருவது வழமையாகும். இம்முறை, சிவராத்திரி தினமான நேற்று 11ஆம் திகதி , உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை தலைவர் கா. தயாபரன் தலைமை-யில், செயலாளர் சிவ. ஜெயராஜா, பொருளாளர் ஆர். வைத்தமாநிதி, உபதலைவர் சின்னத்துரை தனபாலா உட்பட ஏனைய உறுப்பினர்களும் இணைந்து தலைநகரில் நடைபெறும் வைபவத்தை நடத்தி வைத்தார்கள்.

நாடளாவிய ரீதியில் சைவாலயங்கள், இந்து மத நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் என்பனவற்றில் கொடிதின வைபவ நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியா-னது, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும், விழிப்புலன், செவிப்புலனற்றவர்கள் மற்றும் ஊனமுற்றுவர்களுக்கான மனி-தாபிமான செயற்றிட்டங்களுக்கும், பலவகையிலும் பாதிக்கபபட்டு வசதி குறைந்த நிலையில் வாழும் இந்து மக்களின் வாழ்வாதார உதவிகளுக்கும் பயன்படுத்துவது வழக்கமாகும். இந்து மக்கள் அனைவரும் தாராள மன-துடன் கொடிகளைப் பெற்று, இந்த நல்ல கைங்கரியத்துக்கு தொடர்ந்து உதவியும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கும்படி உலக சைவப் பேரவை சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

*கொழும்பிலிருந்து: விடைக்கொடிச்செல்வர்*
*கலாநிதி சின்னத்துரை தனபாலா*

Carefirst Seniors & Community Services Association

# கோவிட் -19
## POP-UP சோதனை

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் OHIP சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் OHIP அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு COVID-19 சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட COVID-19 சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
ஒவ்வொரு வியாழக்கிழமை. தொடக்க தேதி: ஜனவரி 14 — 2:00 p.m. - 6:30 p.m.

**YMCA**
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
ஒவ்வொரு புதன் & வெள்ளி. தொடக்க தேதி: ஜனவரி 30 — 9:30 a.m. - 2:30 p.m.

**Markham Chinese Presbyterian Church**
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
ஒவ்வொரு செவ்வாய் & புதன். தொடக்க திகதி: பிப்ரவரி 2 — 9:30 a.m. - 2:30 p.m.

**Islamic Society of Markham (நியமனம் மூலம் மட்டுமே)**
2900 Denison Street, Markham, ON L3S 4J8 (Denison & Middlefield)
தயவுசெய்து கவனிக்கவும்: இந்த இடத்தில் சோதனை செய்வது வாகன நிறுத்துமிடத்தில் drive-thru நடைமுறை மூலம் இயங்கும்
ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் (வானிலை அனுமதித்தால்) தொடக்க தேதி: மார்ச் 12, 2021 — 9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்

**www.carefirstontario.ca**

Walk-In ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் **www.carefirstontario.ca** அல்லது அழைக்கவும் **416-646-5108**

**உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association**
Carefirst Family Health Team
Health for All Family Health Team
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on January 27, 2021

SPLC

We Are Looking for Volunteers

Are you interested in promoting healthy active living to older adults and seniors and seeking volunteer opportunities?

If you are, SPLC (Senior Persons Living Connected) cordially invites you to join our Team.

**Eligibility:**

- Good communication skills in Tamil, or English
- Youth, Older Adults, and Seniors
- Friendly, respect privacy, and confidentiality
- Available to assist and support Teleconferencing or other Virtual Programs

**Benefits of volunteering:**

- Get trained on how to effectively reach out and engage seniors
- Build confidence in facilitating fun-filled activities
- Gain meaningful work experiences and satisfaction

For more information, For more information, please call Lydia (lydia@splc.ca, 416-490-2966) or Siva (email: sivanesan@splc.ca , Call, 416-493-3333 ext 288).

Senior Persons Living Connected
3333 Finch Avenue East Scarborough, ON, M1W 2R9
www.splc.ca
(416) 493 – 3333

# தமிழீழக் கவிஞர்கள் எழுதிய "இந்த மண் எங்களின் சொந்தமண்" பாடல் 13ம் திகதி வெளியாகிறது




தமிழ்மொழி பெருமை தமிழர் பண்பாட்டுச் செழுமை தமிழின உரிமை ஆகியவற்றை பறைசாற்றும் விதமாக, செங்கோல் படைப்பகத்தின் சார்பில் தலைவனின் தம்பி சுதன் (இலண்டன்) தயாரிப்பில், கலைமாமணி முனைவர் புதுவை சித்தன் தெ. ஜெயமூர்த்தி இசையமைத்து திரைப்படப் பாடலாசிரியர்கள் கவிஞர் கவிபாஸ்கர் கவிஞர் இளையகம்பன் மற்றும் தமிழீழக் கவிஞர்கள் புதுவை இரத்தினதுரை, துளசிச்செல்வன், திருக்குமரன், அகதன் உள்ளிட்டோர் எழுதிய பாடல்களின் தொகுப்பான "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்ற மக்கள் இசைப் பாடல்களின் வெளியீட்டு விழா வரும் 13.03. 2021 அன்று மாலை 5.30 மணியளவில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில், தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைவர் ஐயா பெ. மணியரசன் பாடல்களை வெளியிட்டு உரையாற்றுகிறார், இயக்குநர் சேரன், இயக்குநர் மு. களஞ்சியம், இயக்குநர் மணிமாறன், கி. வெங்கட்ராமன் (இணையாசிரியர் - தமிழ்த்தேசியத் தமிழர் கண்ணோட்டம்) பேரா. கு.சின்னப்பன் (பதிவாளர் (பொ) தமிழ்ப்பல்கலைக்கழகம் - தஞ்சை) பேரா. பெ. கோவிந்தசாமி (கலைப்புலத்தலைவர், தமிழ்ப்பல்கலைக்கழகம் - தஞ்சை) கவிஞர் இளம்பிறை, கவிஞர் இளையகம்பன் தமிழீழக்கலைபண்பாட்டு முன்னாள் பொறுப்பாளர் தேவர் அண்ணா, எழுத்தாளர் விசவனூர் தளபதி உள்ளிட்டோர் வாழ்த்துரை நிகழ்த்துகின்றனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை பாடலாசிரியர் கவிஞர் கவிபாஸ்கர் மேற்கொள்கிறார், கவிஞர் ஜே. தமிழ்ச்செல்வன் வரவேற்புரை ஆற்றுகிறார் விழா நிறைவில் இசையமைப்பாளர் திரைப்படப் பின்னணி பாடகர் முனைவர் சித்தன் ஜெயமூர்த்தி ஏற்புரை நிகழ்த்துகிறார். கவிஞர் முழுநிலவன் நன்றி நவில்கிறார்.

மக்கள் தொடர்பு: கோவிந்தராஜ்



Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை



அதிரடி சிறப்பு வட்டி வீதம்



உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# "நெற்றிக்கண் மனிதன்" வாழ்ந்ததாகச் சொல்லப்படும் ஆதிச்சநல்லூர் அகழாய்வு அறிக்கை!

## 17 ஆண்டுகளுக்குப்பின் வெளியானது




**தூ**த்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கடந்த 2004-ம் ஆண்டு மத்திய தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற அகழாய்வின் அறிக்கை 17 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது வெளியாகியுள்ளது. இதனால் தொல்லியல் ஆர்வலர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் கரையோரம் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக கருதப்படுகிறது.

இங்கு முதன்முதலாக 1876-ல் அகழாய்வு நடந்துள்ளது. டாக்டர் ஜாகோர் என்பவர் இங்கு அகழாய்வு செய்து, இங்கு கிடைத்த பொருட்களை ஜெர்மனி கொண்டு சென்றுள்ளார். தொடர்ந்து இங்கு பல அகழாய்வுகள் நடந்துள்ளன.



இதில், 1902-ல் அலெக்ஸாண்டர் இரியா என்பவர் அகழாய்வு செய்தபோது நூற்றுக்கணக்கான பொருட்களை எடுத்துச் சென்று சென்னையில் பார்வைக்கு வைத்துள்ளார். மேலும் இங்கு கிடைத்த பல்வேறு பொருட்களைப் பட்டியலிட்டுள்ளார்.

சிந்து சமவெளி நாகரிகத்துக்கு முந்தியது:

1920-ல் சிந்து சமவெளியை ஆய்வு செய்த வங்கதேசத்து அறிஞர் பானர்ஜி, "சிந்து சமவெளி நாகரிகத்துக்கு முந்தையது ஆதிச்சநல்லூர் நாகரிகம்" என்று கூறினார். இதனால் உலகமே ஆதிச்சநல்லூரை வியந்து பார்த்தது. ஆனாலும் ஆதிச்சநல்லூர் தொடர்பான முறையான அகழாய்வு அறிக்கை வரவில்லை.

இந்நிலையில், இந்திய தொல்லியல் துறை மூலமாக 2004-ம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழாய்வை சத்திய மூர்த்தி தலைமையிலான தொல்லியல் துறையினர் செய்தனர். ஆனால் இந்த அகழாய்வின் அறிக்கையும் வெளியிடப்படவில்லை.



இதுகுறித்து செய்துங்கநல்லூரை சேர்ந்த எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராசு என்பவர் கடந்த 2017-ம் ஆண்டு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர்ந்தார். அதில், "2004-ல் நடந்த அகழாய்வு அறிக்கையை வெளியிட வேண்டும். மீண்டும் விரிவான அகழாய்வு நடத்த வேண்டும். ஆதிச்சநல்லூரில் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும்" என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தொடர்ந்து பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்தது.

இந்த சூழ்நிலையில் ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என கடந்த ஆண்டு பட்ஜெட்டில் மத்திய அரசு அறிவித்தது. தொடர்ந்து அதற்கான பணிகளையும் தொடங்கியுள்ளது. மேலும், ஆதிச்சநல்லூர், சிவகளை பகுதிகளில் மாநில தொல்லியல் துறை சார்பில் கடந்த ஆண்டு அகழாய்வு பணி நடைபெற்றது. இந்த ஆண்டும் ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய இடங்களில் மாநில தொல்லியல் துறை சார்பில் அகழாய்வுக்கான பணிகள் தொடங்கியுள்ளன.

இணையத்தில் வெளியானது, அகழாய்வு அறிக்கை



இந்நிலையில் 2004-ம் ஆண்டு நடைபெற்ற அகழாய்வின் அறிக்கையை மத்திய தொல்லியல் துறை தற்போது வெளியிட்டுள்ளது. தற்போது தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால் அறிக்கை முறைப்படி வெளியிடாமல் இணையவழியில் வெளியிடப்பட்டுள்ளது.

தொல்லியல் துறை அதிகாரி சத்தியபாமா பத்ரிநாத் தயாரித்த 293 பக்கங்களை கொண்ட இந்த அறிக்கையில் 2004-ல் ஆத்திச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வு பணிகள் குறித்த முழுமையான விவரங்கள், அகழாய்வின் போது கிடைக்கப்பெற்ற பொருட்களின் பட்டியல் படங்களுடன் இடம் பெற்றுள்ளன.

17 ஆண்டுகள் கழித்து வந்திருந்தாலும் இந்த அறிக்கை தமிழ் ஆர்வலர்களை, தொல்லியல் ஆய்வாளர்களை மகிழ்ச்சியடைய செய்துள்ளது. இது குறித்து எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராசு கூறுகையில், எங்கள் வழக்கில் கேட்ட மூன்று கோரிக்கைகளும் தற்போது நிறைவேறிவிட்டன. தொடர்ந்து அகழாய்வு நடந்த வேண்டும் என்ற கோரிக்கையை மாநில அரசும், அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசும் நிறைவேற்றியுள்ளன என்றார்.

நெற்றிக்கண் மனிதன் வாழ்ந்தானா?

தற்போது 17 ஆண்டுகள் கழித்து அகழாய்வு அறிக்கை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சியை அளித்துள்ளது. இந்த அறிக்கையில் ஆதிச்சநல்லூரில் நெற்றிக்கண் மனிதன் இருந்தானா என்பதற்கான பதிலும் கிடைத்துள்ளது.

முத்து குளிக்கும் மக்களுக்கு ஒருவித நோய் வரும். அந்த நோயால் பாதிக்கப்பட்டு புதைக்கப்பட்டவர்களே இந்த நெற்றிக்கண் மனிதர்கள் என தொல்லியல் துறை அதிகாரி சத்தியபாமா தனது அறிக்கையில் பதிவிட்டுள்ளார்.

இந்த அறிக்கையை தமிழாக்கம் செய்து வெளியிட மாநில தொல்லியல் துறையினரும், மத்திய தொல்லியல் துறையினரும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் பாமர மக்களுக்கு ஆதிச்சநல்லூர் பற்றிய விவரங்கள் போய்ச் சேரும் என்றார், அவர்.

**- மணிராஜ், திருநெல்வேலி**

# கனடா–மேல்மருவத்தூர் ஸ்ரீ ஆதிபராசக்தி குருமன்றத்தில் இடம்பெற்ற பங்காரு அடிகளாரின் 81வது அவதாரதின விழா



கனடா தேசத்தின் ஸ்காபுறோ நகரில் நாஸ்ரின் வீதியில், கடந்த பல வருடங்களாக இயங்கிய வண்ணம் ஆன்மீகப் பணியாற்றிவரும் மேல்மருவத்தூர் ஸ்ரீ ஆதிபராசக்தி குரு மன்றத்தின் இயக்குனர் சபையின் ஏற்பாட்டில் அருட்திரு பங்காரு அடிகளாரின் 81வது அவதாரத்தின விழா ஞாயிற்றுக்கிழமை (07-03-2021) சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

மன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரவு அவர்களின் தலைமையில் மன்றத்தில் அங்கத்தவர்களாக விளங்கும் சக்திகள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

காலை தொடக்கம், சக்திகள் பலர் மன்றத்தின் வழிபாட்டு மண்டபத்திற்கு ஆர்வத்துடனும் பக்தியுடனும் வருகை தந்து அரசாங்கத்தின் நோய்த் தொற்று தொடர்பான கட்டுப்பாடுகளைப் பேணிய வண்ணம் வழிபாடுகளிலும் பூசை மற்றும் அபிசேகங்கள் ஆகியவற்றிலும் பங்கெடுத்து வெளியேற மேலும் சக்திகள் வருகை தந்தனர்.



தொடர்ச்சியான இடம்பெற்ற அபிசேகங்கள் மற்றும் பூசைகள் ஆகியவற்றிக்கு இடையில் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு மற்றும் சக்தி யோகநாதன் ஆகியோர் அடிகளாரின் தவத்தின் வலிமை மற்றும் அவர் தன்னை நேசிக்கும் சக்திகளுக்காக செய்யும் ஆன்மீகச் சேவைகள் சமூக சேவைகள் ஆகியவற்றை எடுத்துரைத்தனர். பல சக்திகள் தமிழ்நாட்டில் மேல்மருவத்தூர் பதியில் எழுந்தருளியிருக்கும் அன்னை ஆதிபராசக்தியின் ஸ்தலத்திற்கு செல்வதற்கு விருப்பம் தெரிவித்ததன் பேரில் விமானப் பயணங்கள் மீண்டும் ஆரம்பித்ததும் இந்த ஏற்பாடுகளை கவனிக்கலாம் என்றும் அங்கு தெரிவிக்கப்பெற்றது.







அடிகளாரின் அவதாரத்திருவிழா பற்றிய தகவல்களை கேள்வியுற்ற பல அடியார்கள் ஆலயத்திற்கு வந்து வெளியில் நின்று வழிபாடு செய்து விடைபெற்றனர்.

இறுதியில் பங்காரு அடிகளாரின் 81வது அவதார தினத்தை முன்னிட்டு கேக் வெட்டப்பட்டு அங்கு வந்திருந்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பெற்றது.

**தகவல்: சத்தியன்**

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்






# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

முக்தா வி. சீனிவாசன் எழுதிய தொகுப்பிலிருந்து அவர் எழுதியதை மீண்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். ”நான் பாக்கியசாலி! நான் கொடுத்து வைத்தவன். எதனால் இதைச் சொல்கிறேன். அந்த மகோன்னதமான நடிகனின் படங்களை நான் அதிகமாக இயக்கியுள்ளேன் என்கிற ஒரே காரணத்தால் தான்!

முதல் சுதந்திரக் குரல் கொடுத்தவர் வீரபாண்டிய கட்டபொம்மன். சிவாஜி அந்த வேடத்தில் நடித்த இந்த படம் பல வருடங்களுக்கு முன்னால் வந்திருக்குமேயானால், நம் நாடு 1947க்கு சற்று முன்பே சுதந்திரம் பெற்று இருக்குமோ?

கப்பலோட்டிய தமிழனாகச் சிறையில் செக்கிழுத்து, சிவாஜி நடித்த படம் காலம் தாழ்ந்து வந்துவிட்டது. அது பல ஆண்டுகளுக்கு முன்பே வந்திருந்தால் தமிழ்நாட்டில் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு தேசபக்தன் சிறை சென்று பிரிட்டிஷ் சிறைச்சாலைகளை வழிய வைத்திருப்பான்!.

நடிகனுக்கு முகம் மட்டும் தான் நடிக்கும். இவருக்கு நகம் கூட நடிக்கும். மற்றவர்களுக்கு பிடியளவு தான் நடிக்க வரும். இவருக்கு முடி கூட நடிக்கும்! நடிகர் திலகம் நடித்த ஒவ்வொரு படமும் ஒரு இலக்கியம்.




சில படங்கள், வியாபார ரீதியில் வெற்றி பெறாமல் போயிருக்கலாம்! ஆனால் நடிப்பு ரீதியில் அவரது எந்த படமும் தோல்வி கண்டதில்லை. அவருடைய படங்கள் இந்த நாட்டு மக்களிடையே குடும்ப பாசத்தை வளர்த்தன. தேசபக்தியை வளர்த்தன. விட்டுக் கொடுக்கும் மனோபாவத்தை, தியாகத்தை வளர்த்தன.

இந்த மண்ணின் சிறப்பை - மொழியின் மேன்மையை நமது இசையின் இனிமையை எடுத்துச் சொன்னவை அவரது படங்கள் - காதலின் ஆழத்தையும் அவர் காட்டாமல் விட்டதில்லை. தேசத்தின் ஒழுக்கத்தை வலியுறுத்தி காட்டின. சட்டமும் மதமும் சேர்ந்து பெற முயற்சிக்கும் சமுதாய ஒழுக்கத்திற்கு சிவாஜி நடித்த படங்கள் பிரச்சாரத்தை தேடித்தந்தன!

1954-இல் “அந்த நாள்“ என்கிற படத்தை ஏவிஎம் தயாரித்தார். வீணை எஸ் பாலச்சந்தர் பட இயக்குனர். ஜாவர் சீதாராமன் கதை வசனம். சிவாஜி தான் கதாநாயகன். நான் படத்தின் உதவி இயக்குனர். அப்போது எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட நெருக்கம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து ஒரு காலகட்டத்தில் அவரது மிகச் சிறந்த நண்பர்களில் ஒருவனாக நான் கணக்கிடப்பட்டேன். சிவாஜியை வைத்து அதிகமாக படம் எடுத்தவர்கள் நானும், பாலாஜியும் தான். அவரை விட்டு விலகாமல் கடைசி வரை அவர் கூடவே இருந்தோம்.

குரல் சிவாஜிக்கு கடவுள் தந்த வரப்பிரசாதம். சதை படர்ந்த அகலமான முகமும், கண்களும் அவர் வெற்றியின் அடித்தளங்கள். அந்த குரலை ஏற்றி, இறக்கி நெளித்து - வளைத்து, விதம் விதமாக மாற்றி கொடுக்கப்பட்ட காட்சியை சுவை கூட்டும் அவரின் சாமர்த்தியம் அதிசயமானது. அந்த அகலமான முகத்தின் மேல் நுண்ணிய சுருக்கங்களையும் - விரிவுகளையும், குழிகளையும், படைப்புக்களையும் நடமாடவிட்டு, கற்பனைக் காட்சிக்கு நிஜவடிவம் தரும் அவரது திறன் அபூர்வமானது. உணர்வை காட்ட வேண்டிய வேலையில் பாதியை, அவர் கண்கள் முடித்துவிடும்! முகம் - குரல் - கண்கள் ஆகியன சிவாஜியின் பலங்கள் ஆகும்.

“நிறைகுடம்“, “அருணோதயம்“ “பரிட்சைக்கு நேரமாச்சு“ “கீழ்வானம் சிவக்கும்“ என பல படங்களை தயாரித்து இயக்கிய இயக்குநர் முக்தா சீனிவாசன் சிவாஜியிடத்து நெருங்கிய நட்பும், மரியாதையும் கொண்டவர். ”அந்த மகோன்னத நடிகனை இன்றும் தான் பார்க்கும் போது எழுந்து நின்று வணங்குகின்றேன். அப்போது எனக்குள் ஒரு பரவசம் ஏற்படுகிறது. நான் நன்றியோடு அவரை பார்க்கிறேன், என ஆசிரியர் சோ அவர்களின் “துக்ளக்“ இதழில் சிவாஜி பற்றி எழுதிய கட்டுரையில் எழுதியுள்ளார்.

”பொன்னல்ல பொருளல்ல புவியாளும்
மன்னர்தரும் எண்ணவொணா மரியாதை ஏதுமல்ல”
மின்னிவரும் மெய்க்கவியின் மெய்யழகைக் காண்போர் தம்
கண்ணில் வரும் ஓர்துளியே கலைஞனுக்கு கோடி பெறும்” என்று பாடி வைத்தார் கவியரசு கண்ணதாசன்



அவர்கள். நடிகர் திலகத்தின் நடிப்பைப் பார்த்து மெய்மறந்து ரசிப்பவர்களினது விழிகளில் இருந்து உதிர்ந்த கண்ணீர் துளிகளை பார்த்த பின்புதான் கவியரசு இவ்விதம் பாடி வைத்தாரோ என எண்ணத்தோன்றுகிறது.

”கண்ணீர்த்துளி ஒரு கோடி பெறுமாம்” கலைஞனுக்கு உண்மைதான்! உண்மையான கலைஞன் தனது வித்தையால் ரசிகர்களின் இதயங்களை கட்டிப்போட வேண்டும். ஈர்த்துக் கொள்ளவேண்டும். அந்த ஈர்ப்பு சக்தியின் பிரதிபலிப்பும் பார்ப்போரின், கேட்போரின், படிப்போரின் விழிகளில் நீர்முத்துக்களை வரவழைக்க வேண்டும்! அப்படியாக ஆனந்தத்துளிகளையும், சோகத்திவலைகளையும், ஆச்சரியத் துளிகளையும், ரசிகர்களின் விழிகளில் நின்றும் வரவழைத்த நடிகர் திரு சிவாஜிகணேசன் என்பதில் யாருக்கும் இருவேறு கருத்து இருக்க முடியாது.

நடிகர் - தயாரிப்பாளர் திரு பாலாஜி அவர்களின் தயாரிப்பில் வெளிவந்த சுமார் 16 படங்களில் கதாநாயகனாக நடித்து ரசிகர்களின் கண்ணீர்த்துளிகளை பரிசாக கோடியாக பெற்றவர் நடிகர் திலகம் அவர்கள். காலஞ்சென்ற நடிகர் கே பாலாஜி அவர்களை நினைக்கும் போது ”மணியாச்சி ஜங்ஷனில் வெள்ளைக்கார கலெக்டர் ஆஷ் துரையை சுட்டுக் கொன்ற வீரன் வாஞ்சிநாதன் தான் எனக்கு நினைவுக்கு வருவார். “கப்பலோட்டிய தமிழன்“ படத்தில் “வீரன் வாஞ்சி“யாக பாத்திரமேற்று சுதந்திரத்திற்காகப் போராடும் எம்மவர்களின் இதயங்களில் நீங்கா இடம் பிடித்தவர், நடிகர் திலகம் போன்றவர்களிடத்து நட்பு பூண்டு பழகியதில் ஆச்சரியமே இல்லை. இனி சிவாஜி பற்றி நண்பர் பாலாஜி என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

நடிகர் திலகமது 59-வது பிறந்த நாளின்போது 1987 மனம் நிறைந்து மகிழ்ந்து பாராட்டு தெரிவித்த நடிக நண்பர் திரு கே பாலாஜி அவர்களின் செய்தியிலிருந்து... ”ஒப்பற்ற கற்பனைத் திறனால் உயிர் ஓட்டங்களை கொண்ட தன் நவரச நடிப்பால் நிகரில்லா ஒரு தனி சகாப்தத்தை உருவாக்கியதோடு இன்றைய நடிக நடிகையர்களின் கலை வாழ்விலே ஓர் கலங்கரை விளக்கமாகத் திகழும் அண்ணார் திரு சிவாஜிகணேசன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் அது மிகையாகாது!



பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போல் அண்ணார் வாழும் இந்நாளில் நாமும் நடிகராக அவரோடு ஒன்றுகூடி வாழ்கிறோம். அது நமக்கெல்லாம் கிடைத்தற்கரிய பெருமையிலும் பெருமை!

ஆசிய விருது பெற்ற அண்ணார் அவர்களுக்கு இச்சிறியோனை அறிமுகப்படுத்தி வைத்தது “துளி விஷம்“ 1953 ஆம் ஆண்டிலேயே நான் நரசு ஸ்டூடியோவில் பணியாற்றி வந்த நாளிலே அத்“துளி விஷத்தை“ அமிர்தமாக கொண்டேன். நானும் நடிகனானேன். தயாரிப்பாளரானேன். ”சுஜாதா சினி ஆர்ட்ஸ்” உருவாயிற்று. முதலாவது தயாரிப்பான “சுஜாதா“வின் “தங்கை“ வழியாக அதன் பின் அவர் 2. “என் தம்பி“யாக என்னை ஏற்று எனக்காக 3. “திருடன்“ என்ற நிலைக்கும் ஆளாகி 4. “எங்கிருந்தோ வந்தாளுக்காக 5. “ராஜா“வாக மாறி 6. “நீதி“ கூற அது கண்டு கலைத்தாயே அண்ணன் அவர்களை 7. “என்மகன்“ எனப் பெருமையோடு அரவணைக்க அன்னையே 8. “உனக்காக நான்“ என் அண்ணன் அகமகிழ்ந்து 9. “தீபம்“ ஏற்றி 10. “தியாகம்“ பல செய்து 11. “நல்லதோர் குடும்பம்“ உருவாக்கி அங்கு 12. “நீதிபதி“யாக நின்று 13. “தீர்ப்பு“ வழங்கி எல்லோரையும் 14. “பந்தம்“ கொண்டு அனைத்து பாசமுள்ள 15. “மருமகளை“யும் ஒன்று சேர்த்து தம்பி நாமெல்லாம் 16. “விடுதலை“ பெற்ற மக்கள் என அறிவுரை கூற அதன் வழி நின்று அண்ணார் அவர்களை கொண்டு மக்கள் மகிழ 16 படங்களை வழங்கவைத்த நாயகன் அண்ணன் அவர்கள் தமிழ் திரைப்பட வரலாற்றிலேயே என்னை தயாரிப்பாளராக நிலைக்க வைத்த பெருமை அவருக்கேயுரியது. இப்படிப் பல வழிகளிலே உயர்ந்திட உறுதுணையாக நின்று உழைக்கும் அண்ணார் 59-வது பிறந்த நாளில் அனைவரும் ஒன்றிணைந்து அவர் பல்லாண்டு காலம் கலைச் சேவை புரிய வாழ்த்துவோம்! என பொம்மை இதழில் பதிவு செய்திருந்தார் பாலாஜி அவர்கள்.

காட்சிகள் நினைவுகள் விரியும் - வீணை மைந்தன்

ஜீவன் முக்தி (பகுதி )108

# குழந்தைகள் சீரழிவதில்லை! சீரழிக்கப்படுகிறார்கள்



உங்கள் வீட்டு வரவேற்பு அறையிலேயே, உங்களுடைய படுக்கை அறையிலேயே, உங்களோடு அமைந்தே, ஒரு சின்ன தொலைக்காட்சியிலேயே குழந்தைகளும் எல்லாவற்றையும் பார்க்கின்றார்கள். எல்லாவற்றையும் தெரிந்து கொள்கின்றார்கள்.

எல்லாவற்றையும் பார்ப்பது தெரிந்துகொள்வதுகூட தப்பு இல்லை. ஆனால் அது அவர்களின் வயதிற்கு மீறியதாக இருக்கின்றது. பசுமரத்தாணி பதிந்ததுபோல் ஆழமாகவும் பதிந்துவிடுகின்றது.

அதை நாமும் பெரிமையாக எடுத்துக்கொள்கிறோம்.

இளம் வயதிலேயே பதியும் அளவுக்கு, மீறிய காமங்களும், கற்பனைகளும் குழந்தைகளின் ஆழ்மனதை பாதிக்கின்றன. அந்தப் பதிவுகள் கொடுக்கும் அழுத்தத்தால், உடல் மலர்ச்சி அடையும் வயது குறைந்து கொண்டேவருகின்றது.

இன்று எட்டு வயதிலேயே பிள்ளைகளுக்கு உடல் மலர்ச்சி துவங்கி விடுவதை பற்றி கேட்கும்போது மருத்துவர்கள் வேதனையோடுதான் பகிர்ந்து கொள்கிறார்கள். இது குழந்தைகள் செய்த பாவம் அல்ல.

குழந்தைகளுக்கு இழைக்கப்படும் துரோகம் என்று மனோவியல் நிபுணர்கள் சொல்கிறார்கள்.

உடல்மலர்ச்சி அடையும் வயதை தள்ளிப்போட தள்ளிப்போட குழந்தையின் ஆரோக்கியமும், ஆயுளும் நிறைவுத்தன்மையும் நிறைந்து இருக்கும்.

வாழ்க்கையை வாழ்ந்தோம் என்ற திருப்தியும் நிறைவுத் தன்மையும் குழந்தைகளுக்குள்ளே இருக்கம்.

அந்த நிறைவுத்தன்மை இன்மையால் உடல் மலர்ச்சி நடந்தாலும், இந்தக் குழந்தைக்கு இன்னொரு உடல் வேண்டும் என்கின்ற தேவை எழுகிறது. அந்தச் சமயத்தில் குழந்தைகளுக்கு எதைத் தரவேண்டும், எதைத் தரக்கூடாது என்ற ஞானம் அறிவியலாக வழங்கப்படுவதில்லை.

எதை இழந்தோம் என்பது புரியாததால், எதை அடையவேண்டும்? என்ற ஞானம் இருப்பதில்லை.

----

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் ‘சதக்’ என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

***பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்***

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

# இப்போதும் நடிக்க உடம்பில் தெம்பு இருக்கு, ஆனால் வாய்ப்புத்தான் இல்லை என்கிறார் நடிகர் வடிவேலு



கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக திரைப்படங்களில் தனது முகத்தையும் நகைச்சுவையையும் காட்ட சந்தர்ப்பங்கள் இல்லாமல் வருந்தும் நிலைக்கு வந்துள்ளார் நடிகர் வடிவேலு. அண்மையில், சென்னையில் திரைப்பட வெளியீடு நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற வடிவேலு, பட வாய்ப்பு கிடைக்காதது குறித்து மிகுந்த கவலைடன் பேசியுள்ளார். “உங்களுக்கெல்லாம் ஒரு வருஷம் தான் லொக்டவுன். ஆனால் நான் பத்து வரு‘மா லொக் டவுனிலேயே தான் இருக்கிறேன். இப்போதும் நடிக்க உடம்பில் தெம்பு இருக்கு, ஆனால் யாரும் வாய்ப்பு தருவதில்லை எனக்கூறிய வடிவேலு, கர்ணன் படத்தில் வரும் உள்ளத்தில் நல்ல உள்ளம் பாடலில் வஞ்சத்தில் வீழ்ந்தேனடா என்ற பாடல் வரிகைளைப் பாடிய பின்னர் கண்கலங்கியபடி மேடையை விட்டு கீழே இறங்கினாராம்.

நகைச்சுவை நடிகர் வடிவேலு, சமீபத்திய நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது, பட வாய்ப்பு கிடைக்காதது குறித்து உருக்கமாக பேசியுள்ளார். தமிழ் பட உலகில் முன்னணி நகைச்சுவை நடிகராக கலக்கிய வடிவேலுக்கு வயதானவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைத்து வயதிலும் ரசிகர்கள் உள்ளனர்.

இம்சை அரசன் 24-ம் புலிகேசி படத்தில் நடிக்க அவர் மறுத்ததால் இயக்குனர் ஷங்கர் அளித்த புகாரின் பேரில் வடிவேலுவை புதிய படங்களுக்கு ஒப்பந்தம் செய்ய தயாரிப்பாளர் சங்கம் தடை விதித்தது. இதனால் கடந்த சில வருடங்களாக படங்களில் வடிவேல் நடிக்கவில்லை. தயாரிப்பாளர் சங்கத்தின் தடையை மீறி அவருக்கு வாய்ப்பு அளிக்க பட அதிபர்கள் தயங்குகின்றனர்என்று அங்கு கலந்து கொண்டவர்கள் தெரிவித்தார்கள்.



# முதல்முறையாக தோட்ட தொழிலாளர்களுக்கு எதிராக நிர்வாகத்தினர் நடத்திய போராட்டம்

இலங்கையின் மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களை பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தும் நாடகத்தை தோட்டக் கம்பனிகள் முன்னெடுப்பதை அவதானிக்க முடிகிறது. அதன் அடிப்படையில்தான் கடந்தவாரம் தோட்ட துரைமார் ஹட்டனிலும் பண்டாரவளையிலும் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். முதல்முறையாக தொழிலாளர்களுக்கு எதிராக தோட்ட நிர்வாகத்தினர் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தோட்ட மக்களை அச்சுறுத்தி அடக்கும் வகையில் செயற்படுகின்றனர்.

வெள்ளைக்காரர்களை போன்று தோட்டங்களை கட்டுப்படுத்தி நிர்வகிக்க அரசாங்கமும் தோட்ட நிர்வாகமும் இணைந்து செயற்படுகின்றனவா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. இதனை உடனடியாக நிறுத்த உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களை பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தும் நோக்கில் கம்பனிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாக்கிழமை நடைபெற்ற இரத்தினக்கல் மற்றும் ஆபரண சட்டம் தொடர்பான ஒழுங்குவிதியும் வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஓல்டன் தோட்டத்தில் 32நாட்களுக்கு மேலாக தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக கடந்த 32நாட்களாக தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விவகாரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள 08பெண் தொழிலாளர்கள் போகம்பர சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தை பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரனவின் கவனத்துக்கும் கொண்டுவந்துள்ளேன்.

தோட்டத்திலுள்ள துரைமார் தொழிலாளர்களை தாக்கியதிலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. நிர்வாகத்தினருடன் ஏற்பட்ட முறுகல்கள் காரணமாக தொழிலாளர்கள் தொடர்ச்சியாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். உடனடியாக இந்த பிரச்சினையை தீர்த்துவைக்க முற்பட்ட போதிலும் கம்பனிகள் பேச்சுவார்த்தைக்கு வராது தான் தோற்றித்தனமாக நடந்துக்கொள்கின்றன. இந்த விவகாரம் தொடர்பில் ஹட்டன் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அங்கு வந்திருந்த ஜனாதிபதி சட்டத்தரணியொருவர் நுவரெலியாவில் பயங்கரவாதம் தலைத்தூக்கியுள்ளதாக கூறியுள்ளார். விடுதலைப்புலிகள் இங்குமுள்ளனர் என்ற கோணத்தில் அவரது வாதம் அமைந்திருந்தது.” என்றார்.



# மது அருந்துபவர்கள் சுய இலாபம் கருதி தங்கள் நடத்தையையே மாற்றிக் கொள்கிறார்கள் என்பது தான் உண்மை



மதுவிற்கு அடிமையகிப் போய்விட்ட ஒரு ஆணை திருமணம் செய்யும் பெண் ஒருத்தியால் அவனை அந்த அடிமைப் பெட்டகத்திலிருந்து மீட்டெடுப்பது மிகுந்த கஸ்டமா காரியமாகும். கணவனின் தீய பழக்கத்தால், இந்தப் பெண்ணின் நிம்மதியே பறிபோய் விடுகின்றது. மதுபானம் அருந்தும் ஆணிடம் அந்தரங்கம் உட்பட ஒவ்வொரு விடயத்தையும் மனைவி அசெ-ளகரியமாகவே பகிர்ந்து கொள்கின்றாள். மதுபானம் அருந்தும் கணவ-னுடன் குடும்பம் நடத்தும் அநேகமான பெண்கள் சுதந்திரமின்றி, நிம்மதியற்ற வாழ்க்கையையே வாழ்கின்றனர்.

மது அருந்துபவர்கள் தங்கள் சுய இலாபங்களுக்காகவே நடத்தையை மாற்றிக் கொள்கிறார்கள் என்ற விடயத்தை பெண்கள் ஏனையவர்களுக்குத் தெரியப்படுத்துவது அவசியம். குடித்து விட்டு வன்முறைகளில் ஈடுபடும் ஆண்களே சமூகத்தில் உள்ள பலவீனமானவர்கள் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்துவது அவசியம். அவர்களை நகைப்பிற்கு உட்படுத்துவோம். பெண்கள் ஆண்களுக்கு நிகரானவர்களாவர். ஆண்கள் கொடுக்கும் அனைத்து க்‘டங்களையும் பெண்கள் ஏற்றுக் கொள்வதை விடுத்து, அவ்வாறான ஆண்களையும் நல்வழிக்கு இட்டுச் செல்லக் கூடிய வல்லமையை பெண்கள் பெற வேண்டும். மதுபோதைக்கு அடிமையான ஆண்களின் துன்புறுத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு பெண்கள் வலுவடைய வேண்டும். கணவன் மதுசாரம் அருந்துவதனால் ஏற்படும் விளைவுகள் அனைத்தையும் பெண்கள் சகித்துக் கொண்டு வாழப் பழகாமல், அதற்கு சரியான நேரத்தில் தகுந்த பிரதிபலிப்புகளையும் வழங்க வேண்டும். அவ்வாறு ஆரம்பிக்குமிடத்து பிரச்சினைகளின் விளைவுகளும், பிரச்சினைகளின் அளவும் குறைவடையும் என்பதில் ஐயமில்லை.

மது அருந்துபவர்கள் தங்கள் சுய இலாபங்களுக்காகவே நடத்தையை மாற்றிக் கொள்கிறார்கள் என்ற விடயத்தை பெண்கள் ஏனையவர்களுக்குத் தெரியப்படுத்துவது அவசியம். குடித்து விட்டு வன்முறைகளில் ஈடுபடும் ஆண்களே சமூகத்தில் உள்ள பலவீனமானவர்கள் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்துவது அவசியம். அவர்களை நகைப்பிற்கு உட்படுத்துவோம். பெண்கள் ஆண்களுக்கு நிகரானவர்களாவர். ஆண்கள் கொடுக்கும் அனைத்து கஷ்டங்களையும் பெண்கள் ஏற்றுக் கொள்வதை விடுத்து, அவ்வாறான ஆண்களையும் நல்வழிக்கு இட்டுச் செல்லக் கூடிய வல்லமையை பெண்கள் பெற வேண்டும். மதுபோதைக்கு அடிமையான ஆண்களின் துன்புறுத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு பெண்கள் வலுவடைய வேண்டும். கணவன் மதுசாரம் அருந்துவதனால் ஏற்படும் விளைவுகள் அனைத்தையும் பெண்கள் சகித்துக் கொண்டு வாழப் பழகாமல், அதற்கு சரியான நேரத்தில் தகுந்த பிரதிபலிப்புகளையும் வழங்க வேண்டும். அவ்வாறு ஆரம்பிக்குமிடத்து பிரச்சினைகளின் விளைவுகளும், பிரச்சினைகளின் அளவும் குறைவடையும் என்பதில் ஐயமில்லை.

ஆண்களில் ஏராளமானோர் சம்பாதிக்கும் பணத்தில் பெரும் பகுதியை மதுசாரம் அருந்துவதற்காக செலவழிக்கின்றனர். ஆண்களின் குடிப்பழக்கமானது பெண்களை கஷ்டத்தில் ஆழ்த்தி, குடும்ப பாரங்களை பெண்கள் மீது சுமத்துகின்றது. ஆண்கள் பலர் மதுபானத்துக்காக பெருந்தொகையான பணத்தை விரயமாக்குகின்றனர். இதனால் பெண்களின் நிம்மதி குலைகின்றது.

ஆனால் மனைவியானவள் இவற்றையெல்லாம் சமாளித்துக் கொண்டு வீட்டு பொருளாதாரத்தைக் கவனிக்க வேண்டியுள்ளது. உணவுத் தேவைகளை கவனித்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகளின் கல்வியைக் கவனித்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்குத் தே-வையான உடைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். பண்டிகைகள் வந்தால் தனது குடும்பமும் ஏதோ ஒரு வகையில் அதனை கொண்டாட வேண்டும் என்று பணத்தை சிறுக சிறுக சேமித்து சமாளிக்க வேண்டும். பெண்களின் உரிமைகள் மற்றும் சமத்துவம் ஆகியன மீறப்படும் பிரதான சந்தர்ப்பமே இதுவாகும்.

மதுபானம் அருந்தும் ஆண்கள் பலர் தனது பொறுப்புக்களில் இருந்து விலகி நிற்பதற்காகவே அவ்வாறான செயலில் ஈடுபடுகின்றனர். மது அருந்தி விட்டு போலியாக நடித்து பெண்களை துன்புறுத்துகின்றனர். சண்டைகளில் ஈடுபடுகின்றனர். ஆகவே பெண்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். சரியான பிரதிபலிப்புகளை வழங்க வேண்டும்.

மது அருந்தி விட்டு வரும் ஆண்களை விஷேடமாக கவனிப்பது, அவ்வாறான நேரங்களில் பிரச்சினைகளை அல்லது கஷ்டங்களை அவர்களிடம் கூறாமல் இருப்பது போன்றன பெண்களால் குடிப்போருக்கு வழங்கப்படும் சலுகைகளாகும். அவ்வாறான சலுகைகளை வழங்குமிடத்து குடிக்கும் சில ஆண்கள் அதனை பயன்படுத்திக் கொண்டு மேலும் மேலும் பெண்களுக்கு மனஅழுத்தங்களையும், கஷ்டங்களையும் விளைவிக்கின்றனர். குடிப்பவர்களில் பலர் நடிக்கிறார்கள் என்ற விடயத்தை நாம் அறிந்துள்ளோம். பின்வரும் விடயங்களை அவதானித்தால் மேலும் அதனை உறுதி செய்து கொள்ள முடியும்.

மது அருந்தியதும் பலர் அப்பாவித்தனமுடைய ஒருவரிடம் சண்டை போடுகிறார். ஆனால் பலசாலியிடம் அடங்குகிறார்.

மனைவியிடம் சண்டை போடுகிறார். மனைவியின் அண்ணனோ, தம்பியோ வந்தால் அமைதியாக நடந்து கொள்கிறார். கிராமத்தைச் சேர்ந்தவர்களிடம் குடித்திருப்பதை இனங்காட்ட முயற்சிக்கிறார். ஆனால் பொலிஸ்காரரைக் கண்டால் குடிக்காதவரைப் போன்று நடிக்க முயற்சிக்கின்றார்.

குடிப்பவர்கள் இவ்வாறு நடிப்பதை பெண்கள் அறியாத காரணத்தினாலேயே அதிகமாகப் பெண்களுக்கெதிரான வன்முறைகள் இடம்பெறுகின்றன. சமூகம் குடிப்பவர்களின் நடிப்புகளுக்கு ஏமாந்து பல்வேறு விதத்தில் சலுகைகள் வழங்குகின்றது. குறிப்பாகப் பெண்கள் அதிகமாக சலுகைகள் கொடுப்பதனாலேயே அவர்கள் மேலும் மேலும் மது அருந்துகின்றார்கள்.

**- கொழும்பிலிருந்து விசாகதேவன்**


**Flex Institute நிறுவனத்துடன் சேர்ந்து உங்கள்**
**கனடா செல்லும் கனவினை நனவாக்குங்கள்!**

நீங்கள் கனடாவுக்குச் செல்வதைப் பற்றிய கவலையா? உங்கள் கனவை நாம் நனவாக்குகின்றோம். இலங்கையின் முன்னணி கனேடிய விசா ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான நற்பெயரை Flex Institute நிறுவனம் கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் கனடா செல்லும் விண்ணப்பதாரிகளுக்கு எமது சிறந்த சேவையினை வழங்கி அதன் மூலம் அவர்களின் விசா விண்ணப்பங்களின் வெற்றியை உறுதிப்படுத்துகிறோம். நாம் முக்கியமாக எமது கனடிய விண்ணப்ப நிலையத்தின் மூலம் **Student Visa, a Student- Dependent, Open Work Permit, Visitor Visa, Visa Refusals, Family Visit Visa, Business Visit, and Super Visa Facilities**. வழங்குகிறோம். இதற்கென்றே எமது அனுபவமிக்க தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் உங்களுக்கான உதவிகளை செய்வதற்கு காத்திருக்கிறார்கள். எந்த விதமான தங்குதடையோ, தாமதமோ இன்றி உங்களுக்கான விசாவினை கூடிய விரைவில் பெற்றுத் தருவதில் உத்தரவாதமளிக்கின்றோம். இதற்கென்றே அமைந்ததுதான் எமது On The Spot Consultation சேவை. எமது வாடிக்கயாளர்களில் பலர் மாணவர் முதல் பிற பிரிவுகள் வரை அவர்களது விசா விண்ணப்பங்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளனர். **University of Canada, West Algoma University, Fanshawege College, Centennial College, Seneca College, Georgian College, Cambrian College, ST. Laurence College, University of Saskatchewan, Lakehead University.** போன்ற கனடாவிலுள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்வி கற்பதற்காக விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை நேருக்கு நேராக வழங்குவதுடன் விசாவினை பெற்றுத்தர உதவுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் நிதி பின்னணி குறித்து கவனமாக அவதானித்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் தேர்வு செய்ய நாம் உதவத் தயாராக உள்ளோம். எமது Flex Institute வாடிக்கையாளர், மாணவர்களின் மறுக்கப்பட்ட விசாக்களை பெற்றுத் தந்து அதன் மூலம் பலரது நன்மதிப்பையும் பெற்றுள்ளோம்.

ஆலோசனைகளை தவிர IELTS பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்து ஆங்கில மொழியில் பரீட்சை **IELTS, Duolingo English Test, TOFEL and PTE (Academic)** பயிற்சி மற்றும் உதவிகளை செய்து தருகிறோம். ஒரு அனுபவமிக்க விசா நிறுவனமாக எம்மை நாம் உத்தரவாதம் அளிப்பதுடன் உங்கள் விசாவிற்கும் உத்தரவாதம் அளித்து உங்கள் கனடிய கனவு நனவாகும். என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

- **இலவச ஆலோசனை**
- **புலமைப்பரிசில்கள்**
- **1000க்கும் மேற்பட்ட கல்வித்திட்டங்கள்**

Student Visa, Student Dependent, Business Visa, Family Visit Visa, Super Visa requirements சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.



Are You Looking For
**Canada**

- Student Visa
- Visit Visa
- Rejected visa
- Business visa
- Super Visa
- Tourist Visa

**Call us on: 0777 761 346**

flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
**Hotline: 0777 761346**
E-mail: flexinstitute04@gmail.com
**www.flexinstitute.lk** YouTube
*10 வருட கால நம்பிக்கையான சேவை*



**இலங்கையில் இருந்து கனடா வருவதற்கான அனைத்து வேலைகளும் நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்...**

**Canada VISA**

**STUDENT VISA STUDY, WORK & SETTLE, SPOUSE, OPEN WORK PERMIT.**

- பாடநெறி கட்டணம் ரூ.350,000 இருந்து
- சகல வசதிகளும் செய்து தரப்படும்
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS

**VISIT VISA**
பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

**REFUSED VISA**
உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**வயதெல்லை இன்றி VISA கிடைப்பதற்கான அனைத்தும் செய்து தரப்படும்.**

*Congratulations!*
*Successful visa holders through our company for the year 2020, 2021*



STUDENT VISA MANOJAN RAVIDU | STUDENT VISA VIKMA SAJANI | STUDENT VISA HARSHAN | STUDENT VISA SHACHILA THANUTH | STUDENT VISA SUMITHAN



OPEN WORK PERMIT, STUDENT VISA Mr. & Mrs. Navaneethan | STUDENT VISA INDEEWARA! | STUDENT VISA KETHESWARANS | STUDENT VISA NIRMANEE

VJ-COLOMBO


தற்பொழுது நடைபெறுகிறது
Since 1986 சங்கர் அன் கோ
மாபெரும் மலிவு விற்பனை!
இறக்குமதியாளர்கள், மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
அனைத்து வீட்டு உபயோகப் பொருட்களின் புதிய வரவுகள் !
இல்லத்தரசிகளின் சமையற் கலைக்கான தேர்வுகளுக்கு தன்னிகரற்ற இடம் !
SOWBAGHYA
Preethi
ULTRA
சுவாமிப் படங்கள்
உணவுப் பொருட்கள்
பசுமையான மரக்கறி
மற்றும் பழவகைகள்
பூசைப் பொருட்கள்
ஆலயத்திற்குத் தேவையான
வழிபாட்டுப் பொருட்கள்
மங்கல நிகழ்வுகளான
திருமணம், குடிமனைபுகுதல்
ஆயுர்வேத மருந்துகள்
விசேட கூந்தல் தைலங்கள்
அனைத்து மூலிகைப்
பொருட்கள்....
ASIA Kitchen Machines
PREETHI Premier Mixies
ULTRA Wet Grinder
SOWBAGHYA Wet Grinder
PREMIER Wet Grinder
மண் சட்டிகள்
மட் பானைகள்
மண் அடுப்புகள்
மண் கூசாக்கள்
மின் தேங்காய் துருவி
மண்வெட்டிகள்
அப்பச்சட்டி
குளிப்பணியாரச்சட்டி
சில்வர் பானைகள்
எவர் சில்வர் பாத்திரங்கள்
எவர்சில்வர் பேணிகள்
சாப்பாட்டுத் தட்டுகள்
அலுமினி/மண் பானைகள்
அடுக்குச் சட்டிகள்
பிட்டுக் குடம், பானைகள்
தோசைக் கல்லு, உரல்
தேங்காய் துருவிகள்
கத்தி, கரண்டிகள்
இன்னும் பல!
தைப்பொங்கல் புத்தாண்டு.
மற்றும் ஆலய உற்சவங்கள். புதிய இல்லங்களின்
கிரகப் பிரவேச வைபவங்கள். திருமணங்கள் மற்றும்
விசேட வைபவங்கள் ஆகியவற்றுக்கு தேவையான அனைத்துப்
பொருட்களும் சங்கர் அன் கோவில் தவறாமல் கிடைக்கும்.
தற்போது தமிழர் புத்தாண்டை முன்னிட்டு. இல்லங்களுக்குத் தேவையான.
குறிப்பாக சமையல் அறைக்குத் தேவையான Rice Cookers. Grinding
Machines, Rotty Makers and Sumeet, Preeti, Premier Chefmaster
Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து விமானங்களின்
மூலம் இறக்குமதி செய்யப்பெற்றுள்ளன.
இன்றே தொலைபேசியில் அழைத்து உங்கள்
வருகையை உறுதி செய்த பின்னர்
முகக் கவசம் அணிந்து செல்லுங்கள்...
தற்போது காலை 8.30 மணி
தொடக்கம் இரவு 9.00 மணி
வரை திறந்திருக்கின்றது
அனைத்து விதமான
பசுமைமிகு பூக்கள்
மல்லிகை மொட்டு
கனகாம்பரம்
தாமரைப் பூ
சாமந்தி, அலரி
ரோஜாப்பூக்கள்
அல்லிப் பூ
கார்னேஷன் பூ
வாழை இலை
மாவிலை, அறுகு
வில்வம், துளசி, அரசிலை
பூச்சரம் எல்லா நாட்களும் கிடைக்கும்!
பிற்புறத்தில் தாராளமான வாகனத் தரிப்பிடமுண்டு
SHANKAR & Co.
2425 Eglinton Avenue East, Unit 6, Scarborough, ON M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916
(Kennedy & Eglinton)
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்!
OPEN 7 Days a week

# மீள்பதிப்பு செய்யப்பட்ட இந்து கலைக் களஞ்சியம் பிரதமரின் தலைமையில் வெளியீடு



சைவ தமிழ் மக்களால் மகோன்னத நாளாக அனுஷ்டிக்கப்பட்டுவரும் மகா சிவராத்திரி நன்னாளினை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மீள்பதிப்புச் செய்யப்பட்ட பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்ட இந்து கலைக் களஞ்சியம், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் நேற்று (2021.03.09) பிற்பகல் அலரி மாளிகையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 1988ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்து கலைக் களஞ்சிய உருவாக்கப் பணி 2014 ஆம் ஆண்டில் பன்னிரண்டு தொகுதிகளை நிறைவு செய்திருந்தது.

அக்காலப்பகுதி, தற்போதைய பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், இலங்கை திருநாட்டின் அதிமேதகு ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியாகவும் இச்செயற்றிட்டத்திற்கான ஊக்கம் நல்கிய காலமாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.







அதற்கமைய மீள்பதிப்புச் செய்யப்பட்ட இந்து கலைக் களஞ்சியத்தின் ஆரம்ப பிரதிகள் கௌரவ பிரதமரினால் இந்து மதகுருமார்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி சுரேன் ராகவன், அங்கஜன் ராமநாதன், எம். ரமேஷ்வரன் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோருக்கும் இந்து கலைக் களஞ்சியத்தின் பிரதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கையின் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் கௌரவ பிரதமர் ஆற்றும் தனித்துவமான சேவைக்கு இதன்போது இந்து மதகுருமார் பாராட்டு தெரிவித்தனர்.





இதன்போது கௌரவ பிரதமரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் சைவ தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில், மகா சிவராத்திரி நிகழ்வினை சிறப்புற நிகழ்த்த ஊக்கம் நல்கும் வகையில் பகுதியளவிலான அனுசரணையாக நிதியுதவி வழங்கும் செயற்றிட்டமும் இடம்பெற்றது.

அந்தவகையில், ஐம்பது ஆலயங்களுக்கு தலா ரூபாய் 50,000 வீதம் நிதியுதவி வழங்கும் இச்செயற்றிட்டத்தின் தொடக்க நிகழ்வாக கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், வரகாபொல ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், ஹொரண ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்களுக்கு இந்நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது. சிவராத்திரி விரதத்தினை பக்திபூர்வமாகவும், சுகாதார நடைமுறைகளுடனும் அனுஷ்டிப்பதற்கான அறிவுறுத்தலுடன் இந்நிதி வழங்கப்பட்டது.









குறித்த நிகழ்வில், கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி அக்சராத்மானந்த மகராஜ், சின்மயாமிஷன் சுவாமிகள் குணாதீதானந்த சரஸ்வதி, பிரதமரின் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா, கடற்றொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், கலாநிதி சுரேன் ராகவன், மருதபாண்டி இராமேஸ்வரன், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்த்தன, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு. அ. உமாமகேஸ்வரன், கலாநிதி க.ரகுபரன், இந்துப் பண்பாட்டு நிதியத்தின் உறுப்பினர் திரு.சின்னத்துரை தனபால உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**மன்னார் நிருபர் (10-03-2021)**

## வீணாவின் கவிக்கணை

ஒரு வேளை சோற்றுக்கே
பெரும்பாடாய் இருக்க,
பள்ளிப்படிப்போ
கனவாய் தெரிய,
உடுக்கும் உடையும்
கந்தலாய் போக,
படுக்கும் இடமும்
சாலையோரமாக,
எத்தனை எத்தனை
அவலங்கள்,
இவை அத்தனையும்
தாங்கிடவோ படைத்தாய்
என்று கதறி அழுவதற்கும்
தெம்பில்லை எனக்கு,
உனக்கென்றால் கொடுத்திடும்
கூட்டம், ஏனோ எனக்கென்றால்
கொடுக்க மறுக்கிறது?
உனக்களித்தால் அருள்
கிடைக்கும் என்றெண்ணுவோர்க்கு,
எனக்களிப்பதே நீ விரும்புவாய்
என்பதறியாரோ?
எங்கே இறைவன் என
தேடுவோர்க்கு, ஏழையின்
சிரிப்பில் உன்னைக்
காணத் தெரியாதோ இறைவா?

# இவ்வார ராசிபலன்

## 12-03-2021 வெள்ளி தொடக்கம் 18-03-2021 வியாழன் வரையும்




**மேஷம்:** பொலிவான மணவாழ்க்கை பொருத்தமாக அமையக்கூடிய பொன்னான வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராஜவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** முற்பகலிலேயே முக்கிய மாற்றங்கள் நிகழக்கூடிய நல்ல வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணி-மணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நந்தாதேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** ஆனந்தப் பயணமும் அதிஅற்புத மகிழ்ச்சியும் கிடைக்கக் கூடிய நல்ல வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டமாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: புட்டுச் சொக்கநாதர், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** சூட்சுமத்தோடு செயல்பட்டு சுபிட்ஷங்கள் பெறக்கூடிய நல்ல வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வே-றுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வெக்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** அச்சங்கள் விலகி அம்சங்கள் பெருகக்கூடிய நல்ல வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: திருமலைராயர், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V





**கன்னி:** அருமையைச் சிநேகிதத்தால் ஆதாயம் கிடைக்கக்கூடிய உத்தமமான வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** உறவுப் பெண்களால் உதவி கிடைக்கக்கூடிய உத்தமமான வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவ-ினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பண-ியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான நாள். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹாரிஹரசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உழைப்பால் மதிப்பும் உங்களால் சிறப்பும் சேரக்கூடிய பொறுப்பான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்திபாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** மன அழுத்தமும் ரண வேதனையும் விலகக்கூடிய மகத்தான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமா-கும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்தான லட்சுமிகணபதி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** கைமேல் காசும், கௌரவ வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலை-பேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெ-குமதி கூடும். எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: மணக்குழ பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** அதிகாரப் பதவியும் அடி மனதில் திருப்தியும் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவ-ியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தாய்முகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** விருப்பப்பட்ட விஷயங்கள் பொருத்தமாகக் கிடைக்கக்கூடிய திருத்தமான வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K

---------------

# புனே சர்வதேச திரைப்பட விழாவிற்கு "கட்டில்" திரைப்படம் தேர்வாகியது



மகாராஷ்ட்டிரா மாநில அரசாங்கம், புனே பிலிம் பவுண்டேசன் இணைந்து நடத்தும் 19வது புனே சர்வதேச திரைப்பட விழாவிற்கு “கட்டில்” தமிழ் திரைப்படம் தேர்வாகியிருக்கிறது. இதுபற்றி “கட்டில்” திரைப்படத்தின் இயக்குனரும், தயாரிப்பாளரும், கதாநாயகனுமான இ. வி. கணேஷ்பாபு கூறியதாவது. வருடம்தோறும் மகாராஷ்ட்டிரா அரசாங்கம் நடத்தும் புனே சர்வதேச திரைப்பட விழாவிற்கு, இந்தியா மட்டுமின்றி உலகெங்கிலும் எடுக்கப்பட்ட திரைப்படங்களிலிருந்து தேர்வு செய்து சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்படுகிறது. அப்படி ஒரு வாய்ப்பு எனது கட்டில் திரைப்படத்திற்கு கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் இத்தருணத்தில் புதுமுயற்சியாக “கட்டில் திரைப்பட உருவாக்கம்” என்ற நூலை வெளியிடுகிறேன். சினிமா தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை வாரிவழங்கிய சாதனையாளர்கள் சிலர் “கட்டில்” திரைப்படத்திலும் தங்களது பங்களிப்பை தனிச்சிறப்புடன் வழங்கி இருக்கிறார்கள். இந்த ஆளுமைகளின் செயற்பாட்டால் “கட்டில்” எப்படி உருவானது என்பதை சொல்வதே இந்த நூலின் நோக்கம். கட்டிலில் பயணித்தவர்களின் அனுபவ மொழிகளால் நிரம்பி வழிகி-றது இந்த நூல். சிருஷ்டிடாங்கே கதாநாயகியாகவும் மற்றும் கீதா கைலாசம், “மாஸ்டர்” நிதீஷ், எழுத்தாளர் இந்திராசௌந்தர்ராஜன், கன்னிகா, ஓவியர் ஸ்யாம், செம்மலர்அன்னம், “மெட்டிஒலி” சாந்தி, “காதல்” கந்தாஸ், சம்பத்ராம், ஆகியோர் நடித்திருக்கும் இந்த படத்திற்கு எடிட்டர் பீ. லெனின் கதை, திரைக்கதை, வசனம், படத்தொகுப்பு ஆகிய பொறுப்புகளை ஏற்றிருக்கிறார். ஸ்ரீகாந்த்தேவா இசையில் வைரமுத்து, மதன்கார்க்கி பாடல் எழுத, சித்ஸ்ரீராம் ஒரு பாடலை பாடியுள்ளார். விரைவில் கட்டில் படத்தின் பாடல் வெளியீட்டு விழா நடைபெற இருக்கிறது. இவ்வாறு கட்டில் திரைப்பட இயக்குனர் இ. வி. கணேஷ்பாபு கூறினார்.

*மக்கள் தொடர்பு: சதீஷ்*


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

அத்தியாயம் 2

# கல்கியின்
# பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் கடம்பூர் பயணம்...


'ஆகா என்ன பாய்க்கியம் செய்தேன் யாரும் காணாத அதிசயத்தை நான் காணப்போகிறேன் வீரத்திலும், அழகில் மன்மதனையும் ஒத்த சோழநாட்டு ராஜ்ஜியத்தின் சுந்தர சோழ மகாராஜாவை நேரில் பார்க்கப் போகிறேன். அவருடைய செல்வப் புதல்வி பேரழகி குந்தவை பிராட்டியையும் தரிசனம் செய்யப் போகிறேன்' என்ற குதுகலத்தில் அவன் உள்ளம் துள்ளியது. இதனால் வழியில் தடையேதும் இருக்கக் கூடாது என்று சொல்லிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தான். தடை வந்தால் என்ன செய்வது? என்று தன்னிடம் தானே கேட்டுக் கொண்டான். 'கையில் வேல், உறையில் வாள், மார்பில் கவசம், நெஞ்சில் உரம் உள்ளதே!' என்று தனக்குத்தானே பதிலும் சொல்லிக் கொண்டான். இருந்தும் இளவரசர் அதற்கெல்லாம் போட்ட முட்டுக்கட்டையை முன் நிறுத்தினான். இவ்வாறு சிந்தித்தபடி வீரநாராயணபுர விண்ணகக் கோவிலை நெருங்கினான். அங்கு ஆலயத்தைச் சுற்றியுள்ள காட்சிகளைக் கண்டு களித்தபடி செல்லும் போது அன்று ஆடித் திருமஞ்சன திருவிழாவிற்கு சேர்ந்திருந்த பெரும் சனக் கூட்டத்தைக் கண்டான். அந்த மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து விவாதிக்கும் தொனியில் பேச்சுக்கள் எழுவதைக்கேட்டான். என்ன விவாதம் என்று அறிய ஆவல் கொண்டவனாக, அந்தக் கூட்டத்துள் பிரவேசித்தான். அங்கு சிவனை வணங்கும் சிவபக்தரும், திருமாலை வணங்கும் வைஷ்ணவ பக்தரும், சைவரும் வைக்ஷ்ணவருமல்லாத நாத்திகவாதியும் கடவுளே இல்லை என்றும், யார் கடவுள் பெரிது என்றும் வீண் வாதம் செய்துகொண்டிருந்தார்கள். வாதங்கள் விரிசல் பெற்று கைகலப்பாயிற்று. இதைப் பார்த்துக் கொண்டிருந்த வந்தியத்தேவனுக்கு கோபம் வந்தது. இந்த மூடச் சண்டையைத் தவிர்க்க வேண்டும் என்று குரல் கொடுத்தான். 'எதற்காக ஐயா நீங்கள் சண்டை போடுகிறீர்கள் வேறு வேலை ஒன்றும் உங்களிற்கு இல்லையா? சண்டைக்கு தினவு எடுத்தால், ஈழநாட்டிற்குப் போவதுதானே அங்கு பெரும் போர் நடந்துகொண்டிருக்கிறதே' என்றான். வந்தியத்தேவனின் வசிகரத்தோற்றம் மக்களைக்கவர 'தம்பி நீ நியாயம் சொல் நாங்கள் உன் பக்கம் இருக்கிறோம்'. என்று ஆர்ப்பரித்தனர். அப்பொழுது, 'யார் கடவுளும் பெரியவர் இல்லை.

அரியும் சிவனும் ஒன்று அறியாதவர் வாயிலோ மண்ணு' என்று சொல்லி தன் கையிலிருந்த ஒரு பிடி மண்ணை வீசி உதறினான். மக்களும் பிடி மண் எடுத்து நம்பி தலையிலும், பட்டர் தலையிலும் வீசி அடித்தனர். கூட்டமும் கலைந்தது. இந்த வேளை இடிமுழக்கக் குரலில் கட்டியம் கூறுவது கேட்டது. 'சூராதி சூரர் வீரப்பிரதாபர், மாறபாண்டியன் படையை வீறு கொண்டு தாக்கி வேரோடு அறுத்த வெற்றிவேல் உடையான் 24 போர்களில் சண்டையிட்டு 64 விழுப் புண்களைப் பொற்ற திருமேனியர், சோழ நாட்டுத் தனாதிகாரி தானியப் பண்டார நாயக்கர், இறைவிதிக்கும் தேவர் பெரியபழுவேட்டரையர் விஜயம் செய்கிறார்! பராக் பராக் வழிவிடுங்கள்' அதைக் கேட்டு மக்கள் வழிவிடவே ராஜகுல ஊர்வலம் நகர்ந்து சென்றது. வந்தியத்தேவனும் யானை மீது சென்ற பழுவேட்டடரையரைப் பார்த்தான். 'ஆகா மீண்டும் ஒரு சந்தர்ப்பம்! மாவீரர் பழுவேட்டரையர், தெற்கே ஈழநாட்டில் இருந்து வடக்கே கலிங்கம் வரை பிரசித்தமானவர். சோழ மன்னர் குடும்பங்களுடன் கொள்வினை, கொடுப்பினை செய்து வந்த குலம். இவர்களைப் பார்க்க என் கண்கள் எத்தனை கொடுப்பனை செய்ததோ!' என்று எண்ணியபடி, கூட்டத்தோடு கூட்டமாக கரையோரமாக நின்றான். அப்பொழுது அந்த ஊர்வலத்தில் யானை மீது கரிய உருவமுடைய ஐம்பது பிராயத்தை தொட்டவர் கம்பீரத் தோற்றம் கொண்டு விறுமாப்புடன் வீற்றிருந்த மாவீரர் ஒருவரைக் கண்டு இவர் தான் பெரியபழுவேடட்டரையர் என்று தெரிந்து கொண்டான். அந்த யானையின் பின் ஒரு மூடப்பட்ட சிவிகை தொடர்ந்தது. அது யாரென்று அறிய ஆவல் கொண்டு நிற்கையில், சிவந்த நிறக் கைகளில் வளையல்கள் குலுங்க ஒரு கரம் திரையை விலக்கியது. பூரண சந்திர காந்தி ஒளி வீசும் முகம் ஒன்று தெரிந்தது அதைப்பார்த்ததும் வந்தியத்தேவனுக்கு ஏனோ பயமும் அருவருப்பும் வந்தது. அந்த முகம் யாரையோ உற்று நோக்கி விட்டு

பயத்துடன் திரையை மூடிக்கொண்டது, பின்னர் வந்தியத்தேவன் தன் குதிரையை நிறுத்தி வைத்திருந்த இடத்திற்குச் செல்ல ஆயத்தமானான்.

அப்பொழுது, பழுவேட்டரையரின் ஆட்கள் சிலர் வந்தியத்தேவனின் குதிரையை நகைப்பும், சேட்டையும் செய்து ஓட விட்டனர். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வந்தியத்தேவனுக்கு கோபம் கொப்பழித்தது. கோபத்தை அடக்கியவாறு தன் குதிரை சென்ற திசை நோக்கி நடந்தான். பழுவேட்டரையரின் அகம்பாவம் பிடித்த ஆட்களுக்கு புத்தி புகட்ட வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் எழுந்தது.

திருமால் தான் பெரிது என்று வாதமிட்ட வீர வைஷ்ணவன் ஆழ்வார்க்கடியான் நடந்தவை யாவற்றையும் பார்த்தவண்ணம் இருந்தான். பின்னர் வந்தியத்தேவனிடம் வந்து 'தம்பி நீ எங்கே போகிறாய்?' என்று கேட்டான். அதற்கு வந்தியத்தேவன், 'கொஞ்சம் மேற்கு சென்று தெற்குத் திரும்பி கிழக்கு வளைந்து தென்மேற்கே போவேன்' என்று குதர்க்கமாகப் பதில் சொன்னனான். அதற்கு ஆழ்வார்க்கடியான், 'இன்றைக்கு பல ஊர்களில் இருந்தும் பல விருந்தாளிகள் அங்கே வருகிறார்கள். பழுவேட்டரையரும் அங்கேதான் போகிறார். நீ அங்கு போனால் எனக்கு ஒரு உதவி செய்வாயா?' என்று கேட்டான். இதைக் கேட்ட வந்தியத்தேவன் வியப்புக் கொண்டு யோசனை செய்தபடி பழுவேட்டரையருடன் பழக்கம் செய்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பம். என் நண்பன் கந்தமாறன் கடம்பூர் அரண்மனைக்கு வருமாறு கேட்டுக்கொண்டிருந்தான். இப்பொழுது அங்கு செல்வதற்கான நேரம் என்று திட்டம் தீட்டியபடி தொடர்ந்து சென்று கொண்டிருந்தான். வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானிடம் 'ஏன் என்னைத் தொடர்ந்து வருகிறாய்?' என்றான். அதற்கு ஆழ்வார்க்கடியான், 'நான் விண்ணகரக் கோவிலுக்குப் போகிறேன்' என்றான். அப்பொழுது வந்தியத்தேவன், 'வீரநாராயணன் ஏரியைக் காக்கவென இந்தக் கோவில் அமைக்கப்பட்டது என்பதனை அறிவேன். இக் கோவில் பார்க்க வேண்டிய ஒன்று தரிசிக்க வேண்டிய சந்நிதி' என்றான். அதற்கு ஆழ்வார்க்கடியான், 'இன்று இங்கு விசேட உற்சவம் உண்டு நான் ஆண்டாள் பாசுரம் பாடப் போகிறேன்'. என்றதும் வந்தியத்தேவன், 'நானும் கோயில் தரிசனம் வருகிறேன்' என்று இருவரும் கோயிலுக்குச் சென்றனர். அங்கு ஆழ்வார்க்கடியான் மிக்க பக்தியுடன் பாசுரம் பாடி உருகினான். அதைக் கேட்ட யாவரும் பக்திப் பரவசம் கொண்டனர். பின்னர் இருவரும் வெளியே வந்ததும் வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானை நோக்கி, 'நீங்கள் பரம பக்தர், பண்டித சிகாமணி என்று எனக்குத்தெரியாமல் உங்களிடம் நான் அபசாரமாகப் பேசியதற்கு என்னை மன்னிக்கவும்' என்றான். 'மன்னிக்கிறேன் எனக்கு நீ உதவுவாயா?' என்றான் ஆழ்வார்க்கடியான். வந்தியத்தேவன் 'என்ன உதவி' என்று கேட்க அதற்கு அவர், 'நான் ஒரு சிறிய சீட்டுக் கொடுக்கிறேன், அதை நீ கடம்பூர் போனால் தக்க சமயம் பார்த்து பழுவேட்டரையரின் யானைக்குப் பின்னால் போன மூடு பல்லக்கில் உள்ள பெண்ணிடம் கொடுப்பாயா?' என்றார். வந்தியத்தேவன் படபடப்புடன் 'என்னால் முடியாது இத்தகைய காரியங்களை நான் செய்ய மாட்டேன்' என்று மறுத்தான். அவன் ஆழ்வார்க்கடியானிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு தன் குதிரை மீது தாவி ஏறி கடம்பூரை நோக்கிப் புறப்பட்டான். சோழ நாட்டுப் பெருங்குடித் தலைவர்களில் செங்கண்ணர் சம்புவரையர் ஒருவர். இவர் கடம்பூர் அரசர். வந்தியத்தேவன் கடம்பூர் சம்புவரையர் மாளிகை வாசலை அடைந்தான். அங்கு ஒரு பெரிய நகரத்தின் கோட்டை வாசல் போல் பெரும் நெடுஞ்சாலைகள் வளைந்து காணப்பட்டன. அத்துடன் ஒரே கோலாகலமாக இருந்தது. இங்கே ஏதோ ஒரு பெரிய விசேடம் நடைபெற இருக்கிறது. அது என்ன என அறிய ஆசை கொண்டவனாய் 'ஓ கோட்டை வாசல் திருத்தலமாக இருக்கிறது. கோட்டை வாசலில் வேல் பிடித்த வீரர்கள் நின்று கொண்டிருக்கிறார்களே! எப்பபடி உள்ளே நுழையலாம்' என்று சிந்தித்தபடி தன் வீர தீர செயலைக் காட்ட எண்ணி தன் குதிரையுடன் மாளிகை வாசலை அடைந்தான். அப்பொழுது அங்கு நின்ற வேல் பிடித்த வீரர்கள் வேல்களைக் குறுக்கே பிடித்து வந்தியத்தேவனை மறித்தார்கள். இன்னும் சில வீரர்கள், அவன் குதிரையின் தலைக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு தீ வர்த்தியை உயர்த்தி வந்தியத்தேவனின் முகத்தை உற்றுப்பார்த்தார்கள். அப்பொழுது வந்தியத்தேவன் கோபத்துடன், 'இதுதான் உங்கள் ஊர் வழக்கமா? வந்த விருந்தாளிகளை வாசலிலே நிறுத்துவதா? என் ஊரும் பெயரும் கேட்கிறாயா?'




பின்னர், வாகைப்பாடி நாட்டு திருவல்லம் என் ஊர், என் பெயர் வல்லவரையன் தெரிந்ததா? என்றான். அதற்கு காவல்காரன் ஒருவன் 'நீ யாராக இருந்தால் என்ன உள்ளே போக முடியாது. இன்றைய விருந்தாளிகள் யாவரும் வந்துவிட்டதாக எஜமானின் செய்தி வந்துவிட்டது' என்றான்.

தொடரும்...

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

# கனடாவின் வோட்டலூ தமிழ்க் கலை பண்பாட்டுக் கழகத்தினர் பெண் தலைமைத்துவத்தை போற்றுகின்றனர்

கனடாவில் கடந்த பல வருடங்களாக இயங்கிய வண்ணம் சமூக சேவையாற்றிவரும் வோட்டலூ பிராந்திய தமிழ்க் கலை பண்பாட்டுக் கழகத்தினர் பெண் தலைமைத்துவத்தை போற்றுகின்றனர். மேற்படி வோட்டலூ பிராந்திய தமிழ்க் கலை பண்பாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர்களாக சேவையாற்றிய நான்கு பெண் தலைவிகளை கழகத்தின் தற்போதைய இயக்குனர் சபை பாராட்டியுள்ளது. அவர்களுடைய பெயர்களும் படங்களும் இங்கே காணப்படுகின்றன. இந்த வருடத்தின் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்த வாழ்த்தும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**Tamil Cultural Association of Waterloo Region**
**தமிழ்க் கலை பண்பாட்டுக் கழகம்**
**வோட்டலூ வட்டாரம்**



**President**
**2011 - 2013**



**President**
**2013 - 2015**



**President**
**2015 - 2017**



**President**
**2019 - 2021**

THANK YOU
To all women volunteers, Artists, Teachers and Supporters.

The Executive Committee
Tamil Cultural Association of Waterloo Region

# ஈழத்துத் திருக்கோவில்கள் 937



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## வந்தாறுமூலை மகாவிஷ்ணுகோவில்
### மட்டக்களப்பு

" யானே தவம் செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான் – யானே
இருந்தமிழ்நன்மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது. "

ஈழத்திலே பல்வேறுவகையான வழிபாடுகள் காணப்படுகின்றன. இவ்வழிபாடுகளுள் மகாவிஷ்ணுவின் வழிபாடு சிறப்புற்று விளங்கும் பிரதேசமாக மட்டக்களப்புப் பிரதேசம் காணப்படுகின்றது. இங்குள்ள மக்களுள் பெரும்பாலானோர் சைவசமயிகளாகக் காணப்பட்டபோதிலும், இம்மக்கள் காக்கும் கடவுளாக விளங்கும் மகாவிஷ்ணுவையும் ஆலயம் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

முழுமுதற் கடவுளாக விளங்கும் சிவபெருமானின் தோற்றப்பாடுகளுள் ஒன்றாகக் காணப்படும் சிவலிங்கத் திருமேனியிலும் மூன்று அம்சங்கள் காணப்படுவதைச் சைவத்திருக்கோயிற் கிரியை நூல்கள் விளக்கியுள்ளன. ஒன்று பிரம்மபாகம். மற்றையது விஷ்ணுபாகம். மூன்றாவது உருத்திரபாகம். விஷ்ணுபாகம் சிவலிங்கத்திருமேனியின் நடுவிலுள்ள அம்சமாகக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையைக் கருத்திலே கொண்டு சைவமக்கள் விஷ்ணுவழிபாட்டையும் ஏற்று வழிபட்டு வருகின்றனர். அத்தோடு திருமாலின் தங்கையாகச் சக்தியைக் கருதி, விஷ்ணு வழிபாட்டினைச் செய்து வருகின்றனர்.

ஐவகை நிலங்களுள் முல்லைநிலத்துத் தெய்வம் மாயோன் எனத் தொல்காப்பியம் கூறியுள்ளது. மாயோன் அல்லது திருமால்பற்றிய குறிப்புக்களைச் சங்கஇலக்கியங்களிலே காணக்கூடியதாயுள்ளது. திருமாலை விஷ்ணு என்று அழைப்பது வழக்கம். திருமால் மும்மூர்த்திகளிலே காக்கும் கடவுளாக விளங்குகின்றார். திருமால் அல்லது விஷ்ணு என்பதன் பொருள், உலகம் எங்கும் நிறைந்துள்ளவர் என்பதாகும்.

மிகப்பழைய நூல்களிலே மால், மாயோன் என்ற பெயர்களே காணப்படுகின்றன. முல்லைப்பாட்டின் மூன்றாம் அடியிலே மால் என்ற சொல்லும், மதுரைக்காஞ்சியில் மாயோன் என்ற சொல்லும் காணப்படுகின்றன. ஆலமார் கடவுள் எனப் புறநானூற்றிலும், வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை நீர்செல நிமிர்ந்த மாஅல் என முல்லைப்பாட்டிலும் திருமால் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இவர் நான்கு கைகளை உடையவர். சங்கு, சக்கரம், உடைவாள், கதை, வில் ஆகியவற்றைத் தாங்கியிருப்பவர். இவர் தாங்கியுள்ள சங்கின்பெயர் பாஞ்சஜன்யம். உடைவாளின் பெயர் நந்தகம். கதாயுதத்தின்பெயர் கௌமேதகம். வில்லின்பெயர் சார்ங்கம். இவரது மார்பிலே ஒரு மறு உண்டு. அதன் பெயர் ஸ்ரீ வத்சம். கழுத்திலே கௌஸ்துபம் என்ற ஆரம் அழகுடன் ஒளிரும். நீலநிறமேனி கொண்டவர். இடுப்பிலே பீதாம்பரம் என்று கூறப்படும் மஞ்சள் நிற ஆடை காணப்படும். இவருடைய கைகள், கால்பாதங்கள், கண்கள் ஆகியன தாமரை மலர்போல் அமைந்திருக்கும்.

இவ்வாறான எழில்மிகு திருக்கோலத்திலே ஆலயங்களிலே, திருமாலை எழுந்தருளச் செய்திருப்பார்கள். சில கோவில்களிலே ஆதிசேடன் என்று கூறப்படுகின்ற பாம்பின்மேல் படுத்துக்கிடப்பதுபோன்ற நிலையிலே, திருமால் எழுந்தருளியிருப்பார். இந்தநிலையைக் கிடந்தகோலம் என்று கூறுவர். பாற்கடலிலே இவ்வாறான திருக்கோலத்திலேயே ஆதிசேடன் என்ற பாம்பின்மேல் திருமால் சயனித்திருப்பதாகப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. இவ்வாறான கிடந்த நிலையிலே, காக்குங்கடவுளாகிய திருமால் யோகநித்திரை செய்வதாகக் கூறுவர். உலகிலுள்ள உயிர்களைக் காக்கும் அருள்நிலையிலேயே இவ்வாறான யோகநித்திரை இடம்பெறுகின்றது.

சில இடங்களிலே தலைக்குமேல் குடைபோல ஆதிசேடன் படமெடுத்திருக்க, அவனது உடலையே சிம்மாசனமாகக் கொண்டு, அமர்ந்திருக்கும் கோலத்திலே திருமால் காணப்படுவார். இவ்வாறான நிலையை இருந்தகோலம் என்பர். சில இடங்களிலே திருமால் நிற்பதுபோலத் தோன்றுவார். இந்த நிலையை நின்றநிலை எனறு கூறுவர். ஸ்ரீதேவியையும், பூதேவி எனப்படும் திருமகளையும், திருமாலின் தேவியராகக் கொள்வர்.

இவ்வாறான பல நிலையிலே காக்குங்கடவுளாகிய திருமாலை, மகா விஷ்ணு என்ற பெயரோடு ஆலயங்களை அமைத்து வழிபடும் வழக்கு ஈழமெங்கும் காணப்படுகின்றது.

சைவசெறி தழைத்தோங்கி வளர்ந்துவரும் ஈழத்திலும் சைவமக்கள் பெரும்பாலாக வசிக்கும் இடங்களிலும், சிவாகமம்கூறும் மரபை அடிப்படையாகக் கொண்டு, தனி வைணவத்தலங்களும், பாஞ்சராத்திர ஆகமமுறைகளைத் தழுவி நிறுவப்பட்டுள்ளன. அதே முறைக்கமையவே வழிபாடுகளையும், விஷ்ணு ஆலயங்களிலே நடத்தி வருகின்றனர்.

மட்டக்களப்புப்பிரதேசத்தில் வந்தாறுமூலை, திமிலதீவு, குருக்கள்மடம், களுதாவளை, கல்லடி, காரைதீவு, பழுகாமம், தம்பிலுவில் போன்ற இடங்களிலுள்ள விஷ்ணுகோவில்களில் திருமால்வழிபாடு சிறப்பாக, முறைப்படி நடைபெற்றுவருகின்றது. இவ்வாறான ஆலயங்களுள் வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயமும் சிறப்புடையதாகக் காணப்படுகின்றது.

*வளரும்...*

# இலங்கையில் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிறப்பாக இடம் பெற்ற சிவராத்திரி நிகழ்வு

**வரலாற்று சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான மகா சிவராத்திரி நிகழ்வு நேற்று வியாழக்கிழமை(11) இடம் பெற்றவரும் நிலையில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.**

**நாட்டில் கொரோனா பரவல் அதிகரித்து செல்லும் நிலையில் சுகாதார நடை முறைகளுக்கு அமைவாக மஹா சிவராத்திரி நிகழ்வுகள் இடம் பெற்றது.**

**பொலிஸார்,இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புகளுக்கு மத்தியில் கடுமையான சுகாதார நடை முறைகளுடன் சிவராத்திரி நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, ஆறு ஜாம பூஜைகளும் இடம் பெற்றது.**

**அதே நேரத்தில் இராணுவம் பொலிஸ் மற்றும் விசேட அதிரடி படையினரின் கண்கானிப்பின் கீழ் மஹா சிவராத்திரி பூஜைகள் இடம் பெற்து.**

**பாலாவி தீர்த்த கரையில் நீராடுவதும் தீர்த்தம் எடுத்து செல்வதும் பாதுகாப்பு காரணங்களால் தடை செய்யப்பட்டது.**

**சிவராத்திரி நிகழ்வுகளை முன்னிட்டு திருக்கேதீஸ்வர திருப்பணி சபையின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட இந்து கலாச்சார நிகழ்வுகள் அறநெறி சொற்பொழிவு நிகழ்வுகளும் இடம் பெற்றது.**

**சுகாதார துறையினர் கொரோனா தொடர்பில் சுகாதார நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.**
**(மன்னார் நிருபர்)**







# BEST INDIAN ASTROLOGER & PSYCHIC

# Pandit: VEERANANDA

காசியில் இருந்து வருகை தந்துள்ளார்

31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்ப்பவர்

உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்




**MOST POWERFUL SPIRITUALIST**

Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses



- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். புகைப்படம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

## Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான்
- அதிகரிக்க – குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான
- மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்கு‘டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உ‘டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

எந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர

**ஆயுர்வேத சிகிச்சை**

## Call For Appoinment: 647-858-3355

**1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2**

**Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )**

# அன்பின் தொனி - 603

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தராகிய நீரோ என்றென்றைக்கும் இருக்கிறீர்**

கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக்கேளும், என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக. என் ஆபத்துநாளிலே உமது முகத்தை எனக்கு மறை-யாதேயும், உமது செவியை என்னிடத்தில் சாயும். நான் கூப்பிடுகிற நாளிலே எனக்குத் தீவிரமாய் உத்தரவு அருளிச்செய்யும். என் நாட்கள் புகையைப்போல் ஒழிந்தது. என் எலும்புகள் ஒரு கொள்ளியைப் போல் எரியுண்டது. என் இருதயம் புல்லைப்போல் வெட்டுண்டு உலர்ந்தது, என் போஜனத்தைப் புசிக்க மறந்தேன். என் பெருமூச்சின் சத்தத்தினால், என் எலும்புகள் என் மாம்சத்தோடு ஒட்டிக்கொள்ளுகிறது. வனாந்தர நாரைக்கு ஒப்பானேன், பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப்போலானேன். நான் நித்திரையில்லாமல் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப்போல் இருக்கிறேன். நாடோ-றும் என் சத்துருக்கள் என்னை நிந்திக்கிறார்கள், என்மேல் மூர்க்கவெறி கொண்டவர்கள் எனக்கு விரோதமாய்ச் சாபம் இடுகிறார்கள். நீர் என்னை உயரத் தூக்கி, தாழத்தள்ளினீர், உமது சினத்திற்கும் கடுங்கோபத்திற்கும் உள்ளானேன். ஆதலால் நான் சாம்பலை அப்பமாகப் புசித்து, என் பானங்களைக் கண்ணீ ரோடே கலக்கிறேன். என் நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப்போலிருக்கிறது, புல்லைப்போல் உலர்ந்துபோகிறேன். கர்த்த ராகிய நீரோ என்றென்றைக்கும் இருக்கிறீர், உம்முடைய பேர்பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும். தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர், அதற்குத் தயைசெய்யுங்காலமும், அதற்காகக் குறித்தநேரமும் வந்தது. உம்முடைய ஊழியக்காரர் அதின் கல்லுகள்மேல் வாஞ்சைவைத்து, அதின் மண்ணுக்குப் பரிதபிக்கிறார்கள். கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார். திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார். அப்பொழுது ஜாதிகள் கர்த்தருடைய நாமத்துக்கும், பூமியிலுள்ள ராஜாக்களெல்லாரும் உம்முடைய மகிமைக்கும் பயப்படுவார்கள். பின்சந்ததிக்காக இது எழுதப்படும், சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும். கர்த்தர் கட்டுண்டவர்களின் பெருமூச்சைக் கேட்கவும், கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை விடுதலையாக்கவும், தம்முடைய உயர்ந்த பரிசுத்த ஸ்தலத்திலிருந்துபார்த்து, வானங்களிலிருந்து பூமியின்மேல் கண்ணோக்கமானார். கர்த்தருக்கு ஆராதனைசெய்ய, ஜனங்களும் ராஜ்யங்களும் ஏகமாய்க் கூடிக்கொள்ளுகையில், சீயோ-னில் கர்த்தருடைய நாமத்தையும், எருசலேமில் அவருடைய துதியையும் பிரஸ்தாபப்படுத்துவார்கள். வழியிலே என் பெலனை அவர் ஒடுக்கி, என் நாட்களைக் குறுகப்பண்ணினார். அப்பொழுது நான்: என் தேவனே, பாதி வய-தில் என்னை எடுத்துக்கொள்ளாதேயும், உம்முடைய வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும். நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது. அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர், அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம், அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறாதவராயிருக்கிறீர், உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை. உமது அடியாரின் பிள்ளைகள் தாபரித்திருப்பார்கள், அவர்கள் சந்ததி உமக்கு முன்பாக நிலைபெற்றிருக்கும் என்று சொன்னேன். **- சங்கீதம் 102: 1-28**

**கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.**

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களை யெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிரு-பையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயை-த் திருப்தியாக்குகிறார், கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது. ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார். அவர் தமது வழிகளை மோசேக்கும், தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப்பண்ணினார். கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார், என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவுகூருகிறார். மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது, வெ-ளியின் புஷ்ப த்தைப்போல் பூக்கிறான். காற்று அதின் மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று அது இருந்த இடமும் இனி அதை அறியாது. கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடை-ய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. அவருடைய உடன்படிக்கையைக்கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது. கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார், அவருடை-டய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது. கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தருக்குப் பிரியமானதைச்செய்து, அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தர் ஆளுகிற எவ்விடங்களிலுமுள்ள அவருடைய சகல கிரியைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள், என் ஆத்து மாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. **- சங்கீதம் 103: 1-22**

**கர்த்தாவே, ஜனங்களுக்குள்ளே உம்மைத்துதிப்பேன்,**

தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, நான் பாடிக்கீர்த்தனம் பண்ணுவேன், என் மகிமையும் பாடும். வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள், நான் அதிகாலையில் விழிப்பேன். கர்த்தாவே, ஜனங்களுக்குள்ளே உம்மைத்துதிப்பேன், ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன். உமது கிருபை வானங்களுக்கு மேலாகவும், உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது. தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்திரும், உமது மகிமை பூமிய னைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக. உமது பிரியர் விடுவிக்கப்படும் பொருட்டு, உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். **- சங்கீதம் 108: 1-6**


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com











25 வெள்ளி விழா 2021

# உதயன் UTHAYAN






உதயம் 1301 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 12, 2021




## கனடாவில் மீண்டும் நீதி கோரி நெடுந்தூரம் நடக்கும் ஒரு போராட்டப் பயணம்

இங்கிலாந்தில் அன்னை அம்பிகை அவர்களின் உணவுத்தவிர்பு போராட்டத்திற்கு ஆதரவான நீதிகோரி நடைப்பயணம் – சிங்கள இனவெறி அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துவது உள்ளடங்கிய 4 அம்சக் கோரிக்கையை முன் வைத்து பிரித்தானியாவில் சாகும் வரை உணவுத்தவிர்ப்பு போராட்டத்தை தொடரும் அம்மா அம்பிகை செல்வகுமார் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் பொருட்டு கனடாத் தமிழ் மக்கள் சார்பாக வரும் ஞாயிற்றுக்கிழமை (14-03-2021) காலை 9.00 மணிக்கு ஆரம்பம். ஒன்றாரியோவில் உள்ள நகரமான ***Barrie.***

நகரசபை மண்டபவாயிலில், 70 கோலியர் வீதியில் இருந்து ஆரம்பித்து **Yonge Street** தெற்கு நோக்கு நடந்து இவ் வழியாக **Toronto** நகரில் அமைந்துள்ள ஐ.நா சபை காரியாலயம், **200 Bay Street,** இந்திய துணைத் தூதரகம், **365 Bloor St, Toronto** பிரித்தானிய தூதுவராலயம், **777 Bay St Toronto, Ontario** பாராளுமன்ற முன்றலில் வியாழக்கிழமை 18-03-2021 அன்று நிறைவு பெறும். இறுதியில் நான்கு இடங்களிலும் மகஜர் கையளிக்கப்படும். (உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

## கனடா – ரொரன்ரோ மனிய நேயக் குரல் அமைப்பின் ஆதரவை நாடி இலங்கையிலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் வேண்டுகோள்கள்

கனடாவில் இயங்கிவரும் ரொரன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் அனுசரனையில் இலங்கையின் வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் பல உதவித் திட்டங்கள் கடந்த 2020ம் ஆண்டும் தற்போதைய 2021ம் ஆண்டிலும் பல மனித நேயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான பல திட்டங்களுக்கு கனடாவில், ரொரன்ரொ மனித நேயக்குரல் அமைப்பின் சார்பாக விடுக்கப்பெற்ற வேண்டுகோளை ஏற்று அவ்வப்போது பல வர்த்தக அன்பர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்டவர்கள் நிதி அன்பளிப்புக்களை வழங்கிய வண்ணம் உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் எமது இயக்குனர் சபை நன்றி தெரிவிக்கின்றது. அவர்களைப் போன்று எமது அமைப்போடு தொடர்பு கொண்டு மேலும் நற்பணிகளுக்கு உதவும் எண்ணம் கொண்டவர்கள் பின்வரும் இயக்குனர் சபை உறுப்பினர்களோடு தொடர்பு கொள்ளவும்

சங்கர் நல்லதம்பி:- 416 270 4343
மரியாம்பிள்ளை மரியராசா:- 416 669 6437
ஆர். என். லோகேந்திரலிங்கம்:- 416 732 1608

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே சிவராத்திரியன்று திருக்கேதீச்சரத்திற்கு விஜயம் செய்தார்



இலங்கையில் பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி திருவிழா மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இந்த நிலையில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தகோபால் பாக்லே மஹா சிவராத்திரி நாளான நேற்று காலையில் மன்னார் திருக்கேதீஸ்வர திருத்தலத்திற்கு வருகை தந்து இந்திய அரசின் உதவியுடன் நடைபெற்று வரும் கருங்கல் சிற்ப வேலைகளையும் இதர வேலைகளையும் பார்வையிட்டதோடு வழிபாடுகளிலும் கலந்து கொண்டார். அவரை தேவஸ்த்தானத்தின் முக்கிய பிரமுகர்கள் வரவேற்று காளாஞ்சி வழங்கிக் கௌரவித்தனர்.

(மன்னார் நிருபர்)

## ஸ்காபுறோவில் கென்னடி – எக்ளிங்கடன் சந்திப்பில் அமைந்துள்ள சங்கர் அன் கோ நிறுவனம் வழங்கும் பரிசுப் பொருட்கள்




கென்னடி - எக்ளிங்கடன் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள சங்கர் அன் கோ நிறுவனத்தில் மிக்சி, கிரைன்டர்கள் றைஸ் குக்கர்கள் பிரசர் குக்கர்கள் ஆகியன விற்பனைக்கு போதிய கையிருப்பு உள்ளன. அவற்றுள் மிக்சி அல்லது கிறைண்டர் வாங்குபவர்களுக்கு இங்கே படத்தில் காணப்படும் அப்பச் சட்டி, குழிப்பலகார அச்சு மற்றும் வாசனைத் திரவியங்கள் வைக்கும் வசதியான மூடியோடு கூடிய கிண்ணம் போன்ற சமையலறை உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும். இந்தச் சலுகை இரண்டு வாரங்களுக்கு மட்டுமே என்று நிர்வாகத்தினர் அறியத்தந்துள்ளனர்.

-தொலைபேசி எண்கள்: 416 759 5100 - 416 759 4916

## கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் கோவிட் – 19 தடுப்பூசித் திட்டம் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது என்கிறார் முதல்வர் டக் போர்ட்

ஒன்றாறியோவின் தடுப்பூசி வழங்கலின் முதற் கட்டம் சிறப்பாக நடைபெற்று வருவதுடன், 820,000 தடுப்பூசி மருந்துகள் பல பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் தொடர்பாக பல்வேறு இடங்களில் எடுக்கப்பட்டு வரும் துரிய நடவடிக்கைகளை நேரடியாகச் சென்று கவனித்து வருகின்றார்



ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக்போர்ட் அவர்கள். அவரோடு சம்பந்தப்பட்ட தொகுதிகளின் மாகாண சபை உறுப்பினர்களும் சென்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)